Vol.6, Issue 11 | Annual Subscription ₹ 480
Rotary News, April 2024, Chennai

@NewsRotary
/RotaryNewsIndia

Rotary

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org

ஏப்ரல் 2024



ADVT.





CREATE HOPE in the WORLD




Rotary
A Project by
Rotary Club of Virudhunagar
District - 3212

# Project Punch is now a National Project

## Project Punch- Spoken English Programme For Student Teachers



A 3-Day Spoken English Programme

75 PLUS Programmes in Two years

"The limits of my language are the limits of my world"
**Ludwig Wittgenstein**

The participants are trained and motivated to speak in English fluently and flawlessly.

As on 18 March, 2024
No. of Occurrences
**78**
No. of Beneficiaries
**8474**

Do you wish to conduct **Project Punch?**
Contact:
Project Chairman
Rtn. A.Shyamraj
97502 07464



PROJECT PUNCH

## What is Project Punch?

Project Punch is a 3-day Spoken English Training Programme by Rotary Club of Virudhunagar for student teachers (B.Ed. students) to improve their Communicative English and Public Speaking skills.

Project Punch is now a National Project. We serve beyond RID 3212 and Tamil Nadu. Recently, our team of Trainers travelled to Maharashtra and delivered 2 programmes of Project Punch to the students and the teachers of Eklaya adivasi bhatakya vimukta jati-jamati va magasvargiya sevabhavi sanstha, Manchi Hill (Maharashtra).

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Apr 24/ Rotary-1

# உள்ளே


**14**
தடைகள்,
சவால்களைக் கடந்து
சாதனை புரிந்த 7
பெண் ஆளுநர்கள்!

**24**
சிறந்த உலகத்திற்காக
TRF-க்கு தொடர்ந்து
கொடுங்கள்!

**30**
மாவட்ட
தலைவர்களுக்கு
பயிற்சி பட்டறை

**33**
ஹைதராபாதில், பிறந்த
குழந்தைகளுக்கான
ICUவை மேம்படுத்தியது
ரோட்டரி

**34**
இலங்கையில் உள்வரும்
சங்கத்தலைவர்கள்
நேர்மறையான
தாக்கத்திற்கு
தயாராகிறார்கள்

**38**
மைசூரில் உள்ள
அங்கன்வாடிகளை
சீரமைத்து, அழகுபடுத்துதல்

**42**
வித்தியாசமான
குடியரசு தினவிழா

**46**
செவ்வாய்க்கிரகம்,
பன்முகத்தன்மை
மற்றும் ஸ்டெம் கல்வி

**48**
ஆட்டிஸம்
கிளினிக்கிற்கு உதவும்
RC ஜம்மு ஸ்டார்ஸ்

**52**
கிராமப்புற
மாணவர்களுக்கு
ஆங்கிலப் பயிற்சி

**54**
மேற்குவங்கத்தில்
புதிய கட்டடத்தில்
கண் மருத்துவமனை

**60**
சுற்றுச்சூழலுக்கு
உதவ ரோட்டரி
சங்கங்கள்
என்ன செய்யலாம்

**66**
பெரியவர்களை
எழுத்தறிவு
பெறச் செய்யும்
இன்டராக்டர்கள்

**68**
மாற்றுத்திறனாளிகளுக்கான
கொண்டாட்டங்கள்




## ரோட்ராக்ட் மற்றும் ரோட்டரி அமைதி பணிகளை கொண்டாடுவோம்




*PRIP கோர்டன் மெக்கினலி மற்றும் பிற மூத்த ரோட்டேரியர்கள் அவர்களின் இலங்கை விஜயத்தின் போது ரோட்ராக்டர்கள் மற்றும் இன்ட்ராக்டர்களுடன் எடுத்துக் கொண்ட அழகிய புகைப்படத்தை மார்ச் இதழில் அட்டைப்படமாகப் பார்த்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன். மறைந்த ஃபாலி நரிமன் மற்றும் பல மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த ரேடியோ சிலோனின் பினாகா கீத் மாலா புகழ் அமீன் சயானி ஆகியோருக்கான ஆசிரியர் குறிப்பு ஒரு பொருத்தமான அஞ்சலி.*

*RID அனிருதா ராய்சௌத்ரி ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்க WASH திட்டங்களில் கவனம் செலுத்தியுள்ளார். TRF அறங்காவலர் தலைவரான பேரி ரஸ்ஸின் தனது செய்தியில் WASH மற்றும் ரோட்ராக்ட் பற்றி கூறுகிறார் மற்றும் அவரது துணைத் தலைவர் பரத் பாண்டியா TRF எதிர்கால சந்ததியினருக்கான முதலீடு என்று சரியாகக் கூறியுள்ளார். புற்று நோயை எதிர்த்துப் போராடும் இலங்கை ரோட்டேரியர்கள் என்ற கட்டுரை தகவல் நிறைந்ததாக இருந்தது. ஜெர்மானிய மாணவனுக்கு கேரளா மிகவும் பிடித்தது என்று கேட்டதில் மகிழ்ச்சி. நரிமன் மற்றும் அமீன் சயானி ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகளுக்கான அஞ்சலிகள் படிக்க மகிழ்ச்சியாக இருந்தது.*

*பிலிப் முலப்போன் M T*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*ரோட்டரி பீஸ் பெல்லோஷிப்கள் மூலம் ரோட்டரி எப்படி ஒரு தலைமுறை தலைவர் களை உருவாக்குகிறது என்பதை RI தலைவர் மெக்கினலியின் செய்தி காட்டுகிறது. பிரபல வழக்கறிஞர் ஃபாலி நாரிமன் மற்றும் ரேடியோ சிலோனில் பினாகா கீத்மாலா நிகழ்ச்சியின் மகிழ்ச்சி கரமான தொகுப்பாளரான அமீன் சயானி ஆகியோருக்கு ஆசிரியர் குறிப்பு பொருத்தமான அஞ்சலி செலுத்தியது. RI இயக்குனர் ராய்சௌத்ரி மழை நீர் சேகரிப்பு, நதி மறுசீரமைப்பு மற்றும் குளம் தோண்டுதல் ஆகியவற்றின் மேல் கவனத்தை ஈர்த்துள்ளார். இந்த திட்டங்களை பெங்களூரு ரோட்டேரியர்கள் தங்கள் நகரத்தில் நிலவும் கடுமையான தண்ணீர் பஞ்சத்தை தீர்க்க செயல்படுத்த வேண்டும். TRF அறங்காவலர் தலைவர் பேரி ரஸ்ஸின் பரிந்துரைத்தபடி, அவர்கள் தண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களை மேற்கொள்ள உலகளாவிய மானியங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.*

*K M K மூர்த்தி, RC செகந்திராபாத் — D 3150*

ஸ்ரீராம் பஞ்சு எழுதிய ''ஃபாலி நாரிமனின் வீரியத்தையோ தீவிரத்தையோ வயது குறைக்கவில்லை'' என்ற கட்டுரை கிட்டத்தட்ட 'குறையற்ற' வழக்கறிஞருக்கு ஒரு பொருத்தமான அஞ்சலி. 1984ஆம் ஆண்டு போபால் விஷவாயு வழக்கில் யூனியன் கார்பைடு சார்பாக வழக்கறிஞராக அவர் பணியாற்றியதில் அவருக்கு வருத்தம் இருந்தது என்று நான் நம்புகிறேன். சமீபத்தில் காலமான 'இரண்டு மென்மையான பெரியவர்களுக்கு' இடமளித்ததற்கு வாழ்த்துக்கள்.

ரெஜினால்ட் வெஸ்லி
RC மைசூர் வெஸ்ட் — D 3181

நல்ல இதழ்! ரோட்டரி திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் தவிர கூடுதலாக பல்வேறு தலைப்புகளில் ஏராளமான கட்டுரைகள் இருந்தன. சந்தியா ராவ் எழுதிய வர்ட்ஸ்வேல்ட் கட்டுரை நல்ல வாசிப்பாக இருந்தது. விமர்சனம் செய்யப்பட்ட புத்தகங்களின் வெளியீட்டாளரின் பெயரும் விலையும் கொடுக்கப்பட்டால் உதவியாக இருக்கும்.

ராதேஷ்யாம் மோடி
RC அகோலா — D 3030

### ஒரு முன்மாதிரியான ரயில் மனிதர்

தன்னம்பிக்கையுடன், மக்கள் மீதும், சக ஊழியர்கள் மீதும், நீங்கள் பணிபுரியும் அமைப்பு மீதும் அன்பு கொண்டு உழைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு வந்தே பாரத் ரயில் வடிவமைப்பாளர் சுதன்ஷு மணியின் உதாரணம்.

இந்தியர்களால் இந்தியர்களுக்காக இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட முற்றிலும் உள்நாட்டு முயற்சி என்பதால் பயணிகள் மற்றும் அனைத்து தரப்பு மக்களிடமிருந்தும் பாராட்டுக்கள் கிடைத்தது.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

''வந்தே பாரத்தின் வரலாற்றை சொல்லும் அதன் கர்த்தா'' என்ற கட்டுரையில் உள்ள கருத்துகளுடன் நான் முழுமையாக உடன்படுகிறேன், அதுவும் அரசாங்க வேலை அமைப்பில். துணிச்சலான சுதன்சு மணியை நாம் போற்ற வேண்டும்.

M பழனியப்பன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

எனக்கு இதழ் கிடைத்தவுடன், நான் படிக்கும் முதல் இரண்டு கட்டுரைகள் ரஷீதா பகத்தின் ஆசிரியர் குறிப்பு மற்றும் TCA சீனிவாச ராகவனின் நகைச்சுவையான LBW பத்தியாகும். முக்கியமான நிகழ்வுகளின்

சுருக்கமான தொகுப்பு சமநிலையுடன், தகவல் நிறைந்தாகவும் மற்றும் ஊக்கமளிக்கும் வகையிலும் இருக்கிறது. ராகவனின் நகைச்சுவை உணர்வு அதிநவீனமானது, மேலும் அவர் அன்றாட வாழ்க்கை சம்பவங்களில் நகைச்சுவையான பக்கத்தைப் பார்க்கிறார். இதழின் மற்ற கட்டுரைகளைப் படிக்க இது ஒரு நல்ல தொடக்கமாகும்.

H R சீத்தாராம், RC பெங்களூர்
இந்திராநகர் — D 3192

“ராணுவ வீரர்களுக்கு தீபாவளி இனிப்புகள்” (பிப்ரவரி இதழ்) என்ற கட்டுரையில் RC சண்டிகர் 2017-ம் ஆண்டு முதல் தீபாவளிப் பரிசாக இனிப்புப் பெட்டிகளை நமது எல்லைகளைக் காக்கும் வீரர்களுக்கு அனுப்புவதை படித்து மகிழ்ச்சியடைந்தேன். ஒரு ஓய்வுபெற்ற ராணுவ வீரராக, இச்செயலுக்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். ஒவ்வொரு தீபாவளியன்றும் நமது ராணுவ வீரர்களுக்கு இனிப்புப் பெட்டிகளை ரோட்டரி கொடுப்பது, ஓய்வுபெற்ற மற்றும் பணியில் இருக்கும் வீரர்கள் அனைவரும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்த செய்கை உறைபனி வெப்பநிலை மற்றும் 20,000 அடிக்கு மேல் உயரத்தில் உள்ள கடினமான சூழ்நிலைகளில் பணியில் இருக்கும் வீரர்களுக்கு மன உறுதியை அளிக்கிறது. தேசத்திற்காக உயிர் தியாகம் செய்யும் நமது ராணுவ வீரர்களுக்கு இதுபோன்ற திட்டங்களைச் செய்ய மற்ற ரோட்டரி சங்கங்களுக்கும் இது உந்துதலாக அமைய வேண்டும். இந்த ஆண்டு முதல் விமானப்படை மற்றும் கடற்படை வீரர்களுக்கு தீபாவளி இனிப்புகளை அனுப்பி இந்த திட்டத்தை விரிவுபடுத்த சங்கம் திட்டமிட்டுள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

கர்னல் (ஓய்வு)
விஜய்குமார், RC ஆலப்பி
கிரேட்டர் — D 3211

ரோட்டரி நியூஸ் அச்சு பிரதி எப்போதும் கவர்ச்சிகரமானதாகவும், படிக்கக்கூடியதாகவும் மற்றும் படங்கள் ஊக்கமளிப்பதாக இருக்கும் என கடந்த இதழில் RC கொல்கத்தா யுனிவர்ஸின் சௌமித்ரா சக்ரவர்த்தி மிகவும் சரியாகச் சொல்லியிருக்கிறார். எந்த ரோட்டரி பத்திரிக்கையையும் சந்தா செலுத்திபெறாத ரோட்டரி சங்கங்கள் தடை செய்யப்படும் என்ற RI விதிகளைப் பற்றி படித்தேன், இது நல்லது. ரோட்டரி உலகில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி ஒவ்வொரு மாதமும் அறிந்துகொள்ள பத்திரிக்கையை கட்டாயமாக்குவது சங்கங்களுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் பயனளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

பியூஷ் தோஷி
RC பேலூர் — D 3291

## என் வாழ்க்கையை வடிவமைத்த ரோட்டரி

நான் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாக RC ஷில்லாங்கில் உறுப்பினராக இருக்கிறேன். எனது சங்கத்தில் பல ஏற்ற தாழ்வுகளை நான் கண்டிருக்கிறேன், ரோட்டரி நியூஸ் அதன் ஆரம்ப நாட்களில் மிகக் குறைவான ரோட்டரி கட்டுரைகளுடன் சில பக்கங்களை மட்டுமே கொண்டிருந்தது என் நினைவில் தெளிவாக உள்ளது. எனவே, மிகக் குறைந்த இந்திய ரோட்டரி திட்டங்களைக் கொண்டிருந்த எவன்ஸ்டனில் இருந்து வெளிவரும் தி ரோட்டேரியன் இதழை நான் பெற்று வந்தேன். இது பெரும்பாலும் மற்ற நாடுகளில் ரோட்டரி செயல்பாடு பற்றிய கட்டுரைகளைக் கொண்டிருந்தது.

இப்போது, இந்தியாவில் ரோட்டரி இயக்கம் வெகுதூரம் பரவி TRFக்கு பெரிய பங்களிப்பை அளித்து வருகிறது. மேம்படுத்தப் பட்ட ரோட்டரி நியூஸ் மூலம், இந்தியாவிலும் வெளிநாட்டிலும் செய்யப்படும் திட்டங்கள் மற்றும் ரோட்டரி கட்டுரைகளை இப்போது படிக்கிறேன்.

ரோட்டரி எனது மதிப்புகளை வளப்படுத்தியுள்ளது, எனது அறிவை மேம்படுத்தியுள்ளது மற்றும் நான் என்றென்றும் போற்றும் பல விஷயங்களை எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளது.

S L சிங்கானியா
RC ஷில்லாங் — D 3240

**அட்டையில்:**
**மகளிர் மாவட்ட ஆட்சியர்கள் - இடமிருந்து:** B C *கீதா* (3182), *ரிது குரோவர்* (3040), *ஸ்வாதி ஹெர்கல்* (3132), *மஞ்சு பாட்கே* (3131). *அமர்ந்திருப்போர் இடமிருந்து: ஆனந்த ஜோதி* (3000), *ஆஷா வேணுகோபால்* (3030) *மற்றும் ஜெயஸ்ரீ மொகந்தி* (3262).

**புகைப்படம்:** ரஷீதா பகத்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...


கெவின் செர்னா

## மாற்றம் நம்மிடம்தான் இருக்கிறது!

அமைதிக்காக குரல் கொடுத்த காலங்கள் உண்டு. மத்திய கிழக்கு பல ஆண்டுகளாக கொந்தளிப்பான நிலையில் உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ஐரோப்பாவில் உக்ரைனில் நடந்து வரும் போர் மிகப்பெரியது. சூடான் மற்றும் மத்திய ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் ஆயுத மோதல்கள் நடந்து வருகின்றன. ஏறக்குறைய ஒவ்வொரு கண்டமும் ஒரு பெரிய ஆயுதமோதலை எதிர்கொண்டு வருகிறது.

அமைதியை முன்னெடுத்துச் செல்வதில் ரோட்டரிக்கு முக்கிய பங்கு உண்டு. போரை நடத்த விரும்புபவர்களைப் போலவே, ரோட்டரியும் அமைதியை நோக்கிச் செயல்பட வேண்டும் என நான் அடிக்கடி கூறுவதுண்டு. ஒருவருக்கொருவர் அமைதியை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் முன்மாதிரியாக இருப்பது நம்கையில்தான் உள்ளது.

நாம் உலகிற்கு ஒரு நம்பிக்கை ஒளியாக இருக்க விரும்பினால், நாம் ஒருவருக்கு ஒருவர் அன்பாக, கனிவாக இருக்க தொடங்குவோம். மனதை புண்படுத்தும், அவநம்பிக்கையை ஏற்படுத்தும் வார்த்தைகளை பேசுவதற்கு பதிலாக ஒரு புரிதலுடன், பயனுள்ள வகையில் ஒருவருக்கு ஒருவர் உதவிகரமாக இருப்போம்.

மரியாதைக்குரிய மார்டின் லூதர் கிங் ஜூனியர், கடந்த 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி படுகொலை செய்யப் பட்ட நாளன்று அமெரிக்க செனட்டர் ராபர்ட் கென்னடி ஆற்றிய உரை எனக்கு நினைவுக்கு வருகிறது. அப்போது கென்னடி, ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் அதிகம் வசிக்கும் இண்டியானா போலீஸில் மக்களிடையே பேசினார். ஆனால், மார்டின் லூதர் கிங் கொல்லப்பட்ட செய்தி அப்போது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

மார்டின் லூதர் கிங் கொல்லப்பட்ட செய்தியை அவர் பகிர்ந்துகொண்டார். நீதியையும் அமைதியையும் நிலை நாட்டுவதற்காக அவர் மேற்கொண்ட அரும்பணிகளை பாராட்டினார் அதன் பிறகு, துயரத்தில் பொங்கியெழுந்த மக்களிடையே அவர் பேசினார். இந்த துயரச் சம்பவத்தைக் கேட்டதும் கறுப்பர்களாகிய உங்களில் பலருக்கு வெள்ளையர்கள் மீது வெறுப்பும், அவநம்பிக்கையும்தான் ஏற்படும். உங்களுக்கு இருக்கும் அதே உணர்வுதான் எனது இதயத்திலும் இருக்கிறது என்பதை மட்டும் என்னால் சொல்ல முடியும். எனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப் பட்ட போதும் இதே உணர்வுதான் எனக்கு இருந்தது என்று குறிப்பிட்டார். அதிபர் ஜான் F கென்னடி படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக அவர் முதல் முறையாக பொது வெளியில் பேசி னார். அன்றிரவு அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் வன்முறைகள் வெடித்த போதிலும், இண்டியானாபோலீஸில் எதுவும் நடக்கவில்லை.

நெருக்கடியான மற்றும் விரக்தியான நேரங்களில் நமக்கு தேவை ஆறுதல்தான். அன்பு அல்லது பரிவு காட்டுதல்தான் அமைதிக்கான சக்திவாய்ந்த கருவியாகும். உலகில் நம்பிக்கையை உருவாக்க வேண்டுமானால், அதற்கு இன்றியமையாத முதல் படி புத்திசாலித்தனமான, துணிச்சலான, பணிவான நடவடிக்கைகள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**கோர்டன் மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 36,902 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 10,734 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 15,449 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 13,362 |
| ரோட்டரியினர் | : | 1,177,787 |
| ரோட்டராக்டர்கள் | : | 177,145 |
| இன்டராக்டர்கள் | : | 355,327 |

*As on March 19, 2024*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on March 1, 2024

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,021 | 6.01 | 73 | 503 | 34 | 254 |
| 2982 | 85 | 3,815 | 6.08 | 43 | 898 | 95 | 183 |
| 3000 | 141 | 5,999 | 12.07 | 121 | 1,797 | 255 | 216 |
| 3011 | 137 | 5,140 | 30.04 | 89 | 2,432 | 157 | 38 |
| 3012 | 167 | 4,189 | 24.59 | 77 | 1,116 | 100 | 61 |
| 3020 | 81 | 4,758 | 7.55 | 46 | 844 | 121 | 351 |
| 3030 | 101 | 5,748 | 16.60 | 51 | 824 | 521 | 385 |
| 3040 | 111 | 2,430 | 14.65 | 41 | 807 | 79 | 213 |
| 3053 | 72 | 2,900 | 16.62 | 27 | 414 | 42 | 131 |
| 3055 | 76 | 3,044 | 12.48 | 70 | 1,084 | 75 | 377 |
| 3056 | 87 | 3,771 | 24.40 | 34 | 462 | 105 | 201 |
| 3060 | 103 | 5,172 | 15.89 | 68 | 2,235 | 63 | 144 |
| 3070 | 119 | 3,281 | 15.82 | 49 | 590 | 52 | 63 |
| 3080 | 108 | 4,282 | 12.52 | 63 | 1,862 | 173 | 124 |
| 3090 | 125 | 2,676 | 6.09 | 21 | 379 | 194 | 166 |
| 3100 | 112 | 2,230 | 10.81 | 13 | 58 | 36 | 151 |
| 3110 | 139 | 3,799 | 11.35 | 18 | 127 | 51 | 109 |
| 3120 | 89 | 3,647 | 15.68 | 45 | 570 | 28 | 55 |
| 3131 | 141 | 5,662 | 31.46 | 124 | 2,981 | 265 | 149 |
| 3132 | 92 | 3,768 | 13.93 | 44 | 650 | 126 | 212 |
| 3141 | 115 | 6,324 | 27.69 | 140 | 5,766 | 176 | 228 |
| 3142 | 107 | 3,863 | 21.25 | 64 | 2,300 | 117 | 96 |
| 3150 | 109 | 4,327 | 13.59 | 156 | 2,008 | 114 | 130 |
| 3160 | 80 | 2,653 | 8.82 | 32 | 258 | 95 | 82 |
| 3170 | 151 | 6,691 | 15.18 | 125 | 1,958 | 199 | 180 |
| 3181 | 87 | 3,686 | 10.58 | 44 | 479 | 94 | 121 |
| 3182 | 86 | 3,700 | 10.59 | 48 | 250 | 107 | 103 |
| 3191 | 93 | 3,521 | 18.38 | 91 | 3,118 | 152 | 35 |
| 3192 | 83 | 3,461 | 21.29 | 86 | 2,347 | 145 | 40 |
| 3201 | 176 | 6,802 | 9.91 | 139 | 2,624 | 104 | 94 |
| 3203 | 95 | 4,944 | 7.26 | 50 | 941 | 189 | 39 |
| 3204 | 78 | 2,549 | 6.94 | 24 | 237 | 17 | 13 |
| 3211 | 161 | 5,214 | 8.44 | 9 | 97 | 20 | 135 |
| 3212 | 124 | 4,672 | 11.37 | 97 | 3,727 | 168 | 153 |
| 3231 | 96 | 3,445 | 6.82 | 39 | 515 | 48 | 417 |
| 3232 | 188 | 6,323 | 20.86 | 129 | 4,843 | 158 | 101 |
| 3240 | 104 | 3,544 | 17.07 | 47 | 792 | 69 | 231 |
| 3250 | 107 | 4,142 | 22.19 | 71 | 990 | 66 | 191 |
| 3261 | 99 | 3,368 | 22.68 | 25 | 260 | 32 | 45 |
| 3262 | 115 | 3,783 | 15.65 | 78 | 772 | 645 | 286 |
| 3291 | 145 | 3,858 | 26.08 | | | 74 | 746 |
| **India Total** | **4,625** | **173,202** | | **2,611** | **54,915** | **5,361** | **7,049** |
| 3220 | 69 | 1,971 | 16.64 | 97 | 4,103 | 84 | 77 |
| 3271 | 110 | 1,524 | 21.39 | 194 | 2,076 | 333 | 28 |
| 0063 (3272) | 132 | 1,416 | 17.73 | 97 | 1,243 | 26 | 49 |
| 0064 (3281) | 332 | 7,364 | 17.72 | 249 | 1,772 | 144 | 213 |
| 0065 (3282) | 179 | 3,545 | 9.82 | 179 | 1,341 | 30 | 49 |
| 3292 | 155 | 5,502 | 18.76 | 185 | 5,385 | 126 | 135 |
| **S Asia Total** | **5,602** | **194,524** | **15.79** | **3,612** | **70,835** | **6,104** | **7,600** |

Source: RI South Asia Office



# பாலின சவால் இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும்

இந்த இதழின் அட்டைப்பட கட்டுரை, இந்த ரோட்டரி ஆண்டில், நமது மண்டலத்தில் 7 பெண் மாவட்ட ஆளுநர்களின் சாதனைகள் பற்றி கவனம் செலுத்துகிறது. மார்ச் மாதத்தில் மேலும் ஒரு சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்ட நிலையில், இரண்டு முக்கிய கேள்விகளுக்கு நாம் பதில்காண முயற்சிப்போம். பெண்களின் பணிச்சூழல் மேம்பட்டிருக்கிறதா? ஒவ்வொரு ஆண்டும் தி எகானமிஸ்ட் பத்திரிகை தடைகளைக் கடந்து வந்தவர்கள் பற்றிய தகவல்களை ஆதாரங்களுடன் வெளியிட்டு வருகிறது. அதே வேளையில் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் நிலைமை என்ன? அங்கு பெண்கள் அலுவலகம் சென்று வேலை செய்ய முடியவில்லை, ஏன் குழந்தைகள்கூட பள்ளிக்குச் செல்ல முடியவில்லை.

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தை குறிக்கும் வகையில் தி எகானமிஸ்ட் பத்திரிகையின் பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான 29 பேர் கொண்ட குழு ஆய்வு செய்து தொழிலாளர்களின் பங்கேற்பு, தாய்மை அடைந்துள்ள பெண்களுக்கு சம்பளத்துடன்கூடிய விடுமுறை, அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட விஷயங்களை ஆய்வு செய்து அட்டவணை வெளியிட்டு வருகிறது. பத்திரிகை வகுத்துள்ள இந்த குழுவில் பெரும்பாலும் பணக்கார நாடுகளே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, ஐஸ்லாந்து, ஸ்வீடன், நார்வே, பின்லாந்து, டென்மார்க், பிரான்ஸ், துருக்கி மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. மன்னிக்கவும். சமீபகாலமாக நம்மை நாம் பெருமை படுத்திக் கொண்டாலும் இந்தியாவின் பெயர் அந்த பட்டியலில் இல்லை.

தடைகளைக் கடந்து சாதனை படைத்தவர்கள் பட்டியலுக்கு வருவோம். 2013-ம் ஆண்டு அந்த பத்திரிகை இந்த முயற்சியைத் தொடங்கியதிலிருந்து மாற்றத்தின் வேகம் பனிப்பாறை போலவே இருந்து வருகிறது. ஆனால், பெரும்பாலான இடங்களில் விஷயங்கள் குறைந்தபட்சம் சரியான திசையை நோக்கி நகர்கின்றன என்பதை பத்திரிகை ஒப்புக்கொள்கிறது. பெண்களுக்கான தொழில்முறை வாய்ப்புகளை ஆண்களுடன் ஒப்பிட்டால் ஐஸ்லாந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. இதை ஊகிக்க எந்த விலையும் இல்லை. இதை அரசியல் தலைமையிலும் நாம் பார்த்துள்ளோம். நோர்டிக் நாடுகள் எப்போதுமே அரசியல், வர்த்தகம், கல்வித்துறைகளில் பெண்களுக்கு சமமான தளத்தை வழங்கி வருகின்றன. இந்நாடுகளின் பெண்கள் அதிகம் மதிக்கப்படுகின்றனர். தடைகளைத் தாண்டி சாதனை படைத்தவர்கள் விஷயத்தில் தென்கொரியா, ஜப்பான் மற்றும் துருக்கி இந்த குறியீட்டில் கீழே உள்ளன. ஆஸ்திரேலியா, போலந்தும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐந்து இடங்கள் முன்னேறியுள்ளன.

ஒருவரின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு கல்விதான் முக்கிய காரணம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆம் மற்றும் இல்லை. பல நாடுகளில் ஆண்களைவிட அதிக பெண்கள் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெறுகிறார்கள். ஆனாலும், தொழிலாளர் என்று வரும்போது அவர்களின் பங்கு குறைவாகவே உள்ளது. தடைகளைக் கடந்து சாதனை படைத்தவர்கள் பட்டியலிலும் இது உண்மைதான். துருக்கி, கிரீஸ் மற்றும் இத்தாலியில் மூன்றில் இரண்டு பங்குக்கும் குறைவான பெண்களே வேலைசெய்கிறார்கள். இதனால் கார்ப்பொரேட் என்னும் ஏணியில் அவர்கள் மெதுவாகவே ஏறமுடிகிறது. இந்த குழுவின் ஆய்வின்படி ஆண்களைவிட பெண்கள் 12 சதவீதம் குறைவாகவே சம்பாதிக்கின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது. ஆனால், ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், முதல் முறையாக, நிறுவனங்களின் இயக்குநர்கள் குழுவில் 33 சதவீதம் பெண்கள் இடம்பெற்றிருப்பதுதான்.

கடந்த 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம், ஐரோப்பிய நாடாளுமன்றம் பாலின சமத்துவத்தை கொண்டு வரும் புதிய சட்டத்தை முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது. 2026 ஆம் ஆண்டுக்குள் கார்ப்பொரேட் நிறுவனங்களின் வாரியங்கள் நிர்வாகம் இல்லாத துறைகளில் 40 சதவீதம் அல்லது நிர்வாகக் குழுவில் 33 சதவீதம் பேர் பெண்களாக இருப்பது கட்டாயம் என்று தெரிவித்துள்ளது. இந்த விஷயத்தில் இந்தியாவின் தரவு மோசமாகவே உள்ளது. இந்தியாவில் நிஃப்டி 500 நிறுவனங்களின் இயக்குநர்கள் குழுவில் குறைந்தபட்சம் ஒருவராவது பெண்ணாக இருக்க

வேண்டும் என்று 2013-ம் ஆண்டு சட்டம் கொண்டுவரப்பட்ட போதிலும் அதை அமல்படுத்த 10 ஆண்டுகள் ஆனது. அதுவும் அதிகாரத்தில் இருப்பவர்களிடம் பலநினைவூட்டல்களுக்குப் பிறகே இது சாத்தியமானது. நிஃப்டி 500 நிறுவனங்களின் வாரியத்தில் ஐந்தில் ஒரு பெண் இயக்குநர் மட்டுமே இருக்கிறார். ஆனால், உலகில் சலுகைபெற்றவர்கள் பகுதியை ஒதுக்கிவைத்துவிட்டு மோதல்கள் நடந்து வரும் காஸா, ஆப்கானிஸ்தான் அல்லது உக்ரைனில் பெண்களின் நிலை என்னவென்று பார்ப்போம். இடமின்மை காரணமாக ஒரு அம்சத்தை மட்டும் பார்ப்போம். ஆப்கானிஸ்தானில் உள்ள பெண் பத்திரிகையாளர்களை மேற்கத்திய நாடுகள்தான் ஆதரித்து வருகின்றன. பயிற்சிபெற்ற பெண் பத்திரிகையாளர்களுக்கான ஒரே வேலைவாய்ப்பு அதுதான்.

ஆப்கானிஸ்தானில் மக்கள் தொகையில் பெரும் பாலானவர்களுக்கு முக்கிய தகவல் சாதனமாக இருப்பது வானொலிதான். ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதித் திட்டத்தின் மூலம் யுனெஸ்கோ ஆதரவில் 28 பிராந்திய மற்றும் உள்ளூர் வானொலி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. உள்ளூர் சமூக வானொலியான முஸ்ரா ரேடியோ ஆப்கானிஸ்தான் தெற்கு பகுதியில் உள்ள ஹெம்லாண்ட் மாகாணத்தில் பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. ஆப்கானிஸ்தானில் பெண் பத்திரிகையாளர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். 2008 முதல் சுதந்திரமாகச் செயல்படும் இந்த வானொலி நிலையம் பெண் நேயர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் சேவை செய்து வருகிறது. நாட்டில் பெண்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பிற்போக்குத்தனமான கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் இது செயல்பட்டு வந்தது. வீரத்துடன் போராடினாலும் சிறிது காலம் மறைந்து மீண்டும் பீனிக்ஸ் பறவை போல எழுந்து வந்தது.

ரேடியோ பேகம் மற்றொரு வலிமையான நெட்வொர்க் ஆகும். பள்ளி செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் சிறுமிகளுக்கு நம்பிக்கை அளிக்கும் உயிர்நாடியாக உள்ளது. இந்த வானொலி மூலம் ஆப்கன் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. மனநல ஆதரவு அளிப்பதுடன், நிதிகளைக் கையாள்வது பற்றிய வகுப்புகளையும் நடத்தி வருகிறது. இந்த வானொலி 19 மாகாணங்களில் சுமார் 5.9 மில்லியன் நேயர்களைக் கொண்டுள்ளது. இதில் 63 சதவீதம் பெண்கள் மற்றும் சிறுமிகளாவர்.

யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, ஆப்கானிஸ்தானில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பெண் குழந்தைகள் கல்விக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும் பல துறைகளில் பெண்கள் வேலைக்குச் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் பெண்கள் வீட்டிலேயே அடைபட்டுக் கிடப்பதால் ஒட்டுமொத்த தலைமுறையினர் மன நோயாளிகளாக மாறிவருகின்றனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. அமைப்புகளில் பெண்கள் பணி செய்ய தடையுள்ளதால் ரேடியோ பேகம், பெண்களுக்கு மனநல ஆலோசனை கூறும் நிகழ்வுகள் முன்பு 33 சதவீதமாக இருந்தது இப்போது 156 சதவீதமாக அதிகரித்துள்ளதாம். சமீபத்தில் ஐ.நா. எடுத்த பெண்கள் பற்றிய ஆய்வின்படி, பெண்களுக்கான மனநல ஆலோசனை நிகழ்ச்சி கள்தான் பெரும்பாலானவர்களால் கேட்கப்படும் நிகழ்ச்சியாகும். ஆப்கானிஸ்தான் பெண்கள் எதிர்கொள்ளும் மனநல நெருக்கடி ஒரு சோகமான கதையாகும். 90 சதவீத பெண்கள் தங்களின் மனநிலை மோசமாக அல்லது மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பிறவியிலிருந்தே பார்வை யற்றவரான 15 வயது சிறுமி பாத்திமாவின் கதையுடன் இதை முடிப்போம். பாத்திமா, ரேடியோ பேகம் ஒலிபரப்பிய முறைசாரா கல்வி மூலம் பயனடைந்தவர். தனது மாகாணத்தில் பள்ளி சென்று படிப்பதற்கு வழியில்லாத நிலையில், படிப்பறிவில்லாது இருந்த பாத்திமா, தனது மூத்த சகோதரருடன் (இவரும் பார்வையற்றவர்) சேர்ந்து, ரேடியோ பேகம் ஒலிபரப்பு தொடங்குவதற்கு முன்னதாக பி.பி.சி. வானொலியை விரும்பிக் கேட்பார்களாம். ஆனால், ரேடியோ பேகம் கல்வி ஒளிபரப்பு தொடங்கிய பின்னர் ஒரு நிகழ்ச்சி யைக் கூட அவர்கள் தவறவிட்ட தில்லை. மேலும் ரேடியோ பேகம் தொகுப்பாளர்களுடன் பேசிய பிறகு தானும் சமூகத்தில் இணைந்தது போல் உணர்கிறார். ஏனென்றால் அவர்கள் அனைவரும் பெண்கள்!

என்றாவது ஒருநாள் வானொலி தொகுப்பாளினியாக வேண்டும் என்பதுதான் அவரின் லட்சியம். ஆனால், இப்போது வானொலி மூலம் ஆசிரியர்கள், கவிஞர்கள், உடல் நலன், மனநலன் குறித்த பல்வேறு தகவல்களையும் அவர் மனதில் பதியவைத்து வருகிறார். பார்வையற்றோருக்கான பள்ளியில் சேர்ந்து படிக்கவோ அல்லது எப்படி எழுதுவது என்று தெரிந்து கொள்ளவோ எனக்கு இனி வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை. ஆனால், வானொலி மூலம் கல்வி கற்பது மிகப்பெரிய சொத்தாகும். அதற்காக நன்றியுள்ளவளாக இருக்கிறேன் என்கிறார் அவர்.

ரஷீதா பகத்

# உங்களுக்கான பிரேக்அவுட் அமர்வுகள்



*2023 மாநாட்டில் ரோட்ராக்ட் பிரேக்அவுட் அமர்வில் பங்கேற்பாளர்கள்.*

ரோட்டரி இன்டர்நேஷனல் கன்வென்ஷன் பிரதான மேடையில், ஆயிரக்கணக்கான சக உறுப்பினர்களுடன் உற்சாகமூட்டும் போது ரோட்டரியின் பெரும் செல்வாக்கை நீங்கள் உணர்வீர்கள். ஆனால் நீங்கள் சிறிய பிரேக்அவுட் அமர்வுகளுக்கு செல்லும்போது தான், உங்களுக்கு ஆர்வமுள்ள கவனம் செலுத்தும் தலைப்புகளைத் தோண்டுவதற்கான ஆழமான வேலையை நீங்கள் செய்யமுடியும்.

சிங்கப்பூரில் டஜன் கணக்கான அமர்வுகளில் ஒன்றைத் தேர்ந் தெடுப்பதன் மூலம், ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்ராக்டர்களின் பலத்தை இணைப்பதற்கான வழிகளை நீங்கள் கற்றுக் கொள்ளலாம், உறுப்பினர்களை சேர்ப்பது மற்றும் தக்கவைப்பது போன்ற எந்த சவால்களையும் தீர்க்கலாம், மேலும் உங்களின் மற்றும் உங்களைச் சுற்றியுள்ளவர்களின் மனநலத்தை மேம்படுத்தலாம்.

நீங்கள் கார்பன் நியூட்ரல் சங்கம் அல்லது நிகழ்வை நடத்த விரும்பலாம், ஹாபிடாட் ஃபோர் ஹுமானிட்டி போன்ற கூட்டாளர்களுடன் ஒத்துழைக்கலாம், திட்ட ஆலோசனைக்கு நிபுணர்களை அழைக்கலாம் அல்லது இன்டராக்ட் உறுப்பினர் தத்துவத்தை வளர்க்கலாம். அவை ஒவ்வொன்றையும் குறிக்கும் பிரேக்அவுட்கள் உள்ளன.

புதிய திட்டங்கள் மற்றும் நீண்டகால முன்முயற்சிகளை இன்னும் வெற்றிகரமாக்கு வதற்கான உதவிக்குறிப்புகளைப் பெறுங்கள் மற்றும் உங்கள் சங்கத்தின் உறுப்பினர்களிடையே ரோட்டரி மீது வாழ்நாள் முழுவதும் இருக்கும் ஒரு அன்பை வளருங்கள்.

மே 27–29 அமர்வுகளுக்குப் பதிவு தேவையில்லை, ஆனால் உலகத்துடன் நம்பிக்கையைப் பகிர்வது எப்படி என்பதைத் திட்டமிட, மாநாட்டு இணையதளத்தில் முழு பட்டியலை பார்க்கவும்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org

**ஆளுநர் குழு**

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலிந்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹுராலால் யாதவ்

அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3291 |
| T N சுப்ரமணியன்<br>RI இயக்குனர் | RID 3141 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர்<br>துணை தலைவர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2023–24)

| | |
|---|---|
| ஸ்வாதி ஹெர்கல்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3132 |
| ஹீராலால் யாதவ்<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3291 |
| முத்தையா பிள்ளை R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3212 |
| மிலின்த் குல்கர்னி<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3142 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions is welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.





# தொடர்ந்து நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவோம்

ஏப்ரல் அதன் துடிப்பான வண்ணங்களையும் அரவணைப்பையும் வெளிப்படுத்தும் போது, நேரம் வேகமாக நகர்கிறது என்பதை நினைவூட்டுகிறது, குறிப்பாக ரோட்டரியின் மாறும் உலகில். இந்த ரோட்டரி ஆண்டில் 90 நாட்களுக்கும் குறைவான நாட்களே எஞ்சியுள்ள நிலையில், சற்று நின்று நாம் தொடங்கிய செயல்பாடுகள் மற்றும் நாம் ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தைப் பற்றி சிந்திப்பது இயற்கையானது. நம் அர்ப்பணிப்பு தன்னார்வத் தொண்டுக்கு அப்பாற்பட்டது என்பதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன்; அது நம் வாழ்க்கையின் திரையில் பிணைக்கப்பட்டுள்ளது. நாம் இலக்குகளை மட்டும் நிர்ணயிப்பதில்லை; நாம் நோக்கத்தின் உருவமாக இருக்குகிறோம்.

ரோட்டரி இன்டர்நேஷனல் பரந்த அளவிலான முன்முயற்சிகளைக் கொண்டுள்ளது, இது சில சமயங்களில் கண்காணிக்க மிகவும் கடினமாக இருக்கும். எவ்வாறாயினும், இந்த சிக்கலுக்கு மத்தியில், நம் பிராந்திய இதழ் ரோட்டரி நியூஸ் நம்பகமான தகவல் ஆதாரமாக இருக்கிறது, நம் சங்கங்கள் மற்றும் சமூகங்களின் குறிப்பிடத்தக்க முயற்சிகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஈர்க்கக்கூடிய உள்ளடக்கத்தைத் தொடர்ந்து வழங்குவதற்காக இந்தப் பிரசுரத்தின் பின்னணியில் உள்ள அர்ப்பணிப்புள்ள குழுவிற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். சங்கங்கள் தங்கள் வெற்றிக் கதைகளைப் பகிர்ந்து கொள்ள இந்த தளத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நான் ஊக்குவிக்கிறேன்.


இந்த மாதம் தாய் மற்றும் சேய் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது, நமது சமுதாயத்தின் அடித்தளத்தை வளர்ப்பதில் ரோட்டரியின் ஆழ்ந்த அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தாய்வழி ஆரோக்கியத்தை உறுதி செய்வது ஒரு தார்மீக கட்டாயம் மட்டுமல்ல; இது எதிர்காலத்தில் ஒரு மூலோபாய முதலீடு.

சமீபத்தில், புது தில்லியில் நடைபெற்ற திஷாவில், வரும் ஆண்டிற்கான லட்சிய இலக்குகளை நிர்ணயிக்கும் பயணத்தைத் தொடங்கினோம். இந்த நிகழ்வு ஒரு தொற்று ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் இருக்க, உண்மையிலேயே மாயாஜாலமான சூழ்நிலையை உருவாக்கியது. வருகையிலிருந்து புறப்படும் வரை அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் தடையற்ற அனுபவத்தை உறுதி செய்ததற்காக தலைவர் PDG ஷரத் ஜெயின் மற்றும் செயலாளர் PDG குர்ஜீத் செகோன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றி.

கோடைகாலம் இந்தியா முழுவதையும் வெப்பத்தால் வாட்ட, லட்சக்கணக்கான மக்கள் தண்ணீர் பற்றாக்குறை மற்றும் இரக்கமற்ற வானிலையின் அப்பட்டமான யதார்த்தத்தை எதிர்கொள்கின்றனர். அதனால் தண்ணீரைச் சேமிப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் நமது சமூகங்களில் நேர்மறையான நடவடிக்கைகளை எடுப்போம். சிறிய சைகைகள் கூட உலகை மாற்றும். வரவிருக்கும் நமது தலைவர்களிடம் நாம் பொறுப்பை ஒப்படைக்கும்போது, நமது சமூகங்களுக்குள்ளும் நமக்குள்ளும் ரோட்டரியின் உருமாற்றும் உணர்வை முன்னெடுத்துச் செல்ல அவர்களுக்கு அதிகாரம் அளிப்போம்.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

# மாற்றம் செய்ய, இன்றே தொடங்கவும்



பலருக்கு, பஹாமாஸ் குளிர்ந்த காலநிலையிலிருந்து தப்பிக்கவும், வெள்ளை மணல் கடற்கரைகளில் ஓய்வெடுக்கவும், தெளிவான டர்க்கைஸ் நீரில் ஸ்நோர்கெல் செய்யவும் ஒரு இடமாகும். என்னைப் பொறுத்தவரை அது வீடு. நான் இந்த நீரில் பயணம் செய்து வளர்ந்தேன், இன்றுவரை, என்னால் முடிந்தவரை, நான் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் இந்த தண்ணீரிலே தான் நேரத்தை செலவழிப்பேன். என் இதயம் இருக்கும் இடம் இது தான்.

என் நாடு எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள் உண்மையானவை. பல்லுயிர் பெருக்கத்திற்கு இன்றியமையாத எங்களது பவளப்பாறைகள், கடல் வெப்பமயமாதல் மற்றும் மாசுபாடு காரணமாக ஆபத்தில் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் சூறாவளி மற்றும் வெப்பமண்டல புயல்கள் மேலும் தீவிரமடைகின்றன. உயரும் கடல் மட்டங்கள் பஹாமாஸுக்கு இருத்தலியல் அச்சுறுத்தலை ஏற்படுத்து கின்றன. உப்பு நீர் எங்களது விலைமதிப்பற்ற மற்றும் குறைவாகவே உள்ள நன்னீர் வளங்களில் ஊடுருவி எங்களின் அழகான கடற்கரைகளை அரிக்கிறது.

கடந்த ஆண்டின் பிற்பகுதியில், துபாயில் நடந்த ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டான COP28 இல் ரோட்டரியை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்தது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் முன்னேற்றம் மிகவும் மெதுவாக உள்ளது என்பது கூட்டத்திலிருந்து வெளிவந்த ஒருமித்த கருத்து. கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வைக் குறைப்பதற்கும், சமூகங்கள் காலநிலை மாற்றத்திலிருந்து மீள்வதற்கு உதவுவதற்கும், மேலும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு சிறந்த ஆதரவை வழங்குவதற்கும் உலகம் வேகமாக செயல்பட வேண்டும் என்று பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

ரோட்டரி தீர்வின் ஒரு பகுதியாக மட்டுமே இருக்க முடியும். பல சங்கங்கள் தங்கள் சமூகங்களில் கடற்கரை மற்றும் சாலையோர சுத்தப்படுத்துதல் போன்ற திட்டங்களுடன் செயல்படுகின்றன. ரோட்டரி அறக்கட்டளை மூலம், உலகெங்கிலும் உள்ள சங்கங்கள் மற்றும் மாவட்டங்களுடன் வளங்களைத் திரட்டுவதன் மூலம் உங்கள் தாக்கத்தை நீங்கள் அதிகரிக்கலாம்.

சாத்தியக்கூறுகளை கற்பனை செய்து பாருங்கள். கனடா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள ரோட்டரி மாவட்டங்கள் ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸில் உள்ள ஈரநிலங்களைப் பாதுகாக்கலாம். பிரேசில், இந்தியா மற்றும் தைவான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ரோட்டரி தலைவர்கள், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு நிலையான விவசாயத்தில் பயிற்சி அளிப்பதற்கான மானியத் திட்டங்களுக்கு தலைமை தாங்கலாம். பஹாமாஸ், தென்னாப்பிரிக்கா மற்றும் நியூயார்க்கைச் சேர்ந்த ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள் தங்கள் மாவட்டங்களுடன் இணைந்து எனது நாட்டிற்கு அதன் இயற்கை வளங்களான பவளப்பாறைகள் அல்லது சதுப்புநிலத்தை மீட்டெடுக்க உதவலாம்.

பல பிரச்சனைகள் சரிசெய்யக்கூடியவை என்பதை நீங்கள் உணரும் வரை, நமது சுற்றுசூழல் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மிகப்பெரியதாகத் தெரியும். மானிய திட்டத்தை வழிநடத்தவோ அல்லது தன்னார்வத் தொண்டு செய்யாவிட்டாலும், அறக்கட்டளைக்கு வழங்குவதன் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் அனைவரும் உதவலாம்.

ரோட்டரியால் மட்டும் இந்த கிரகத்தை காப்பாற்ற முடியாது. ஆனால் போலியோவை முடிவுக்குக் கொண்டுவருவதில் நமது முன்னேற்றம் நிரூபிப்பது போல, ஒரு சிறந்த உலகத்திற்கான நமது பார்வையை இயக்கத்தில் வைத்து, தொடங்கும்போது ரோட்டரியின் தாக்கம் நன்றாக இருக்கும்.

**பேரி ரஸ்ஸின்**
TRF அறங்காவலர் தலைவர்

---


**ROTARY NEWS PLUS**

படித்தீர்களா?
அல்லது உங்கள் e-mail்
உள்ள Junk folder-க்கு
செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர், ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு பகிரவும்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத் தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

FIND A CLUB
ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator

# District Wise TRF Contribution as on February 2024

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| | | | **India** | | |
| 2981 | 31,345 | 885 | 1,000 | 250 | 33,480 |
| 2982 | 32,052 | 694 | 24,085 | 9,157 | 65,988 |
| 3000 | 77,727 | 390 | 8,313 | 69,439 | 155,870 |
| 3011 | 156,352 | 24,896 | 27,092 | 369,302 | 577,642 |
| 3012 | 14,679 | 50 | 0 | 267,317 | 282,047 |
| 3020 | 112,829 | 25,323 | 36,735 | 50,025 | 224,913 |
| 3030 | 87,671 | 27,776 | 4,275 | 217,073 | 336,794 |
| 3040 | 4,190 | 208 | 0 | 25 | 4,423 |
| 3053 | 24,399 | 1,000 | 0 | 27,053 | 52,452 |
| 3055 | 93,483 | 2,532 | 30 | 6,228 | 102,273 |
| 3056 | 28,511 | 125 | 0 | 0 | 28,636 |
| 3060 | 86,385 | 9,615 | 7,851 | 314,753 | 418,604 |
| 3070 | 6,449 | 333 | 0 | 0 | 6,782 |
| 3080 | 89,225 | 21,866 | 1,500 | 39,866 | 152,457 |
| 3090 | 46,415 | 2,058 | 17,000 | 26,809 | 92,282 |
| 3100 | 83,400 | 2,787 | 25,301 | 31,118 | 142,606 |
| 3110 | 11,526 | 30 | 0 | 85,995 | 97,551 |
| 3120 | 34,179 | 129 | 0 | 5,101 | 39,408 |
| 3131 | 418,615 | 12,493 | 90,098 | 597,689 | 1,118,894 |
| 3132 | 98,312 | 4,758 | 10,000 | 49,719 | 162,789 |
| 3141 | 312,147 | 19,210 | 60,012 | 1,197,102 | 1,588,472 |
| 3142 | 247,542 | 111,747 | 14,500 | 81,654 | 455,444 |
| 3150 | 51,859 | 30,606 | 160,423 | 91,975 | 334,864 |
| 3160 | 12,136 | 1,251 | 0 | 3,432 | 16,818 |
| 3170 | 83,046 | 27,050 | 12,700 | 114,231 | 237,026 |
| 3181 | 91,870 | 2,170 | 1,000 | 85 | 95,126 |
| 3182 | 43,549 | 4,606 | 0 | 0 | 48,155 |
| 3191 | 77,404 | 9,106 | 60,976 | 483,851 | 631,336 |
| 3192 | 89,675 | 13,097 | 0 | 46,198 | 148,969 |
| 3201 | 142,218 | 46,631 | 45,684 | 1,185,201 | 1,419,734 |
| 3203 | 17,728 | 17,316 | 11,220 | 15,550 | 61,813 |
| 3204 | 16,796 | 2,574 | 0 | 18,466 | 37,836 |
| 3211 | 47,776 | 4,236 | 27,325 | 98,347 | 177,685 |
| 3212 | 70,940 | 20,321 | 2,000 | 82,287 | 175,549 |
| 3231 | 4,462 | 2,753 | 0 | 0 | 7,216 |
| 3232 | 51,076 | 18,429 | 17,920 | 953,048 | 1,040,474 |
| 3240 | 101,924 | 11,394 | 34,000 | 94,803 | 242,121 |
| 3250 | 35,924 | 3,251 | 26 | 13,298 | 52,500 |
| 3261 | 25,716 | 4,078 | 0 | 28,978 | 58,772 |
| 3262 | 36,129 | 4,936 | 1,000 | 2,575 | 44,640 |
| 3291 | 127,649 | 2,658 | 41,646 | 2,100 | 174,053 |
| 3220 Sri Lanka | 47,192 | 3,957 | 0 | 1,073 | 52,221 |
| 3271 Pakistan | 15,650 | 72,553 | 0 | 20,402 | 108,606 |
| *3272 Pakistan | 4,342 | 385 | 0 | 25 | 4,752 |
| *3281 Bangladesh | 80,569 | 2,105 | 3,000 | 264,728 | 350,403 |
| *3282 Bangladesh | 90,726 | 4,982 | 1,000 | 9,116 | 105,824 |
| 3292 Nepal | 158,058 | 21,449 | 13,000 | 260,044 | 452,551 |
| 63 (former 3272) | 3,025 | 25 | 0 | 0 | 3,050 |
| 64 (former 3281) | 25,045 | 200 | 1,000 | 0 | 26,245 |
| 65 (former 3282) | 3,797 | 200 | 0 | 9,000 | 12,997 |

* Undistricted

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

# தடைகள், சவால்களைக் கடந்து சாதனை புரிந்த 7 பெண் ஆளுநர்கள்!

ரஷீதா பகத்

ரோட்டரி ஆண்டு 2023–24, இந்திய ரோட்டரியில் பெண்கள் சாதனை படைத்த ஆண்டாகும். 7 பெண்கள் தடைகளைக் கடந்துவந்து மாவட்ட ஆளுநர்கள் என்னும் உயர்ந்த பதவியை எட்டிப் பிடித்துள்ளனர். அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று 9 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், ரோட்டரி நியூஸ் அவர்களின் அனுபவம், தலைமைத்துவத்தில் அவர்களின் பங்கு, அவர்களின் பின்னணி மற்றும் ரோட்டரியில் பாலினம் போன்ற பலதரப்பட்ட விஷயங்களில் அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து இந்த கட்டுரையில் வெளியிட்டுள்ளது. ரோட்டரி பற்றிய அவர்களின் நேர்மறை மற்றும் எதிர்மறை கருத்துக்களும் இதில் அடங்கியுள்ளன.

RID 3262 மாவட்ட ஆளுநர் **ஜெயஸ்ரீ மொஹந்தி**, சர்வதேச வர்த்தகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர் மட்டுமல்ல, லுமினஸ் இன்போவேஸ் ஐ.டி. நிறுவனத்தை இணைந்து நிறுவிய தொழில்முனைவர் ஆவார். 2008-ம் ஆண்டில் புவனேஸ்வர் ரோட்டரி சங்க கூட்டத்திற்கு அழைப்பின் பேரில் தனது கணவருடன் சென்று கலந்துகொண்ட பின்னர் அவர் ரோட்டரியில் சேர்ந்தார். உறுப்பினர்கள் பழகியவிதம் மற்றும் நட்புறவை பார்த்து நானும் எனது கணவரும் ரோட்டரியில் ஒரே நாளில் உறுப்பினர்களாகச் சேர்ந்தோம். சங்கத்தில் முதல் ரோட்டேரியன் ஜோடி நாங்கள்தான் என்றார் ஜெயஸ்ரீ.

தலைமைப் பதவிக்கான தனது பயணத்தில் சந்தித்த சவால்கள் குறித்து ஜெயஸ்ரீ கூறுகையில், மாவட்டத்தின் முதல் DG-க்கான தேர்தலின் கடினமான பகுதி முதல் சவாலாக இருந்தது. சிறந்த முன்மாதிரியான தலைமையை உருவாக்கி, உறுப்பினர்களை ஆர்வத்துடன் வழிநடத்தி நிறைவான ரோட்டரி ஆண்டாக மாற்றுவது இரண்டாவது சவாலாக இருந்தது.

பெண் தலைமையை ஏற்றுக் கொள்ளுவது மற்றும் மாவட்ட ஆளுநருக்கான மரியாதையை பெறுவதற்கு நான் மிகவும் அதிர்ஷ்டசாலி தான். ஒவ்வொரு சங்கமும் இந்த ஆண்டு மிகப்பெரிய திட்டங்களை எடுத்துக் கொண்டதால் சங்கங்களின் தலைவர்கள் பாகுபலி தலைவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களின் சேவைத் திட்டங்களில் நான் முன்னிலை வகிப்பதை அவர்கள் பெருமையாக நினைக்கிறார்கள். ஆர்வமுள்ள பெண்கள் பலர் சங்கத்தின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் வரவிரும்புவதை நான் காண்கிறேன்.

தமது சிறப்புத் திட்டங்கள் குறித்து ஜெயஸ்ரீ கூறுகையில், பெருமைப்படுவதற்கு பல முன்முயற்சிகள் உள்ளன. சம்மான் மையங்கள் (பாலூட்டும் தயார்களுக்கான தனிமையங்கள்)




இடமிருந்து: DG *ஸ்வாதி ஹெர்கல்* (RID 3132), R *ஆனந்த ஜோதி* (RID) 3000), *ஆஷா வேணுகோபால்* (RID 3030), *ரிது குரோவர்* (RID 3040), *மஞ்சு பாட்கே* (RID 3131), B C *கீதா* (RID 3182) *மற்றும் ஜெயஸ்ரீ மொஹந்தி* (RID 3262).

மற்றும் ஆஷா மனநல மையம் இரண்டையும் ஆன்லைன் மூலம் மற்றும் நேரிலும் ஆலோசனை பெறும் வசதியுடன் RI தலைவர் கோர்டன் மெக்கினலி தொடங்கிவைத்தது எங்களுக்கு பெருமை அளிக்கிறது. ஒடிசாவில் ராய்கடாவில் 10,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பெரிய நீர்நிலைகள் திறக்கப்பட்டுள்ளன. ஒடிசாவின் சுகாதாரத்துறையுடன் இணைந்து ரோட்டரி யானைக்கால் நோய் தடுப்புத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களில் 38,000 பேர் பலன்பெற்றுள்ளனர்.

ரோட்டரியில் ஜெய்ஸ்ரீயின் பயணம் அவருக்கு முழு மனநிறைவை கொடுத்துள்ளது. தனிப்பட்ட, தொழில்முறை, தொழில்துறை சுற்றுச்சூழல் பாதுகாப்பு என ஒவ்வொரு துறையிலும் இது ஒரு சிறப்பு இடத்தை உருவாக்கியுள்ளது. முக்கியமான விஷயங்களில் என்னிடம் கருத்துகள் கேட்கப் படுகின்றன. எனது தொழில் கூட்டாளிகள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களும் எனது கருத்தை கவனத் தில் கொள்கிறார்கள் என்கிறார்.

மேலும், மாவட்டத்தில் உள்ள ரோட்டேரியன்கள் பல்வேறு திட்டங்களை அரசுடன் இணைந்து மேற்கொள்வதால் பொதுமக்களிடம் ரோட்டரி பற்றிய நன்மதிப்பு உயர்ந்துள்ளது. RI தலைவர் புவனேஸ்வரம் வந்திருந்த போது, ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக், எனது வேண்டுகோளை ஏற்று மெக்கினலியுடன் நீண்ட சந்திப்பு நடத்தினார். முதல்வர் ரோட்டரியின் பங்களிப்பை அங்கீகரித்ததுடன் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்க ஆர்வமாக இருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

RID 3131 மாவட்ட ஆளுநர் மற்றும் மதிப்புமிக்க சில்வியா விட்லாக் தலைமைப்பதவிக்கான விருது பெற்றவருமான **மஞ்சு பாட்கே**, மேலாண்மை நிர்வாக பட்டதாரி. கார்ப்பொரேட் நிறுவனங்களின் ஆலோசகர் மற்றும் பயிற்சியாளர். மேலும் ஏழை மாணவர்களின் நலனில் கவனம் செலுத்தி வரும் டாடா இன்ஸ்டிடியூட் ஆஃப் சோஷியல் சயின்ஸ் அமைப்புடன் இணைந்து தொழில் கல்வியில் ஈடுபட்டுள்ளார்.

2003-ம் ஆண்டு, புனே டெக்கான் ஜிம்கானா ரோட்டரி சங்கத்தில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். அப்போது அவரது அதிகாரி, ரோட்டரி சங்கக் கூட்டத்தில் கலந்துகொள்ள அவரை அழைத்துச் சென்றார். அதன்பின் அவர் வெளியேறினாலும் பின்னர் தொடர்ந்தார். இதுதான் விதி என்று நான் நினைக்கிறேன் என்கிறார் அவர்.

மாவட்ட ஆளுநராக வருவதற்கான தனது பயணம் பற்றி மஞ்சு கூறுகையில், எனது மாவட்டத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் பலரின் வற்புறுத்தலின் பேரிலேயே நான் போட்டியிட முடிவு செய்தேன். அதனால் சவால் எதையும் நான் எதிர்கொள்ளவில்லை. நான் அடிமட்ட அளவில் பணியாற்றினேன் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களுடனும் எனக்கு தொடர்பு இருந்தது என்றார். மாவட்டத்தில் அப்போது 138 சங்கங்கள் இருந்த நிலையில் ஒவ்வொரு சங்கத்திலும் குறைந்தது நான்கு அல்லது ஐந்து ரோட்டேரியன்கள் எனக்கு அறிமுகமானவர்களாக இருந்தனர். 95 சதவீத சங்கங்களில் நான் ஏதோ ஒருவழியில் நெருக்கமாக பணியாற்றி இருக்கிறேன். ஆனாலும், சில மூத்த தலைவர்கள் பாலின பாகுபாட்டை பயன்படுத்தியும், என்னைப் பற்றி தவறான தகவல்களை பரப்பியதாலும் தேர்தல் கடினமாகவே இருந்தது.




ஆனால், அடிமட்ட அளவில் நான் வேலை செய்ததால், மூத்த தலைவர்கள் என்னைப் பற்றி செய்த எதிர்மறை பிரசாரங்கள் எடுபடாமல் போனது. மாவட்டத்தில் சங்கத் தலைவர்களின் பெரும்பான்மை ஆதரவு எனக்கு இருந்தது. என்னிடம் தலைவர்கள், உதவி ஆளுநர்கள், இயக்குநர்கள் மாவட்ட குழு உறுப்பினர் என அனைவரும் எனக்கு ஆதரவாக உள்ளனர். எனது பணி, சுறுசுறுப்பு, தலைமைத்துவம், பாலினபாகுபாடு பாராமல் செயல்படுதல் காரணமாக பெரும்பாலான ரோட்டேரியன்கள் என்னை மதிக்கின்றனர். நான் ஒருபோதும்



# தடைகளைக் கடந்து

ரோட்டரியில் இறுதியாக தடைகளைக் கடந்து வந்துவிட்டீர்களா? இந்தியாவில் தற்போதைய நிலை என்ன? என்று பெண் ஆளுநர்களிடம் கேட்டோம். ஜெயஸ்ரீ மொஹந்தி கருத்து கூறுகையில், இந்தியாவில் பெண்களின் தலைமையை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். உலக அளவில் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் ஸ்டீபனி அர்சிக் தலைமைப் பதவிக்கு வந்துள்ளதன் மூலம் தடைகள் ஏற்கனவே முறியடிக்கப்பட்டுவிட்டன. பெண்களுக்கு திறமை இருக்கிறது. உயர்பதவிக்கு அவர்களும் தகுதியானவர்கள்தான் என்று ரோட்டேரியன்கள் நம்புகிறார்கள் என்றார்.



ஆனால், ஆனந்தஜோதி வித்தியாசமான பார்வையை வழங்குகிறார். மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில், பெண் தலைவர்களை ஏற்பதில் இந்தியா இன்னும் பின்தங்கியே இருப்பதாக அவர் கூறுகிறார். என்னைப் போலவே பெண்கள் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும், தலைமைப் பதவிக்கு வர அழுத்தம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால், பெண்கள் ஆர்வமாக முன்வந்தால் நிச்சயமாக உயரத்தை எட்டமுடியும் என்பது அவரது கருத்தாகும்.

ரோட்டரியில் மெல்ல மெல்ல தடைகள் உடைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்தியாவில் பெண்களின் தலைமையை ஏற்றுக்கொள்வது அதிகரித்து வந்துள்ளது. சவால்கள் இல்லாமல் இல்லை என்றாலும் முன்னேற்றங்களும் இருக்கின்றன. இரண்டு பெண்கள் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக வந்துள்ளது மாற்றத்திற்கான அறிகுறியாகும் என்று சுவாதி ஹெர்கல் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் மஞ்சு பாட்கே சொந்த கருத்தை கொண்டுள்ளார். இந்தியாவுக்கு வெளியே ரோட்டரியின் செயல்பாடுகள் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால், எனது மாவட்டத்தில் உள்ள மக்கள் பெண் ஆளுநராக வருவதை ஏற்றுக்கொள்கின்றனர். கார்ப்பொரேட் உலகில் பாலின பாகுபாடு இருக்கிறது. பெண்கள் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பது பற்றி பலரும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஒரே மாதிரியான தலைமை வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். ஆம் இதில் எனக்கும் சில அனுபவங்கள் உண்டு. ஆனால், எனது வேலைக்கு அது தடையாக இல்லை என்று கூறியுள்ளார்.

ரோட்டரியில் தடைகள் படிப்படியாக முறியடிக்கப்பட்டு வருவதை கீதா ஒப்புக் கொள்கிறார். இந்தியாவில் பெண்களின் தலைமையை ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளனர். இதுவே முன்னேற்றத்துக்கான அறிகுறியாகும். தலைமைப் பதவிகளில் பெண்களை அரவணைப்பதில் வெளிப்படைத்தன்மை இருப்பதாகத் தெரிகிறது. இந்த மாற்றம் ரோட்டரியில் பாலின சமத்துவத்தை நோக்கி நகர்வதைக் குறிக்கிறது என்கிறார் அவர்.

இந்தியாவில் பெண்கள் தலைமைப் பதவிகளை அடைவதற்கான கதவுகள் மேலும் திறக்கப்படுமா என்பது குறித்து மஞ்சு கூறுகையில், இதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்தியாவில் தேசிய அளவில் உயர் தலைமைத்துவம் எப்படிச் செயல்படுகிறது என்பது குறித்து எனக்கு சரிவர தெரியாது. ஆனால், நிலைமை இப்போது இல்லாவிட்டாலும் விரைவில் மாறும். நீங்கள் தொடர்ந்து சிறப்பாக செயலாற்றிவந்தால் பதவிகள் உங்களைத்





தேடிவரும் என்பது எனது நம்பிக்கை. எனவே அதிகம் கவலைப்படாமல் எனது பயணத்தின் ஒவ்வொரு பகுதியையும் ரசித்து அனுபவிக்கப் போகிறேன் என்றார்.

ரோட்டரியில் பெண் தலைவர்களை ஏற்றுக் கொள்வதற்கான கதவுகள் திறந்தே இருக்கிறது என்று நம்புவதாக ரிது குரோவர் கூறினார். நீங்கள் நம்பிக்கையுடனும், செயல்பட்டால் நீங்கள் விரும்பும் உச்சத்தை பாலின பாகுபாடு இல்லாமல் அடைய முடியும் என்று நம்புகிறார் அவர்.

பெண்களின் சிறப்பு அல்லது தனித்துவமான குணங்கள் பற்றி ஜெயஸ்ரீ கூறுகையில், தலைமைப் பதவிக்க வரும் பெண்கள் கடினமான உழைப்பாளிகளாகவும், கருணை உள்ளம் கொண்டவர்களாவும், மேலும் கற்றுக்கொள்வதில் ஆர்வமுடைய வர்களாக இருப்பார்கள். அவர்கள் சுயநலம் இல்லாமல் உறுதிப்பாட்டுடன் ரோட்டரிக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றுவார்கள் என்கிறார்.

பெண் தலைவர்கள் தனித்துவமான குணம் கொண்டவர்கள். அவர்களிடம் பரிவு, கூட்டுமுயற்சி மற்றும் துடிப்புடன் பணிசெய்யும் குணங்கள் இருக்கும். இதன் மூலம் அவர்கள் தலைமைத்துவ பணியை சிறப்பாகச் செய்வார்கள் என்கிறார் சுவாதி.

ஆஷா ஒரு விஷயத்தை அடிக்கோடிட்டு காட்டுகிறார். இது ரோட்டரிக்கு உள்ளேயும், வெளியேயும் பெண்களுக்கான சகாப்தமாகும். ரோட்டரி கூட பெண் தலைமையை ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது. பரபரப்பான இந்த நேரத்தில் மாவட்டத் தலைமையின் ஒருபகுதியாக நான் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்கிறார் அவர்.

பெண் தலைவர்கள் அதிக இரக்கம் கொண்டவர்களாகவும் சமூகத்தின் முன்னேற்றத்துக்காக தனித்துவமான சேவையை அவர்களால் வழங்க முடியும் என்று நம்புவதாக ஆனந்தஜோதி தெரிவித்தார். உலகில் உள்ள பல பிரச்னைகளுக்கு பெண்களால் நிச்சயம் தீர்வுகாண முடியும் என்று அவர் நம்புகிறார்.

வரும் காலங்களில் பெண்களுக்கான கதவுகள் திறந்தே இருக்கும் என்றே நான் கருதுகிறேன் என்கிறார் ஜெய்ஸ்ரீ. எனது மாவட்டத்தில் ரோட்டரியில் பெண் தலைமையை அதிகரித்துள்ளோம்.

19 பெண்கள் ரோட்டரி சங்கத்தின் தலைவர்களாகவும் 15 பெண்கள் உதவி ஆளுநராகவும் செயல்படுகிறார்கள். அவர்கள் மேலும் வளர்ச்சி அடைய சிறப்பான வாய்ப்புகள் காத்திருக்கின்றன என்கிறார் ஜெயஸ்ரீ.



இந்தியாவில் ரோட்டரியில் பெண் தலைவர்களுக்கான கதவுகள் திறந்திருப்பதாகவே நான் பார்க்கிறேன். ரோட்டரி தொடர்ந்து பன்முகத்தன்மையுடன் செயல்பட்டு வருகிறது. ரோட்டரியை சிறப்பாக வடிவமைத்து சரியான திசையில் கொண்டு சென்று தாக்கத்தை ஏற்படுத்துவதில் பெண்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்று சுவாதி கூறுகிறார்.



கீதா கூறுகையில், பெண் தலைவர் களிடம் பரிவு, கூட்டுமுயற்சி மற்றும் தலைமைத்துவத்தை அடைவதற்கான அணுகுமுறை உள்ளிட்ட தனித்து வமான பண்புகள் உள்ளன. இத்தகைய குணங்கள் இருப்பதால் அவர்களால் நல்ல முடிவுகளை எடுக்க முடிகிறது. பெண் தலைவர்கள் மற்ற பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் முன்மாதிரியாக இருக்கிறார்கள். ஆண்கள் மேலாதிக்கம் உள்ள துறைகளில் தடைகளை கடந்து முன்னேற அவர்களை மேலும ஊக்கப்படுத்து கிறார்கள். என்கிறார்.

பெண்கள் கருணை உள்ளம் கொண்டவர்களாக இருப்பதால் எந்த விஷயத்தையும் சரிவர கையாளுகிறார்கள். இதனால் எந்த ஒரு காரியத்தையும் அவர்களால் திறமையாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்த முடிகிறது. இந்த திறமை இருப்பதால் அவர்கள் ரோட்டரி மட்டுமல்ல கார்ப்பொரேட் உலகிலும் உயர்ந்து நிற்கிறார்கள் என்கிறார், மஞ்சு.



எனது கடமைகளிலிருந்தும் பொறுப்புகளிலிருந்தும் பின் வாங்கியதில்லை. எனது குழுவினர் என்னுடன் நெருக்கமாக வேலை செய்கிறார்கள். மாவட்டத்திற்காக கடுமையாக உழைக்கின்ற போதிலும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

நான் எந்த விஷயமாக இருந்தாலும் கோபப்படாமல் அமைதியாக கையாள்கிறேன். அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்கிறேன். அதனால் அனைவரும் என்னுடன் பணிபுரிவதில் ஆர்வமாக இருக்கிறார்கள் என்று புன்னகையுடன் தெரிவித்தார் மஞ்சு.

பெருமைப்படத்தக்க வேலை பற்றி மஞ்சு குறிப்பிடுகையில், எனது பதவிக்காலத்தில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே ஒன்று அல்லது இரண்டு திட்டங்களை மட்டும் சுட்டிக் காட்டுவது கடினமாகும். ஆனால், ஒரு விஷயத்தில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அது ரோட்டரி CSR விருது வழங்கும் திட்டமாகும். உறுதியாக, வெளிப்படைத் தன்மையுடன், நேர்மையான முறையில் இந்த திட்டம் செயல் படுத்தப்படுகிறது. சமூக பொறுப்புணர்வு திட்டங்களுக்கு நிதியுதவி செய்த 65-க்கும் மேலான நிறுவனங்கள் இந்த விருதுக்கு விண்ணப்பித்திருந்தன. சுதந்திரமான, நடுநிலையான குழுவின் மூலம் 28 நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து நாங்கள் விருது வழங்கியுள்ளோம். இது எங்களுக்கு பெருமை தரும் விஷயமாகும்.

மற்றொரு பெரிய மற்றும் லட்சியத் திட்டம் குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சை செய்வது. மாவட்டத்தில் ரூ.15 கோடி செலவில் இதுபோன்று 1,000 குழந்தைகளுக்கு அறுவைச்சிகிச்சை நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. 550 அறுவைச் சிகிச்சைகளுக்கான நிதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இதுவரை 300 அறுவைச்சிகிச்சைகள் நடந்து முடிந்துள்ளன. இதர குறிப்பிடத்தக்க திட்டங்களில் பரிக்கிரமா கார் பேரணியும் ஒன்று. இதை அவரே முன்னின்று நடத்தியது. RYLA, உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரோட்டரி சங்கங்கள் தங்கள் திட்டங்களுக்காக ரோட்டரி நல்லிதயங்களிலிருந்து நிதி திரட்டி வருகிறது. இது மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுகிறது. அறக்கட்டளைக்கு நிதி கொடுப்பதிலும் நாங்கள் சாதனை படைத்து வருகிறோம். 2023–24 ஆண்டின் 40 நாளில் நாங்கள் நூறு சதவீதம் வழங்கும் மாவட்டமாக மாறினோம். எங்கள் மண்டலத்தில் முதல் மாவட்டமாக இருந்தோம். ஒருவேளை உலகில்கூட முதன்மையாக இருந்திருக்கலாம். போலியோ வுக்கான வருடாந்திர நிதி சேகரிப்பில் நாங்கள் எங்கள் பிராந்தியத்தில் முதலிடத்தில் இருக்கிறோம் என்றார் மஞ்சு.

வர்த்தகம் மற்றும் சட்டப்படிப்பில் பட்டதாரியான **பி.சி.கீதா** (RID 3182), கர்நாடக மாநிலம், சிக்கமகளூரில் உள்ள கர்நாடக மகிளா சஹாகரா வங்கியின் நிறுவனத் தலைவர், இந்த வங்கி விவசாயிகள், மகளிர் மற்றும் வீட்டுவசதி துறையில் இருக்கும் உள்ளூர் மக்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. இவர் குடகு கிராமிய வங்கியின் இயக்குநராகவும், சிக்கமகளூரு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராகவும் இருந்து வருகிறார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும் உள்ளார்.

2000-ம் ஆண்டில் பலேஹொன்னூர் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். தற்போது அவரது தந்தையால் பல ஆண்டு களுக்கு முன்பு தொடங்கப்பட்ட பலேஹொன்னூர் கல்விச் சங்கத்தின் செயலாளராக உள்ளார். பலேஹொன்னூர் எழுத்தறிவு இயக்கத்தின் முக்கிய இடமாக விளங்கும் இந்த பள்ளியில் உயர் வகுப்புகளைச் சேர்த்துள்ளார்.



*அடிமட்ட அளவில் நான் வேலை செய்ததால், மூத்த தலைவர்கள் என்னைப் பற்றி செய்த எதிர்மறை பிரசாரங்கள் எடுபடாமல் போனது.*

**மஞ்சு பாட்கே**



*மூத்த தலைவர்கள் பெண் தலைமைப் பதவிக்கு வருவதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாவட்டத்தில் ரோட்டரி அமைப்புக்குள் இருந்த அரசியல் சிக்கல்களை கடந்து வருவது மற்றொரு சவாலாக இருந்தது.*

**சுவாதி ஹெர்கல்**



*நான் ஒன்றல்ல, இரண்டல்ல, பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால், அவை படிக்கட்டுகளாகவும், இந்த நிலையை அடைய உந்து சக்திகளாகவும் அமைந்தன.*

**ஆனந்த ஜோதி**



*RID 3182-ன் இரண்டாவது பெண் மாவட்ட ஆளுநர் என்ற முறையில் நான் பாலின சமத்துவத்தையும், அனைவரது கருத்துக் களையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் செயல்பட்டு முன்னேற்றம் கண்டேன்.*

**B C கீதா**

*மாவட்டத்தின் முதல் DG -க்கான தேர்தலின் கடினமான பகுதி முதல் சவாலாக இருந்தது. சிறந்த முன்மாதிரியான தலைமையை உருவாக்கி, உறுப்பினர்களை ஆர்வத்துடன் வழிநடத்தி நிறைவான ரோட்டரி ஆண்டாக மாற்றுவது இரண்டாவது சவாலாக இருந்தது.*



**ஜெயஸ்ரீ மொஹந்தி**

*எங்கள் சங்கம் தலைமைப் பதவியில் பெண்கள் இருப்பதற்கு ஆதரவாகவே இருந்தது. எனவே சங்க அளவில் எந்த எதிர்ப்பையும் நான் சந்திக்கவில்லை. அதற்கு பதிலாக சவால்களை எதிர்கொண்டு மேலே செல்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டேன்.*



**ஆஷா வேணுகோபால்**



*நான் திறமையானவள் என்பதை புரிந்துகொண்டதால் அனைவரும் என்னை ஆதரித்தனர் என்றாலும் மாவட்டத்தில் ஒரு பெண் உயர்ந்த பதவிக்கு வருவதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.*

**ரிது குரோவர்**

2008-ம் ஆண்டு முதல் பலேஹொன்னூர் இன்னர்வீல் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

அவரது பதவிக்காலத்தில் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும், மண்வள பாதுகாப்பு திட்டம், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டம், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கான நற்பண்புக் கல்வி, மின்னணு கழிவு மேலாண்மை உள்ளிட்டவை குறிப்பிடத்தக்கவை என்று அவர் கூறினார். மாவட்டத்தில் உள்ள 25 அரசு பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்து தரும் திட்டத்தில் நான் ஈடுபட்டுள்ளேன். ரூ.11.25 லட்சம் மதிப்பிலான இத்திட்டம் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளின் ஒருபகுதியாக இதர நிறுவனங்களுடன் சேர்ந்து நிறைவேற்றப் படுகிறது. பள்ளிகளுக்கு தூய்மையான குடிநீர் வழங்குவதை நோக்கமாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது என்றார்.

மேலும் கீதா கூறுகையில் மாவட்டத்தில் உள்ள சங்கத்தலைவர்கள் என்னிடம் அன்புகலந்த மரியாதையுடன் பழகுவார்கள். ஒரு பெண்ணால் இவ்வளவு சாதிக்க முடியுமா என்று ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். RID 3182-ன் இரண்டாவது பெண் மாவட்ட ஆளுநர் என்ற முறையில் நான் பாலின சமத்துவத்தையும், அனைவரது கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளும் வகையில் செயல்பட்டு முன்னேற்றம் கண்டேன் என்றார்.

தனிப்பட்ட முறையில் கூற வேண்டுமானால், ரோட்டரியில் நான் செய்த சாதனைகள் எனக்கு முழு திருப்தியை அளித்துள்ளன. ஒரு மாவட்ட ஆளுநர் என்ற முறையில் என்னால் சமூகத்துக்கும் அதற்கு அப்பாலும் அர்த்தமுள்ள ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. இது எனக்கு நல்ல பெயரையும் வாங்கித் தந்துள்ளது. இதன் மூலம் எனது குடும்பத்திலும், நட்பு வட்டாரத்திலும் என் மீதான நன்மதிப்பு உயர்ந்துள்ளது. அவர்கள் என்னை எழுச்சியின் நாயகியாகவும், வழிகாட்டியாகவும் பார்க்கிறார்கள் என்றார் கீதா.

**ஆனந்தஜோதி**, ரோட்டரி மாவட்டம் 3000-ன் மாவட்ட ஆளுநர். ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர். ஹோட்டல் ஸ்ரீ பாலாஜி பவனின் நிர்வாக பங்குதாரர். திண்டுக்கல் நகரில் ஸ்டைல் சிக் போட்டிக் ஆடைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தின் உரிமையாளர். தமது வேலையில் எந்த அம்சத்தை ரசிக்கிறார் என்று அவரிடம் கேட்டபோது சிரித்துக் கொண்டே சொல்கிறார், ஹோட்டலில் வாடிக்கையாளர்கள் உணவு, தங்குமிடம் மற்றும் இதர சேவைகளில் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்று பார்த்து மகிழ்கிறேன். எங்கள் ஆடை மற்றும் அழகுசாதனப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் விதம் விதமான ஆடைகள் சேகரிப்பு பணியில் ஈடுபடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்கிறார்.

தற்போது மாவட்டத்தின் உதவி ஆளுநரான குடும்ப நண்பர் கோகிலா ஜெயசீலன் அறிமுகத்துக்கு பின் 2003 இல் அவர் ரோட்டரியில் சேர்ந்தார்.

இந்த நிலையை அடைவதற்கு அவர் எதிர்கொண்ட சவால்கள் குறித்து கேட்டதற்கு, நான் ஒன்றல்ல, இரண்டல்ல, பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால், அவை படிக்கட்டுகளாகவும், இந்த நிலையை அடைய உந்து சக்திகளாகவும் அமைந்தன. ஆனால், பதவியை எட்டிப் பிடித்தவுடன் எனக்கு எதிர்ப்பே இல்லை. அனைத்து சங்கத் தலைவர்களும் எனக்கு ஆதரவு அளித்து ஒத்துழைப்பு தருகின்றனர். எனது தலைமையை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டதுடன், நான் வழங்கும் வழிகாட்டுதலையும் ஏற்றுக்கொள்கின்றனர். இது

அவர்களின் உள்ளூர் சமூகத்துக்கு மட்டுமல்ல. தனிப்பட்ட குறிக்கோளை எட்ட உதவும் என நினைக்கிறார்கள் என்றார்.

ஆனந்தஜோதி, எதிர்பார்த்தபடியே இந்த ஆண்டு மகளிர் நலன் மற்றும் அதிகாரம் அளித்தல் தொடர்பான இரு முக்கிய திட்டங்களை உறுதி செய்துள்ளார். இந்த ஆண்டு அரசு மகளிர் மற்றும் அரசு உதவி பெறும் மகளிர் பள்ளிகளில் தலா 75 கழிப்பறை தொகுதிகள் (ஒவ்வொன்றும் 10 கழிப்பறைகள் கொண்டது) கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மேலும் ஆதரவற்ற பெண்களுக்கு 50 பிங்க் நிற ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நான் பதவியேற்றதும், எனது இதயத்துக்கு நெருக்கமான ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. மாவட்டத்தில் உள்ள 130 ரோட்டரி சங்கங்கள் சார்பாக சிறப்பு குழந்தைகளுக்கான திருவிழா நடைபெற்றது. இதில் சுமார் 10,000 சிறப்புக் குழந்தைகள் பங்கேற்றனர். மேலும் இந்த ஆண்டு 850 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். 17 புதிய சங்கங்களும் பட்டயப்படுத்தப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் வளர்ச்சியில் எங்களது மாவட்டம் RID 3000 உலகில் முதலிடத்தில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

தனது ரோட்டரி பயணத்தை முழுமையாக அனுபவித்து மகிழ்ந்தாலும், மாவட்ட RYLA மற்றும் சர்வதேச RYLA தலைமை கூட்டங்களில் இளைஞர்களுடன் உரையாடியதை பெருமையாக நினைக்கிறார். இந்தியாவில் ரோட்டரியின் பலவீனம் என்ன?, ரோட்டரிக்கு இருக்கும் நன்மதிப்பு என்ன? என்று கேட்டதற்கு, மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் ரோட்டரிக்கு அதிக உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் உறுப்பினர்களின் ஈடுபாடும், பங்கேற்பும் அதிகமாக உள்ளது. எதிர்மறையான விஷயம் என்னவென்றால், நட்புக்காகவும், அன்பையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்காக மட்டுமே ரோட்டரிக்குள் வந்தோம் என்பதை ரோட்டேரியன்கள் மறந்து விடுகிறார்கள். மேலும் அவர்கள் அடிக்கடி முரண்பட்டு நிற்கிறார்கள் என்றார் ஆனந்தஜோதி.

**சுவாதி ஹெர்கல்**, 3132 ரோட்டரி மாவட்டத்தின் ஆளுநர். மின்னணுவியல் மற்றும் நிர்வாகத் துறையில் பட்டம் பெற்றவர். தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் தமது சொந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர். இளைஞர்களுடன் பணிபுரிவதை விரும்புபவர். சமூகத்திற்கு ஏதாவது திருப்பிச் செய்யவேண்டும் என்ற ஆர்வத்தால் 2000-ம் ஆண்டில் வை (RC WAI) ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். DG பதவியை அடைவதில் அவர் இரண்டு சவால்களைச் சந்திக்க நேர்ந்தது. மூத்த தலைவர்கள் பெண் தலைமைப் பதவிக்கு வருவதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாவட்டத்தில் ரோட்டரி அமைப்புக்குள் இருந்த அரசியல் சிக்கல்களை கடந்து வருவது மற்றொரு சவாலாக இருந்தது.

நான் பெண் என்பதால், சிறப்பாக செயல்படுவேனா என்பது குறித்து தொடக்கத்தில் என்மீது சங்கத்தின் தலைவர்களுக்கு சந்தேகம் இருந்து வந்தது. ஆனால், நான் சிறப்பாகவும், திறமையாகவும் செயல்பட்டு அவர்களின் நம்பிக்கையை பெற்றதால் மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்கள்



எனக்கு மரியாதை அளித்து ஆதரவு தருகிறார்கள் என்றே கருதுகிறேன் என்றார்.

சுவாதி கூறுகையில், நான் மாவட்ட ஆளுநராக பதவியேற்ற 9 மாதங்களில் மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களையும் ஈடுபாட்டில் வைத்திருந்ததையும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரித்ததையும் பெரிய சாதனையாக கருதுகிறேன். சமூகம் எதிர்கொள்ளும் பல்வேறு சமூகப் பொருளாதாரப் பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் வகையில் மாற்றத்தை உருவாக்கும் 12 திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தியதில் அவர் பெருமை கொள்கிறார். நிலையான விவசாயம், புற்றுநோயைக் கண்டறியும் பெண்களுக்கான நடமாடும் மருத்துவ கிளினிக்குகள், புதிதாக பிறக்கும் குழந்தைகளின் இறப்பை குறைத்தல், சுற்றுச்சூழலுடன் கூடிய கல்வி ஆகியவை இதில் அடங்கும்.

ரோட்டரி மூலம் மற்றவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருவது எனக்கு தனிப்பட்ட முறையில் மனநிறைவை அளிக்கிறது. எனது குடும்பம் மற்றும் நட்பு வட்டாரத்தில் என்மீதான மதிப்பு உயர்ந்துள்ளது. சமூகத்திற்கு சேவை செய்யும் அர்ப்பணிப்புள்ள தலைவராக அவர்கள் என்னை பார்க்கிறார்கள் என்கிறார் சுவாதி.

**ஆஷா வேணுகோபால்**, RID 3030 மாவட்ட ஆளுநர். வணிக மேலாண்மையில் பட்டம் பெற்றவர். 46 வயதில், புனே பல்கலைக்கழகத்தில் இதழியல் துறையில் டிப்ளோமே பட்டம் பெற்று பல்கலைக்கழகத்திலேயே இரண்டாவது ரேங்க் பெற்றதாக அவர் கூறினார். ஜெனித் மெடாபிளாஸ்ட் குழும நிறுவனத்தின் இணை இயக்குநராக இருக்கிறார். பொருள் உற்பத்தி நடைமுறைகளை கண்காணிப்பது, ஊழியர்களுடன் கலந்துரையாடுவது, பிரச்னைகள் வரும்போது அவற்று தீர்வு காண்பது தனக்கு பிடித்தமான செயல் என்கிறார் அவர். மேலும் ரேகி, கருணா மற்றும் பிராண சிகிச்சை மூலம் நோய்களை குணப்படுத்தும் செயலிலும் ஈடுபட்டு வருகிறார். மனநிலையை கட்டுப்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறைகளையும் நடத்தி வருகிறார்.

## நேர்மறை மற்றும் எதிர்மறைகள்

*இந்தியாவில் ரோட்டரி செயல்படும் விதத்தில் உள்ள நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்கள் என்ன என்று பெண் மாவட்ட ஆளுநர்களிடம் நான் கேட்டேன். அதற்கு அவர்கள் அளித்த பதில் இதுதான்:*

**சுவாதி ஹெர்கல்:** *நமது ரோட்டேரியன்கள் வலுவான உணர்வுடன் சமூக சேவை செய்கின்றனர். உறுப்பினர்களிடையே தொடர்பு மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் இருப்பது நேர்மறையான அம்சமாகும். இரண்டு எதிர்மறையான அம்சங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று திறமையில்லாதவர்கள் அதிகாரம் செலுத்துவது. மற்றொன்று சில விஷயங்களில் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாமல் செயல்படுவது.*

**ஆஷா வேணுகோபால்:** *நேர் மறையான அம்சம் என்னவென்றால், இயற்கையிலேயே நாங்கள் உணர்ச்சி வசப்படுபவர்களாக இருக்கிறோம். அதனால், சோதனையான கால கட்டங்களில் கேட்காமலேயே தேவையானதைச் செய்கிறோம். அரசியல் பெரிய அளவில் உருவாகி வருவது எதிர்மறையான அம்சமாகும். இதை விரைவில் கட்டுப்படுத்தா விட்டால், இந்தியாவில் ரோட்டரியின் வளர்ச்சிக்கு பாதகம் ஏற்படும்.*

**ஜெயஸ்ரீ மொஹந்தி:** *நேர்மறை யான அம்சம் என்னவென்றால், ரோட்டரி ஒரு தனித்துவமான வழியில் தலைமைத்துவத்தை கற்பிக்கிறது. இது ரோட்டேரியன்களின் தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கையில் பிரதிபலிக்கிறது. இது சமூக சேவைக்கான ஒருங்கிணைந்த வாய்ப்பையும், சமூகத்தில் பெருமைப் படக்கூடிய அடையாளத்தையும் ஏற்படுத்தித் தருகிறது.*

*எதிர்மறையான அம்சங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், ஒருவரின் பின்னணி தெரியாமல் அல்லது அவரது நோக்கம் என்ன என்பது தெரியாமல் அவரை ரோட்டரியில் உறுப்பினராகச் சேர்ப்பது. தனிப்பட்ட முறையில் ஈகோ மனப்பான்மையுடன் சிலர், கோஷ்டி சேர்த்து செயல்படுவதால் அடிக்கடி சர்ச்சைகள் ஏற்படுகின்றன.*

**ஆனந்தஜோதி:** *நேர்மையான அம்சங்கள் என்று சொன்னால், மற்றநாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில்தான் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகம். அதேபோல அதிக ஈடுபாட்டுடன் சேவை செய்வதும் நாம்தான். ஆனாலும் நாம் சில சமயங்களில் எதற்காக ரோட்டரியில் சேர்ந்தோம் என்கிற அடிப்படை காரணத்தை மறந்துவிடுகிறோம். இந்தியாவில் ரோட்டேரியன்கள் அடிக்கடி மோதல்களில் ஈடுபட்டு அமைதியற்றவர்களாக இருக்கிறார்கள்.*

**B C கீதா:** *இந்தியாவில் ரோட்டரி வலுவான சமூக ஈடுபாட்டுடன், பன்முகத் தன்மையுடன் செயல்படுவது நேர்மறை அம்சமாகும். ரோட்டரி சங்கங்கள் சமூகத்துடன் ஆழ்ந்த தொடர்புகொண்டுள்ளன. கல்வி, சுகாதாரம், மருத்துவம் தொடர்பாக உள்ளூர் மக்களின் தேவை அறிந்து சேவைத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.*

*இரண்டாவது சிறப்பு அம்சம், உறுப்பினர்களின் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்கின்றன. வெவ்வேறு பின்னணிகள், தொழில்கள் மற்றும் வயதினரை வரவேற்கின்றன. இந்த பன்முகத்தன்மை சங்கத்தின் செயல்பாடுகளை செழுமைப் படுத்துகிறது.*

**ரிது குரோவர்:** *முழு மாவட்டத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கும், ஒரு தலைவராக ஏற்றுக்கொள்ளப் படுவதற்கும் வாய்ப்புக் கிடைப்பது நேர்மைறையான அம்சமாகும். ரோட்டேரியன்கள் ரோட்டரி இயக்குநர்கள் மற்றும் உயர்பதவி வகிக்கும் சிலரிடம் நேரடித் தொடர்பு கொள்வது சில சமயங்களில் சிக்கலை உருவாக்குகிறது. இதை விளக்குமுற்படும்போது நமது நேரம் வீணாவது எதிரமறையான அம்சமாகும் என்றார்.*

ரோட்டரியில் சேர்ந்த விதம் குறித்து ஆஷா விளக்கினார். நான் பள்ளியில் படிக்கும்போது கைடு அமைப்பிலும், கல்லூரியில் தேசியமாணவர் படையிலும் சேர்ந்தேன். அப்போது சமூக நன்மைக்கான திட்டங்களில் நான் பங்குபெற்றேன். அவற்றில் இரத்த தானமும் ஒன்று நான் சமூகத்துக்கு ஏதாவது திருப்பித்தர வேண்டும் என்று நினைத்தேன். அதற்கு ரோட்டரிதான் மிகச் சிறந்த இடம் என்று கருதியதால் 2010-ம் ஆண்டு நாசிக் கிரேப்சிட்டி ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தேன்.

இந்த பயணத்தில் தான் எதிர்கொண்ட சவால்கள் குறித்து ஆஷா கூறுகையில், எங்கள் சங்கம் தலைமைப் பதவியில் பெண்கள் இருப்பதற்கு ஆதரவாகவே இருந்தது. எனவே சங்க அளவில் எந்த எதிர்ப்பையும் நான் சந்திக்கவில்லை. அதற்கு பதிலாக சவால்களை எதிர்கொண்டு மேலே செல்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டேன். அந்த வகையில் சங்க உறுப்பினர்களின் ஆதரவு எனக்கு எப்போதும் இருந்தது என்றார்.

நான் மாவட்ட ஆளுநராக முயற்சித்த போது தேர்தல் நடைமுறை மற்றும் பிரசாரத் திற்கு பலரும் வழிகாட்டி ஆதரவு அளித்தனர். எப்போதும் போலவே எதிரணியினர் எனக்கு எதிராக எதிர்மறை அரசியல் செய்தனர். ஆனால், தேர்தல் போராட்டத்தில் வெற்றி எனக்குத்தான். எனவே நான் பெண் என்பதால் மட்டும் மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை. எப்படியிருந்தாலும் எங்கள் மாவட்டத்துக்கு பெண் ஆளுநர் கிடைத்தது நல்லநேரம்தான் என்றார் ஆஷா.

மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களும் எனது தலைமையை ஏற்றுக்கொண்டதில் எனக்கு மகிழ்ச்சி தான். உறுப்பினர்கள் எனக்கு வசதியாகவே செயல்படுகிறார்கள். மற்ற மாவட்ட ஆளுநர்களைப் போலவே என்னையும் பாலின பாகுபாடு இல்லாமல் நடத்து கிறார்கள். மாவட்டத்தில் உள்ள கடந்தகால மற்றும் எதிர்கால தலைமைகளின் ஏற்றுக்கொள்ளும் தன்மையும், தோழர்களின் பகிர்ந்து கொள்ளும் போக்கும் மிகப்பெரிய சாதனையாகும். உறுப்பினர்கள் என்னை எப்போது தொடர்பு கொண்டாலும் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

ஊரகப் பகுதிகளில் பள்ளி செல்லும் குழந்தைகள் தினமும் நீண்ட தொலைவு நடந்து செல்ல வேண்டியிருந்தது. உடான் திட்டத்தின்கீழ் பள்ளி குழந்தைகளுக்கு 5,555 சைக்கிள்களை வழங்கியது மறக்க முடியாத திட்டமாகும். இது எனது மற்றும் எனது கணவரின் கனவுத் திட்டமாகும். மாவட்டத்தில் அனைத்து சங்கங்கள் மற்றும் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்ட நிதியுதவியுடன் இதை நிறைவேற்றினோம் என்றார்.

ரோட்டரியில் நான் காட்டிய ஈடுபாடு, சமூகத்தில் எனது நிலையை நிச்சயமாக மேம்படுத்தி யுள்ளது. சமூகத்தில் உள்ள முக்கியப் பிரமுகர்களிடம் நான் ரோட்டரி பற்றி விவாதித்துள்ளேன். நிர்வாகம் மற்றும் அரசியல் துறையில் முக்கியப் பதவியில் இருப்பவர்களிடமும் பகிர்ந்து கொண்டுள்ளேன். மேலும்பல அமைப்புகளின் பாராட்டுதலையும் பெற்றுள்ளேன். இதன் மூலம் எனது கனவு நனவாகியுள்ளது என்றார்.

**ரிது குரோவர்**, RID 3040 மாவட்ட ஆளுநர். இந்தூரைச் சேர்ந்த இவர் ஒரு எம்.பி.ஏ. பட்டதாரி மற்றும் மென்பொருள் பயன்பாட்டு வல்லுனர். 1988-ம் ஆண்டு இந்தூரில் மகளிருக்கு என பாலிடெக் கல்லூரி தொடங்கப் பட்டதற்கான முன்னோடி. பெண்களின் சமூக மேம்பாடு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தலில் ஆர்முள்ளவர். 2006-ம் ஆண்டு அவர் ரோட்டரியில் சேர்ந்தார்.

ஒரு பெண் மாவட்ட ஆளுநராக இருப்பது மிகப்பெரிய சவாலாக இருந்ததாக அவர் ஒப்புக்கொண்டார். எனது பணி தொடர்ச்சியாகவும் நிலையாகவும் இருந்ததால், மாவட்ட ஆளுநராக நான் வருவதற்கு சரியான ஆள்தான் என்பதை ரோட்டேரியன்கள் உணர்ந்து கொண்டனர். சங்கத்தின் உறுப்பினர்கள் என்னை சந்திப்பதற்கு முன்னர் வித்தியாசமான கருத்துக் களைக் கொண்டிருந்தனர். ஆனால், நான் அவர்களை சந்தித்த பிறகு தங்களது எண்ணத்தை மாற்றிக் கொண்டு என்னை சகோதரிபோல கருதினர்.

நான் திறமையானவள் என்பதை புரிந்துகொண்டதால் அனைவரும் என்னை ஆதரித்தனர் என்றாலும் மாவட்டத்தில் ஒரு பெண் உயர்ந்த பதவிக்கு வருவதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்று ரிது கூறினார்.

மாவட்டத்தில் எனது பதவிக் காலத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டன. ஆனால், கடந்த பிப்ரவரி மாத இறுதி மற்றும் மார்ச் மாத தொடக்கத்தில் நடைபெற்ற ரஹாத் (RAHAT) மருத்துவ மற்றும் அறுவைச்சிகிச்சை முகாம் தான் நான் பெருமைப்படும் வகையில் அமைந்திருந்தது. இந்த முகாமில் 97,000 நோயாளிகள் பதிவு செய்து பயன்பெற்றனர். சுமார் 450 தன்னார்வ தொண்டர்கள் முகாமில் பணி செய்தனர். இது எனக்கு திருப்திகரமான அனுபவமாக இருந்தது என்றார் ரிது குரோவர்.

எனக்கு மகிழ்ச்சியளித்த மற்றொரு சிறப்பான திட்டம், வைஷ்ணவதேவி மற்றும் அமிருதரஸுக்கு மேற் கொள்ளப் பட்ட பெஃல்லோஷிப் பயணத் திட்டம். குறிப்பாக எனது பிறந்தநாளில் தொடங்கப்பட்ட இந்த பயணத்தில் 100 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தனிப்பட்ட முறையில் சொன்னால், ரோட்டரி எனக்கு கொடுத்த மாவட்ட ஆளுநர் பதவியால், குடும்பத்திலும், நண்பர்கள் வட்டாரத்திலும், சமூகத்திலும் எனக்கு நன்மதிப்பை பெற்றுத்தந்தது. முன்பு போல பழக எனக்கு நேரமில்லை என்றாலும் அவர்கள் என்மீது நல்ல மரியாதை வைத்திருக்கிறார்கள்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

ADVT.

# BECOME A DOCTOR IN USA

## XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY



### DOCTOR OF MEDICINE

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherland

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

### DOCTOR OF VETERINARY MEDICINE

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherland

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

The session starts in May/September 2024

To apply, Visit: application.xusom.com

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712

email: infoindia@xusom.com

XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME

# சிறந்த உலகத்திற்காக TRF-க்கு தொடர்ந்து கொடுங்கள்!

V முத்துகுமரன்

ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி கொடுப்பதை நிறுத்திவிடாதீர்கள். உலகில் சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதிலும், மனிதாபிமான முறையில் செயல்படுவதிலும் தன்னார்வ தொண்டு நிறுவனமான ரோட்டரி முதலிடத்தை வகிக்கிறது. 15-வது ஆண்டாக, அறக்கட்டளைக்கான மதிப்பீட்டு தரத்தில் நான்கு நட்சத்திர குறியீட்டை நாம் பெற்று வருகிறோம். இதர சர்வேதச சேவை நிறுவனங்களின் நிர்வாகச் செலவைவிட நமது நிர்வாகச் செலவு மிக குறைவுதான். சேவை திட்டங்களின் மூலம் உலக அளவில் நாம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறோம் என்று தெரிவித்தார் TRF அறக்கட்டளைத் தலைவர் பாரி ரஸ்ஸின்.

பெங்களூருவில் RID 3191, 3192 சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பகல் விருந்துடன்கூடிய கூட்டத்தில் அவர் உரையாற்றினார். போலியோவை முழுமையாக ஒழிப்பதற்கு இன்றும் ரோட்டரி முன்னுரிமை அளித்து வருகிறது. இப்போது அந்த கொடிய நோய் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் எல்லைப் பகுதிகளில் மட்டுமே உள்ளது என்றார். உலகில் போலியோவை ஒழிப்பதற்கான ரோட்டரியின் இறுதி முயற்சிக்கு பாகிஸ்தான் சுகாதார அமைச்சரும் அந்த நாட்டின் ராணுவ ஜெனரல்களும் முழுமையாக ஆதரவு அளித்து வருகின்றனர். சுமார் 80,000 பாகிஸ்தான் ராணுவத்தினர் நமது ரோட்டரி அலுவலகங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு மட்டும் இந்த பிராந்தியத்தில் 9,00,000 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கப் பட்டுள்ளது. கடந்த ஆண்டு இரு நாடுகளிலும் தலா ஆறு குழந்தைகள் போலியோ வைரஸால் பாதிக்கப்பட்டிருந்தாலும், இந்த ஆண்டு இதுவரை போலியோவால் யாரும் பாதிக்கப்பட்டதாக தெரியவில்லை என்று அவர் கூறினார். போலியோ நோயிலிருந்து உலகம் முழுமையாக விடுபட்டால் மட்டுமே அடுத்த முன்னுரிமையில் நாம் கவனம் செலுத்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

TRF திட்டச் செயல்பாடுகள் குறித்து அவர் பேசுகையில், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஜாம்பியாவில் 6 மில்லியன் டாலர் நிதியுதவியுடன் மலேரியா ஒழிப்புத் திட்டங்களைத் தொடங்கினோம். (ரோட்டரி இன்டர்நேஷனல், கேட்ஸ்



*TRF அறங்காவலர் தலைவர் பேரி ரசினுக்கு பெங்களூரில் பாராட்டு விழா.* **இடமிருந்து:** *PDG சுரேஷ் ஹரி, நிகழ்ச்சித் தலைவர் ரவிசங்கர் டகோஜு, TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்டியா, DG உதய்குமார் பாஸ்கரா (RID 3191), DRFC சுரேஷ் ஆம்பிலி (3192), DG ஸ்ரீனிவாஸ் மூர்த்தி (3192) மற்றும் RIDN K P நாகேஷ்.*

அறக்கட்டளை மற்றும் வேர்ல்டு விஷன் ஆகிய அமைப்புகள் தலா 2 மில்லியன் டாலர் பங்களித்தன.) இப்போது ஆப்பிரிக்க நாடான ஜாம்பியாவில் மலேரியா 90 சதவீதம் ஒழிக்கப்பட்டு விட்டது. ஜாம்பியாவின் வெற்றியைத் தொடர்ந்து கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் வேர்ல்டு விஷன் ஆகியவை ஆப்பிரிக்காவில் மேலும் நான்கு நாடுகளுக்கு திட்டத்தை விரிவுபடுத்த 10 மில்லியன் டாலர் நிதியுதவி செய்ய தயாராக உள்ளன. நைஜீரியாவில் தாய், சேய் இறப்பு விகிதத்தை தடுக்கும் திட்டத்திலும் எகிப்தில் கர்ப்பபைவாய் புற்றுநோய் தடுப்பு திட்டத்திலும் கவனம் செலுத்தி வருகிறோம், என்றார்.

### உயர்ந்த இலக்குகள்


RI 2023–24 ஆண்டில், TRF 500 மில்லியன் டாலர்களை நன்கொடை இலக்காக நிர்ணயித்தது. வருடாந்திர நிதி இலக்கு $1.5 மில்லியன். போலியோ ஒழிப்புக்காக TRF அறக்கட்டளையின் 50 மில்லியன் டாலர் நிதிக்கு இணையாக கேட்ஸ் அறக்கட்டளை 50 மில்லியன் டாலர் வழங்கும். இதன் மூலம் நடப்பு ஆண்டு ஜனவரியில் 200 மில்லியன் டாலர் இருப்பு வைக்கப்படும். மேலும் TRF 60 மில்லியன் டாலரை ரொக்கமாகவும், 80 மில்லியன் டாலரை இதர செயல்பாடுகளுக்காக எண்டௌவ்மென்ட் நிதி மூலம் திரட்டும் என நம்புகிறது. அதன் ஒரு பகுதியை நீங்கள் அந்தந்த திட்டங்களுக்கு அனுப்பப்படும் பரிசு களாக திரும்பப் பெறுவீர்கள்.

கோவிட் தொற்றுக்காலத்தில், உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்கள், தொற்று பரவல் தடுப்பு திட்டங்களுக்காக 39 மில்லியன் டாலர் மதிப்புள்ள 2066 சர்வதேச திட்டங்களுக்கு TRF ஒப்புதல் அளித்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் அறக்கட்டளை 6 மில்லியன் மக்களுக்கு வாழ் வளித்துள்ளது. எனவே நாம் செய்யும் சேவைகளைத் தொடர்ந்து செய்வோம். அப்போது தான் ரோட்டரி அதிக மக்களைச் சென்றடைந்து அவர்களின் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அவர் விளக்கினார்.

இந்திய ரோட்டேரியன்கள் செய்துவரும் பலதரப்பட்ட பணிகளால் ஈர்க்கப்பட்ட அவர், நீங்கள், உலகில் மற்றவர்களைவிட வித்தியாசமாகச் செயல்படுகிறீர்கள் என்று கூறினார்.

TRF அறக்கட்டளை துணைத் தலைவர் பரத் பாண்டியா தமது உரையில், ரோட்டேரியன்களின் தாராளமனப்பான்மை கொண்ட ஆதரவு இல்லாமல் TRF வளர முடியாது. அடிமட்டத்தில் உள்ளவர்கள் ஒருங்கிணைந்து கொடுக்கத் தொடங்க வேண்டும். நாம் கொடுக்கும் நிதி எங்கே செல்கிறது, எப்படி உலகில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பது நம் எல்லோருக்கு தெரியும் என்றார். கார்ப்பொரேட் நிறுவனங்கள் தங்கள் லாபத்தில் 2 சதவீதத்தை சமூக பொறுப்புணர்வு திட்டங்களுக்கு செலவிட வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதால் அந்த நிதியைப் பெறுவதில் RID 3191 மற்றும் 3192 இரண்டும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். நல்ல கவர்ச்சிகரமான திட்டங்களை வகுத்து கார்ப்பொரேட் நிறுவனங்களை அணுகினால் தற்போது 3191 மற்றும் 3192 மாவட்டங்கள் பெறும் 2 மில்லியன் டாலர் நிதியை 5 மில்லியன் டாலராக உயர்த்தி அறக்கட்டளை மூலம் திட்டங்களை செயல்படுத்த முடியும் என்று அவர் கூறினார்.

2020-ம் ஆண்டு ஜிம்பாப்வேயில் மருத்துவக் குழுவிலான பணிக்காக சென்றிருந்தபோது தாம் 7 அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டதை பாண்டியா நினைவுகூர்ந்தார். 10 வயது சிறுவனின் வயிற்றுப் பகுதி கூர்மையான ஆயுதத்தால் துளைக்கப்பட்டு அவனது குடல் பலத்த சேதமடைந்திருந்தது. ஹராரேயிலிருந்து 5 மணி நேர பயணத்தில் முடாரே என்னும் கிராமத்தில் இருந்த அந்த சிறுவன் உடனடியாக மருத்துவ முகாமுக்கு அழைத்து வரப்பட்டான். ஆபத்தான நிலையில் இருந்த அந்த சிறுவனுக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. அவன் உயிர் பிழைப்பானா, மாட்டானா என்பதே கேள்விக்குறியாக இருந்தது. நல்லவேளையாக சிகிச்சை முடிந்த இரண்டு நாளில் அவனுக்கு நினைவு திரும்பியது, காய்ச்சலும் நின்றிருந்தது. தனது மகனை காப்பாற்றியதற்காக தாய்,




RI *மாவட்டங்கள்* 3191 *மற்றும்* 3192 TRF *அறங்காவலர் தலைவர் ரசினுக்கு காசோலைகளை வழங்குகின்றன.* **இடமிருந்து:** RID 3191 *செயலாளர் ரமேஷ் குமார்,* PDG *ஹரி,* DG *மூர்த்தி,* DRFC *ஆம்ப்ளி,* TRF *அறங்காவலர் துணைத் தலைவர் பாண்டியா,* DG *பாஸ்கரா,* RIDN *நாகேஷ்,* DRFC *அனில் குப்தா* (3191), TRF *- முதன்மை பரிசுகள் இயக்குனர் ஹார்வி நியூகாம்ப்* III, PDG*க்கள் மஞ்சுநாத் ஷெட்டி மற்றும்* H R *ஆனந்த்.*

எனது கையை பிடித்துக் கொண்டு நன்றி தெரிவித்தார். எனவே, TRF-க்கு கொடுப்பது வெறும் நன்கொடை அல்ல. அது எதிர்காலத்திற்கான முதலீடு. அறக்கட்டளை என்பது ஒருவரின் சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான உந்துசக்தி யாகும் என்றார்.

இந்த நிகழ்ச்சியின் நோக்கம் TRF நன்கொடையாளர்களின் பெருந்தன்மையை கொண்டாடு வதும், கார்ப்பொரேட் உலகத்துடன் ரோட்டரியின் உறவை விரிவு படுத்துவதும் ஆகும் என்று நிகழ்ச்சியின் தலைவரும், TRF ரூ.100 கோடி நன்கொடை அளித்தவருமான ரவிசங்கர் டகோஜு தெரிவித்தார். ரோட்டரி, இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையே பாலமாக செயல்படுகிறது. மிகப்பெரிய TRF திட்டங்களைச் செயல்படுத்த கார்ப்பொரேட் நிறுவனங்களை ஈடுபடுத்த வேண்டும் என்றார். RIDN K P நாகேஷ் பேசுகையில், 500 AKS உறுப்பினர்களுடன் அமெரிக்கா முன்னிலை வகிக்கிறது. 200-க்கும் மேலான ஏகேஎஸ் உறுப்பினர்களுடன் இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அடுத்து கொரியா, தாய்வான் ஆகியவை வரிசையில் உள்ளன. ரவிசங்கர் போல மில்லியன் டாலர் நன்கொடையாளர்கள் (ரூ.8 கோடி) நமக்குத் தேவை. அடுத்த இரண்டு ஆண்டுகளில் குறைந்த பட்சம் 100 நன்கொடையாளர்களை அடையாளம் காண நாங்கள் இலக்கு வைத்துள்ளோம் என்று இந்திய AKS உறுப்பினர்கள் சங்கத்தின் புதிய தலைவராக பாரி ரஸ்ஸினால் நியமிக்கப்பட்ட நாகேஷ் தெரிவித்தார். AKS இந்திய சங்கத்தின் தலைவராக மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ரவிசங்கர், அதன் தூதுவராக நியமிக்கப்பட்டார். 2019 முதல் AKS பிரபலமான அவர், இதுவரை 75 AKS உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார்.

புதிதாக சேர்க்கப்பட்ட AKS உறுப்பினர்கள் மிலிந்த் தேஷ்பாண்டே மற்றும் வேலுபதி (3192) RIDN நாகேஷ் (3191), 32 பெரு நன்கொடையாளர்கள், 42 போலியோ ஒழிப்பு ஆதரவாளர்கள் 40 நிறுவனங்கள் இன்ப்ளோ டெக்னாலஜிஸ் (ரூ.1.5 கோடி), இண்டிக் எலெக்ட்ரானிக்ஸ் (ரூ. 40 லட்சம்), இன்டெல் (ரூ.40 லட்சம்), விஷால் இன்ப்ராஸ்டிரக்சர் (ரூ.35 லட்சம்), டைடன் இண்டஸ்ட்ரீஸ் (ரூ.32 லட்சம்), கேடபிள்யூகே ரெஸிஸ்டர்ஸ் (ரூ.28 லட்சம்) உள்ளிட்டோர் பாரி ரஸ்ஸினால் கௌரவிக்கப் பட்டனர். DGs உதயகுமார் பாஸ்கரா (3191) மற்றும் வி.ஸ்ரீனிவாஸ மூர்த்தி (3192) ஆகியோர் பாராட்டப்பட்டனர். இரண்டு மாவட்டங்களிலிருந்தும் TRF பங்களிப்பாக மொத்தம் $2.4 மில்லியன் மதிப்புக்கான காசோலைகள் TRF-அறங்காவலரிடம் வழங்கப்பட்டது.

படங்கள்: V முத்துகுமரன்

---

# IPDG முத்து அவர்களைப் பாராட்டும் RID 3212

**ரோட்டரி செய்திக்குழு**

2022–23ல் IPDG VR முத்து அவர்கள் வழங்கிய ஊக்கமளிக்கும் தலைமைக்கென அவரைப் பாராட்டும் ஒரு நிகழ்வு மதுரையில் நடைபெற்றது. PRIP K R ரவீந்திரன், PRID C பாஸ்கர், RIDN M முருகானந்தம், RID 3212 DG R முத்தையாப்பிள்ளை ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வுக்கு DGE மீரான்கான் சலீம், DGN J தினேஷ் பாபு, முன்னாள் உதவி ஆளுநர் Pioneer S மகேஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தார்கள்.



**இடமிருந்து:** PRID C *பாஸ்கர்,* DG R *முத்தையா பிள்ளை,* PRIP K R *ரவீந்திரன்,* Pioneer *மகேஸ்வரன்,* IPDG V R *முத்து,* RIDN M *முருகானந்தம் மற்றும்* DGN J *தினேஷ் பாபு.*

TRFக்கு 520,021.93 பங்களித்து AKS Chair Circle உறுப்பினராக முன்னேறியுள்ள IPDG முத்து தன் குழுவையும் TRFக்குத் தாராளமாகப் பங்களிக்க ஊக்கமளித்தார். இவருடைய பொறுப்புக்காலத்தின் போது இந்த மாவட்டம் TRFக்கு $861,634.50 பங்களித்தது. PRIP ரவீந்திரன் டுவிட்டரில் “$500Kக்கு மேல் பங்களித்துள்ள AKS உறுப்பினரான இவருடைய தாராள மனத்தால் ஆயிரக்கணக்கானோர் பலன் பெற்றார்கள்” என்று பாராட்டினார்.

சென்ற ஆண்டு, 2,286 ரோட்டரி யன்கள் TRFக்குப் பங்களித்தார்கள், எங்கள் மாவட்டத்தில் இப்படி நடப்பது அநேகமாக இதுதான் முதன்முறை என்றார் DGN பாபு. இந்த நிகழ்வில் மகேஸ்வரன் AKS உறுப்பினராக உறுதியளித்தார். IPDG முத்து மாவட்ட ரோட்டரியன்களுடைய “தொடர்ந்த ஆதரவுக்கு” நன்றி தெரிவித்தார், “அது இல்லாவிட்டால் இந்தச் சாதனைகள் சாத்தியமாகியிருக்காது.” RIDகள் 3212 மற்றும் 3000ன் PDGகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.■



# 2025–27 பகுதிகள் 4,5,6,7க்கான RI இயக்குநர்கள்



RIDN M *முருகானந்தம்*

RIDN K P நாகேஷ்

முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் K P நாகேஷ் (RID 3191), M முருகானந்தம் (RID 3000) இருவரையும் 2025–27க்கான இயக்குநர்களாக அறிவித்தார் RI இயக்குநர் கார்டன் மெக்கினல்லி.

RIDN நாகேஷ் 2025–27ல் 4, 7 பகுதிகளுக்கான இயக்குநராகச் சேவையாற்றுவார். RC பெங்களூர் ஹைகிரவுண்ட்ஸ் உறுப்பினரான இவர் 2015–16ல், பிரிக்கப்படாத ரோட்டரி மாவட்டம் 3190ன் DGஆகச் சேவையாற்றினார், பெங்களூரில் நடைபெற்ற 2024 ரோட்டரி மண்டல மாநாடு, RISEன் தலைவராகச் செயல்பட்டார்.

RIDN முருகானந்தம் 5, 6 பகுதிகளுக்கான இயக்குநராகச் சேவையாற்றுவார். இவர் RC BHEL சிட்டி திருச்சிராப்பள்ளி உறுப்பினர் ஆவார். 2016–17ல் இவர் DGஆகச் சேவையாற்றினார், சென்னையில் நடைபெற்ற 2022 மண்டல மாநாட்டின் தலைவராகச் செயல்பட்டார். நாகேஷ், முருகானந்தம் இருவரும் ஆர்ச் கிளம்ஃப் சமூக உறுப்பினர்கள்.■

# கோவையில் ரோட்டரி மலர்க் கண்காட்சி

ரோட்டரி செய்திக்குழு

RID 3201ன் ஆறு RCகள் (கோயம்பத்தூர் டவுன், டௌன்-டவுன், அப்டவுன், டெக்ஸ்சிட்டி, சென்டென்னியல், தொண்டாமுத்தூர்) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, 23 ஏக்கர் கோவை தாவரவியல் பூங்காவில் மூன்று நாள் கோவை மலர்க் கண்காட்சியை நடத்தினார்கள். வேளாண்மை அமைச்சர் M R K பன்னீர் செல்வமும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் S முத்துசாமியும் தொடங்கிவைத்த இந்தக் கண்காட்சியை 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டார்கள் என்றார் திட்டத் தலைவர் C நாகராஜ். பூங்கா முழுவதும் பெரிய LED திரைகளில் இந்த மாவட்டத்தின் தாக்கமுள்ள சேவைத் திட்டங்கள் முதன்மையாகக் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த மாவட்டம் ஜனவரி 2025ல் இதேபோன்ற ஒரு கண்காட்சியை நடத்தத் திட்டமிடுகிறது என்றார் திட்டச் செயலாளர் A காட்வின். DG T R விஜயகுமார் ரோட்டரி தொழில் சார்ந்த மேன்மை விருதைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் V கீதாலட்சுமிக்கு வழங்கினார்.

PDGகள் A V பதி, சூரியச்சன், மற்றும் பிற ரோட்டரி சங்கத்தினர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.■



RID 3201 *ரோட்டேரியன்கள்* TNAU *துணைவேந்தர்* V *கீதாலட்சுமி (மையம்) மற்றும் விவசாய அமைச்சர்* M R K *பன்னீர்செல்வம் (இடதுபுறம்) ஆகியொருடன் மலர் கண்காட்சியில் .*




TRF தலைவர் பேரி ரஸ்ஸின், இந்த வருடம் AKS உறுப்பினராக உறுதியளித்ததற்காக RRFC N சுப்பிரமணியம் மற்றும் அவாது துணைவியார் லலிதாவை பாராட்டினார்.மேலும் (இடமிருந்து) TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா, RIPR அலிஸ்டெய்ர் சீல், DG ஜிதேந்தர் குப்தா மற்றும் அவாது மனைவி தீப்தி, மற்றும் ஃபியோனா சீல், ஆகியோரும் உள்ளனர்.

# TRF தலைவரின் இந்திய வருகை

சமீபத்தில் TRF அறங்காவலர் தலைவர் பேரி ரஸ்ஸின் இந்தியாவில் தில்லி, புணே, பெங்களூரு, கொல்கத்தா, நேபாளத்தில் காத்மண்டு ஆகிய நகரங்களுக்கு வந்திருந்தார்.

தில்லியில் (RID 3011), ‘மில்லியனில் ஒருவர்’ நிகழ்ச்சியில், ரஸ்ஸின் RRFC Dr N சுப்ரமணியன் உள்ளிட்ட மூன்று புதிய AKS உறுப் பினர்கள், மிகப் பெரிய கொடை யாளர்களைப் பெருமைப்படுத்தினார். இந்த மாவட்டச் சங்கங்களின் 100% பங்களிப்பை அவர் பாராட்டினார்.

ரஸ்ஸின், TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்ட்யா, RID 3131 DG மஞ்சு ஃபாட்கே மூவரும், புணே-யில் உள்ள பெல்ரைஸ் இன்டஸ்ட்ரீஸில் நடைபெறும் பயிலகத்துக்கு வந்தார்கள். இங்கு மாணவர்களுக்குப் வெல்டிங் திறன்களில் பயிற்சி யளிக்கப்படுகிறது. இந்த மாவட்டம் பெல்ரைஸுடன் இணைந்து இந்தத் திறன் வளர்ச்சித் திட்டத்தை நடத்துகிறது, இளைஞர்களுக்குத் தொழில் திறன்களை வழங்குகிறது, பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும் அவர்களுக்கு வேலையும் வழங்குகிறது. RI வழங்கும் சில்வியா விட்லாக் தலைமை விருது பெற்ற DG மஞ்சு இங்கு பாராட்டப்பட்டார்.

கொல்கத்தாவில், RI இயக்குநர் அனிருத்தா ராய்சௌத்ரி கூட்டிய பல மாவட்ட நிகழ்வில் TRF தலைவர் பேசினார். இந்த நிகழ்வில், பங்குபெறும் மாவட்டங்களிலிருந்து ஐந்து புதிய AKS உறுப்பினர்களும் மிகப் பெரிய கொடையாளர்களும் பெருமைப்படுத்தப்பட்டார்கள்.■








*TRF துணைத் தலைவர் பாண்டியா RID 3131 DG மஞ்சு ஃபாட்கே மற்றும் அவரது கணவர் விஷ்வாஸ் உடன்.*



*TRF தலைவர் ரசின், TRF துணைத் தலைவர் பாண்டியா மற்றும் DG மஞ்சு ஆகியோர் புனேவில் உள்ள பெல்ரைஸ் இண்டஸ்ட்ரீஸில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் ஊழியர்களுடன். PDGகள் தீபக் ஷிகர்பூர் (வலது, பின்வரிசை) மற்றும் ஷைலேஷ் பலேகர் (DG மஞ்சுவிற்கு பின்னால்) ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

# மாவட்ட தலைவர்களுக்கு பயிற்சி பட்டறை

ஜெய்ஸ்ரீ

போலி சங்கங்களை உருவாக்க வேண்டாம், தேர்தல் சர்ச்சைகள் மூலம் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என்று டெல்லியில் நடைபெற்ற திஷா பயிற்சி மற்றும் இலக்கு அமைக்கும் கூட்டத்தில் RI இயக்குநரும் ஒருங்கிணைப்பாளருமான ராஜு சுப்ரமணியன் கூறினார். RI-க்கு அனுப்பப்படும் தேர்தல் தொடர்பான புகார்களை எடுத்துக்காட்டிய அவர், உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்ட போதிலும், அறக்கட்டளை வழங்குவதில் 2வது இடத்தில் இருந்தபோதிலும், உலகளவில் நம் மதிப்பை நாம் அழித்து வருகிறோம். நமது கேவலமான அரசியல் புதிய உறுப்பினர்களைத் தள்ளி வைக்கிறது. உங்கள் மாவட்டத்திற்குள்ளேயே உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுங்கள், அதை RI தலைமையகத்திற்கு கொண்டுசென்று பெரிதாக்க வேண்டாம். வாக்குகளை அதிகரிப்பதற்காக உருவாக்கப்படும் போலி சங்கங்களை தடுக்க, புதிய சங்கங்களை உருவாக்குவதற்கான சங்க உறுப்பினர் படிவத்தில் DG, DGE மற்றும் DGN கூட்டாக கையொப்பமிட வேண்டும் என்று அவர் விளக்கினார்.

குழுவாதம் மற்றும் விருப்பு வெறுப்பு ஆகியவற்றை சாடி RI இயக்குனர் கூறுகையில்: DRFC-ஆக, உங்கள் DDF-ல் கூடுதல் பணம் அல்லது மானியம் இருந்தால் போலியோ நிதிக்கு நீங்கள் கையெழுத்திட மறுக்கக்கூடாது. பதவிகள் பதவிகளுக்காக அல்ல, நம் நிறுவனத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக," என்றார்.

திஷா இந்த ஆண்டு செயல் திட்டத்தை அங்கீகரித்து செயல் படுத்துவதில் கவனம் செலுத்தியது, மேலும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மாவட்டத்தின் தலைமைக்கு இடையே சிறந்த பிணைப்பு மற்றும் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக, DGEகள், DGNகள் மற்றும் DGND-களின் ஈடுபாட்டுடன் 'மூன்று ஆண்டு கால இலக்குகளை' அமைப்பதில் கவனம் செலுத்துகிறது. "ஒரு குழுவாக இணைந்து செயல்படுவதே இதன் நோக்கமாகும், இதன் மூலம் தனிநபர்களாக தனியாக வேலை செய்வதை விட அதிகமாக சாதிக்க முடியும்," என்று அவர் கூறினார். நிகழ்வுக்கு முன்னதாக, ஜூன் 2027-ல் முடிவடையும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர்களின் இலக்குகளை உருவாக்குவதற்காக, உறுப்பினர் மற்றும் அறக்கட்டளை வழங்குதல் பற்றிய ஐந்தாண்டு தரவு உள்வரும் ஆளுநர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

மேலும் "இலக்குகளை நிர்ணயிக்கும் இந்த வருடாந்திர அம்சம் உலகின் நம் பகுதிக்கு தனித்துவமானது. DGEக்கள் தங்கள் DRFCகள், DPICகள் மற்றும் DRCகளுடன் ஒவ்வொரு ஆண்டும் சந்தித்து இலக்குகளை நிர்ணயம் செய்யும் இதுபோன்ற ஒரு திட்டத்தை நாம் கொண்டிருப்பதை பல நாடுகள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. என கூறினார்.

மேஜிக் ஆஃப் ரோட்டரி என்ற தலைப்பில் RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி பேசுகையில், அமைதியை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிப்போம். ரோட்டரியின் மேஜிக் நல்லிணக்கத்தில் செழித்து வளரும் சமூகங்களில் உள்ளது, மேலும் அதன் நீடித்த பலம் தொடர்ச்சியையும் மாற்றத்தையும் சமநிலைப்படுத்துவதில் உள்ளது. ரோட்டரியின் பாரம்பரியத்தில் பெருமிதம் கொள்வோம், அதே நேரத்தில் மாற்றத்தைத் தழுவி, நாம் சிறப்பாகச் செய்வதைத் - உலகில் நல்லதைச் செய்வது- தொடருவோம் என கூறினார்.



RID *ராய்சௌத்ரி, அறங்காவலர் துணைத் தலைவர் பாண்டியா,* RIDN *நாகேஷ்,*
PRID A S *வெங்கடேஷ், திஷா தலைவர் ஜெயின் மற்றும்* PDG *மாதவ் சந்திரன்.*



வலமிருந்து: *திஷா செயலாளர் குர்ஜித் சிங் செகோன், TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்டியா, RIDs அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ராஜு சுப்ரமணியன், அவரது மனைவி வித்யா, RIDN K P நாகேஷ், திஷா தலைவர் ஷரத் ஜெயின் மற்றும் அவரது மனைவி ருச்சிகா.*

TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்டியா, போலியோ ஒழிப்பு முதலிடத்தில் உள்ள அறக்கட்டளையின் பத்து முன்னுரிமைகளை பட்டியலிட்டார். “உலகிலிருந்து போலியோவை அழிப்பதில் முன்பை விட நாம் நெருக்கமாக இருக்கிறோம். ஆனால், போலியோ பரவும் நாடுகளில் தொடரும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முதுகெலும்பாக இருக்கும் போலியோ நிதிக்கு பங்களிப்பதில் ரோட்டேரியர்கள் மத்தியில் மிகுந்த சோம்பல் உள்ளது. போலியோ நிதியானது கேட்ஸ் அறக்கட்டளையின் பங்களிப்பை விட இரண்டு மடங்கு அதிகமாக ஈர்ப்பதில் உதவுகிறது. ஆனால், நமது நிதியில் பற்றாக்குறை ஏற்பட்டால் உலகம் மீண்டும் போலியோ நோயின் எழுச்சியைக் காணலாம் என்று அவர் எச்சரித்தார்.

அவர் குறிப்பிட்ட மற்ற முன்னுரிமைகளில் பீஸ் ஃபெலோஸ் திட்டத்தின் மூலம் அமைதியை மேம்படுத்துதல் மற்றும் ரோட்டரி அமைதி மையங்கள், Programs of Scale திட்டங்களுக்கு ஆதரவளித்தல், கூட்டாண்மைகளை மேம்படுத்துதல், பால் ஹாரிஸ் சொசைட்டி, மானியங்கள், ஆண்டு மற்றும் பணிக்கொடை நிதிகள் மற்றும் களப்பணிகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். CSR இந்தியா மானியங்களில் கவனம் செலுத்துமாறும், TRFக்கு நன்கொடை அளிப்பவர்களின் எண்ணிக்கையை 20 சதவீதமாக உயர்த்துமாறும் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர்களை அவர் வலியுறுத்தினார். “இந்தியாவில் ஆறு மாவட்டங்கள் மட்டுமே 100 சதவிகிதம் வழங்கும் சங்கங்களாக உள்ளன, மேலும் ரோட்டரி சங்கங்களை பங்கேற்க வைக்க நாம் உழைக்க வேண்டும்’’ என்று அவர் கூறினார்.

2025-ம் ஆண்டிற்குள் நன்கொடை நிதிக்கான $2.025 பில்லியன் இலக்கை அடைய உதவுமாறு பிரதிநிதிகளை பாண்டியா வலியுறுத்தினார் – 1 பில்லியன் உண்மையான பங்களிப்பு மற்றும் 1.025 பில்லியன் தருவதற்கான வாக்குறுதிகள். நம்மிடம் 1 பில்லியன் டாலர் பங்களிப்பு இருக்கும்போது TRF-ன் ஆற்றலைக் கற்பனை செய்து பாருங்கள். ஒவ்வொரு வருடமும் செலவழிக் கக்கூடிய வருமானம் குறைந்தது 50 மில்லியனாக இருக்கும், மேலும் நாம் ஒன்றல்ல, ஐந்து Programs of Scale திட்டங்களைச் செய்ய முடியும். மார்ச் 2024 நிலவரப்படி TRF மொத்தமாக $1.651 பில்லியன் நன்கொடை நிதியில் பெற்றுள்ளது என்று அவர் கூறினார்; “நம் இலக்கில் இருந்து $374 மில்லியன் டாலர் குறைவாக உள்ளோம்.’’

2019-ல் தொடங்கப்பட்ட ப்ராஜெக்ட் பாசிட்டிவ் ஹெல்த் திட்டத்தில் மீண்டும் கவனம் செலுத்துமாறு மாவட்டத் தலைவர் களுக்கு அவர் பரிந்துரைத்தார். “இன்று போரை விடவும் பயங்கர வாதத்தை விடவும் சர்க்கரையும் உப்பும் மக்களைக் கொல்கின்றன,’’ என்று அவர் கூறினார். அறுபது சதவீத இந்தியர்கள் நீரிழிவு, சிறுநீரகம் அல்லது இதய நோய்கள் போன்ற வாழ்க்கை முறை நோய்களால் இறக்கின்றனர். இரத்த சர்க்கரை, BP மற்றும் உடல் நிறை குறியீட்டெண் தொடர்பான அளவுருக்களை தொடர்ந்து சரிபார்ப்பதன் மூலம் இதை சமாளிக்க முடியும். “திடீர்’’ மாரடைப்பு என்று



RID *ராஜு சுப்ரமணியன் (கடைசி வரிசை, மையம்)* DGE*களுடன்.*

எதுவும் இல்லை; அதற்கு பல வருட தயாரிப்பு தேவைப்படுகிறது. தொற்றா நோய்கள் அமைதியான கொலையாளிகள் என்று அவர் அவதானித்து மாவட்டத் தலைவர்களை தங்கள் பிராந்தியத்தில் சுகாதார முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் திட்டமிட ஊக்குவித்தார்.

PRID A S வெங்கடேஷ், பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் பற்றி பேசுகையில், DEI பாலின சமத்துவத்தை நிவர்த்தி செய்வதோடு நின்றுவிடக்கூடாது என கூறினார். “நீங்கள் பாகுபாடு காட்டாமல் அனைத்து அம்சங்களிலும் உள்ளடக்கியவராக இருக்க வேண்டும். உங்கள் சங்கம் ஊனமுற்றோர் அல்லது வயதானவர்கள் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும், மேலும் அனைத்து உறுப்பினர்களுக்கும் வசதியாக இருக்க வேண்டும். அது அதன் சமூகத்தின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்க வேண்டும். பாலின சமத்துவம் தலைமை பதவிகள், குழுக்கள் மற்றும் நம் சங்கங்களில் பிரதிபலிக்க வேண்டும். அனைத்து நிலைகளிலும் பெண்களை சேர்க்க உங்கள் மன நிலையை மாற்றிக் கொள்ளுங்கள் என்றார். பெண்களுக்கு மார்பக புற்று நோய் மற்றும் மார்பக ஆரோக்கியத்தை நிர்வகிக்க உதவும் செயலியான (Dear Mamma) அறிமுகம் செய்யப்பட்டது. இந்த செயலி பயனரை சுய பரிசோதனை மூலம் வழிநடத்துகிறது மற்றும் நினைவூட்டல்களை அமைக்க உதவுகிறது. இது சுவிட்சர்லாந்தின் தி டியர் அறக்கட்டளையின் திட்டமாகும்.

DISHA தலைவராக PDG ஷரத் ஜெயின் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

படங்கள்: ஜெய்ஸ்ரீ

## RNT’s-ன் செயற்குழு உறுப்பினர்கள் — 2024–25



ஜெய்ஸ்ரீ

**இடமிருந்து:** RID 3192 DGE *மகாதேவ் பிரசாத் (தலைவர்)*; RID 3000 DGE *ராஜா கோவிந்தசாமி (பொருளாளர்)*; RID 3261 DGE *அகில் மிஸ்ரா (செயலாளர்) மற்றும்* RID 3056 DGE *ராக்கி குப்தா (ஆலோசகர்).*

# ஹைதராபாதில், பிறந்த குழந்தைகளுக்கான ICUவை மேம்படுத்தியது ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

ஹைதராபாத் நிலௌஃபர் மருத்துவ மனையின் புதிதாகப் பிறந்த குழந்தை களுக்கான ICUவுக்கு (NICU) தீவிர நோய் கொண்ட புதிதாகப் பிறந்த குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கான நவீன மருத்துவக் கருவிகள் கொடையளிக்கப்பட்டுள்ளன. RC குளோபல் விஜார்ட்ஸ், அமெரிக்கச் சங்கங்களான RCகள் சிம்ஸ்பரி-கிரான்பை, RID 7890, லிவர்மோர், 5170, வெஸ்ட்வுட் வில்லேஜ், RID 5280 உடன் இணைந்த பன்னாட்டு நல்கையின் வழியாக RC ஹைதராபாத் மாவெரிக்ஸ், RID 3150, இந்த NICUவை மேம்படுத்தியுள்ளது.

மாவட்டச் சேவைத் திட்டங்கள் தலைவர் சுரேன் பொருரி, DRFC K பிரபாகர் வழிகாட்டுதலின்படி, புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான சிகிச்சை வசதிகளை மேம்படுத்துகிற ரூ.48 லட்சம் மதிப்புள்ள கருவிகள் NICU-வுக்குக் கொடையளிக்கப்பட்டன.

1,200 படுக்கைகளைக் கொண்ட, ஆசியாவின் மிகப் பெரிய மருத்துவ மனைகளில் ஒன்றான இந்த மருத்துவமனை மகப்பேறியல், குழந்தை நோயியல், தாய், சேய் மருத்துவத்தில் மேம்பட்ட மருத்துவச் சேவைகளை வழங்கிப் புகழ் பெற்றுள்ளது. இங்கு ஒவ்வொரு நாளும் 1,000 குழந்தைகளுக்கு இலவச OPD பராமரிப்பு வழங்கப்படுகிறது, இதன் NICU-வில், மாதந்தோறும், புதிதாகப் பிறந்த 700 குழந்தைகளுக்குத் தீவிர சிகிச்சை யளிக்கப்படுகிறது.

“இந்தத் திட்டத்தின் நோக்கம், விரைவான சிகிச்சை, குழந்தை பிறப்பதற்கு முன்பும் பின்பும் வழங்கப்படும் பராமரிப்பை மேம்பட்ட முறையில் கண்காணித்தல், புதிதாகப் பிறந்த குழந்தையின் சூழலை இன்னும் செயல்திறனுடன் மதிப்பிடுதலின் வழியாக, இந்த NICU-வின் அதிக ஆபத்துள்ள பிரசவங்களுக்குச் சிகிச்சை அளிக்கிற திறனை மேம்படுத்துவதுதான்” என்றார் RC ஹைதராபத் மாவரிக்ஸ் தலைவர் P வனஶ்ரீ.

இந்தத் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் சராசரியாக 300க்கும் மேற்பட்ட அதிக ஆபத்துள்ள குழந்தைகள் பலன் பெறுவார்கள்.■



**மேலே:** *நிலோஃபர் மருத்துவமனையில்* RC *ஹைதராபாத் மேவரிக்ஸ் நிறுவிய* NICU.

**கீழே:** NICU-*ல் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் ஒரு குழந்தை.*



# இலங்கையில் உள்வரும் சங்கத்தலைவர்கள் நேர்மறையான தாக்கத்திற்கு தயாராகிறார்கள்

கிரண் ஜெஹரா

நாம் பட்டு உடுத்திய அல்லது சூரிய ஒளியில் குளித்த உலகில் வாழவில்லை; மாறாக, நாம் வாழும் உலகம் தினசரி வளரும் சவால்களால் பொறிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றம், உக்ரேனில் ஆக்கிரமிப்பு, வர்த்தக வழிகளைத் தடுப்பது மற்றும் உலகளாவிய கப்பல் போக்குவரத்தில் இடையூறு ஆகியவற்றால் உள்ளூர் பொருளாதாரங்கள் பேரழிவிற்குள்ளாகியுள்ளன. இந்த சோதனைகளுக்கு மத்தியில், நீங்கள் சங்கத்தலைவர்களாக உங்கள் பாத்திரங்களில் அடியெடுத்து வைக்கும்போது அது எளிதாக இருக்காது என்று இலங்கையின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற PETS கருத்தரங்கில் RID 3220-லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50க்கும் மேற்பட்ட சங்கத் தலைவர்களிடம் உரையாற்றிய PRIP K R ரவீந்திரன் கூறினார். இந்த ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணம் வடமாகாண ஆளுநர் P S M சார்ல்ஸும் கலந்துகொண்டார்.

PETS நடத்த யாழ்ப்பாணத்தை தேர்ந்தெடுத்ததற்காகவும், “பாதுகாப்பான மற்றும் வரவேற்கத் தக்க இடமாக” அதை ஊக்குவித் ததற்காக DGE சுஷேனா ரணதுங்காவை ரவீந்திரன் பாராட்டினார். போருக்குப் பின்னர், 2010-ல் PRIP ரே கிளிங்கின்ஸ்மித் உடனான தனது முந்தைய விஜயத்தை நினைவுகூர்ந்த ரவீந்திரன், “எனக்கு இங்கு வருவது பிடிக்கும். நான் ஏற்கனவே இங்கு இருப்பதால், யாழ்ப்பாணத்தில் இன்னும் இரண்டு நாட்களுக்கு என்னுடன் சேருமாறு எனது பல்கலைக்கழக தோழர்களை அழைத்துள்ளேன், அவர்கள் திரும்பிச் சென்று, அவர்கள் தொலைத்ததையும், அவர்கள் ஏன் இங்கு வர வேண்டும் என்பதையும் பகிர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன் என கூறினார்

“சங்கத்தலைவரின் பாத்திரம் கணிசமான பொறுப்பைக் கொண்டுள்ளது மற்றும் சமூக தேவைகள் அல்லது சவால்களை நிவர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் நினைவுச் சின்னமாக இருக்க வேண்டியதில்லை; முதலில் உங்கள் உறுப்பினர்கள் மீது கவனம் செலுத்துங்கள். அவர்களிடையே நட்புறவையும் ஆதரவையும் வளர்க்கவும். சங்கத்தில் சமூகமயமாக்கல் மற்றும் வணிக நெட்வொர்கிங்கை ஊக்குவிக்கவும்; உங்கள் பல் மருத்துவர், பயண முகவர், வழக்கறிஞர் அல்லது

ரெசோன் டேவிட்



**இடமிருந்து:** DG *ஜெரோம் ராஜேந்திரம், யாழ்ப்பாண ஆளுநர்* P S M *சார்ள்ஸ்,* PRIP K R *ரவீந்திரன் மற்றும்* DGE *சுசேனா ரணதுங்க* PETS *நிகழ்வில்.*



PDG புபுது டி சொய்சா (இடமிருந்து நான்காவது) வரவிருக்கும் மகளிர் சங்கத் தலைவர்களுடன்.

மருத்துவர் அனைவரும் சக ரோட்டேரியர்களாக இருக்கலாம்'' என்று அவர் கூறினார்.

ரோட்டரியின் பரிணாமத்தைப் பிரதிபலிக்கும் வகையில், ரவீந்திரன் 1952–53-ல் சங்க உறுப்பினர்களிடையே வணிகத்தை மேம்படுத்துவதில் RC சான் பிரான்சிஸ்கோ காட்டிய கவனத்தை எடுத்துரைத்தார். ஆரம்பத்தில், உறுப்பினர்களுக்கிடையேயான வணிகப் பரிவர்த்தனைகளைக் கண்காணித்தல் மற்றும் பரஸ்பரம் வியாபாரம் செய்ததற்காக அவர்களுக்கு வெகுமதி அளிப்பது போன்ற நடைமுறைகள் இருந்தன. இருப்பினும், இந்த அணுகுமுறைக்கான எதிர்ப்பு காலப்போக்கில் வளர்ந்தது, இது சமூகம் மற்றும் உலகளாவிய சேவையில் பரந்த கவனம் செலுத்துவதற்கு வழிவகுத்தது.

அவர் RI தலைவராக ஆனபோதும், எப்போதும் முதலில் குடும்பம், வணிகம் மற்றும் ரோட்டரி தான். அதைத்தான் நான் உங்களை செய்ய வலியுறுத்துகிறேன். பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்படுவதைப் போலல்லாமல், சங்கத்தலைவர்களாக நீங்கள் அதிக மேலாண்மை திறன்களைக் கற்றுக்கொள்வீர்கள். ஏனெனில் ரோட்டரி சங்கத்தில் மக்களை பணிநீக்கம் செய்யவோ, கட்டாயப்படுத்தவோ, திணறடிக்கவோ முடியாது. நீங்கள் அவர்களை கவர வேண்டும், அவர்கள் மீது செல்வாக்கு செலுத்த வேண்டும் மற்றும் வேலை செய்ய அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

ஒரு இண்டராக்ட் சங்க கூட்டத்தில் கலந்து கொண்ட தன் அனுபவத்தை அவர் விவரித்தார், அங்கு குழந்தைகள் தனது பேச்சில் கவனம் செலுத்தாமல், டை மற்றும் கார் போன்ற அவரது வாழ்க்கையின் மேலோட்டமான அம்சங்களைப் பாராட்டுவதைக் கேட்டார். குழந்தைகள் சில சமயங்களில் தவறான காரணங் களுக்காக தனி நபர்களைப் போற்றலாம் என்பதை உணர்ந்தாலும், தன்னை நோக்கிப் பார்ப்பவர்களுக்கு நேர்மறை குணங்கள் மற்றும் மதிப்புகளை வெளிப்படுத்துவதன் மூலம் சரியான முன்மாதிரியாக இருக்க அவர் தீர்மானித்தார். "இது தான் ரோட்டரி உங்கள் மீது வைக்கும் அழுத்தம். ஒரு பேச்சை வழங்குவது மிகவும் எளிதானது என்பதை நீங்கள் மிக விரைவாக புரிந்துகொள்வீர்கள். ஆனால் அந்த வார்த்தைகளை வாழ்வது மிகவும் கடினம்.

ரோட்டரியின் உள்ளடங்கிய மற்றும் இணக்கமான தன்மையை வலியுறுத்திய அவர், ரோட்டரி தேசியம், இனம் மற்றும் மதம் ஆகியவற்றின் தடைகளைத் தாண்டி ஒற்றுமை மற்றும் ஒருமனதான நோக்கத்தை வளர்க்கிறது என்று கூறினார். "இது சங்க, மாவட்ட மற்றும் சர்வதேச மட்டங்களில் உண்மை. இல்லையெனில், ரோட்டரி உலகம் ஒரு சிறிய தீவில் இருந்து வந்த என்னைப் போன்ற ஒருவரை உலகத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? நாம் எல்லைகளுக்கு அப்பால் செல்வதால், வெள்ளையர்கள், பழுப்பு மனிதர்கள்,





*கடைசி வரிசையில், இடமிருந்து:* PDGs *முத்து பழனியப்பன், சம்பத்குமார்,* DGND *குமார் சுந்தர்ராஜ்,* PDG *கிரிஷ் ராஜேந்திரன்,* Rtn *கிருபாஹரா அழகசுந்தரம்,* DGE *சுஷேனா ரணதுங்க மற்றும் அவரது துணைவியார் ரோஷினி ஆதரவற்ற குழந்தைகளுடன்.*

கறுப்பர்கள், பணக்கார நாடுகள் அல்லது சிறிய நாடுகளைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை.

இலங்கையில் ரோட்டரியின் மதிப்புகள் மற்றும் நற்பெயரை நிலைநிறுத்துவதில் வரவிருக்கும் தலைவர்களின் பங்கு பற்றி DG ஜெரோம் ராஜேந்திரம் பேசினார். சர்வதேச அளவில், இலங்கை பெரும்பாலும் PRIP ரவீந்திரனின் நாடாக அங்கீகரிக்கப்படுகிறது. உள்வரும் சங்கத்தலைவர்கள் என்ற முறையில், ரவீந்திரன் அவர்களால் நிறுவப்பட்ட நற்பெயரை தொடரவும், ரோட்டரியின் நேர் மறையான தாக்கத்தை உலகம் முழுவதும் பரப்பவும் உங்களை ஊக்கு விக்கிறேன்'' என அவர் கூறினார்.

“மாவட்ட திட்டங்களுக்கு ஆதரவளித்து, எளிய நடவடிக்கை மூலம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்'' என்று உள்வரும் தலைவர்களை DGE சுஷேன ரணதுங்கா வலியுறுத்தினார். இந்த வருடத்திற்கான திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் வகையில், உடுவில் மல்வத்தை RCTM பாட சாலையின் ஊழியர் ஒருவரிடம் எழுது பொருட்கள் மற்றும் மடிக் கணினியை அவர் கொடுத்தார். மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் பிரதிநிதி ஒருவரிடம் அத்தியாவசிய மருந்துகளும் அளிக்கப்பட்டன. மேலும் நிகழ்வுக்குப் பிறகு வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மதிய உணவை ஏற்பாடு செய்தார்.

ARRFC S முத்து பழனியப்பன் (RID 3232) மற்றும் PDG A சம்பத்குமார் (RID 3231) ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டனர்.

படங்கள்: கிரண் ஜெஹரா

# சேலம் அருகில் மருத்துவமுகாம்



சேலம் (தமிழ் நாடு) அருகிலுள்ள இளம்பிள்ளை நகரத்தில் RC இளம்பிள்ளை, RID 2982, நடத்திய ஒரு நாள் மருத்துவ முகாமில் கண், காது, மூக்கு, தொண்டை, வெரிக்கோஸ் வெயின், மூட்டு, தோள் பரிசோதனைகள், சிகிச்சைகள் வழங்கப்பட்டன, 400க்கும் மேற்பட்டோர் பலன் பெற்றார்கள். 200 பேருக்குக் கண் புரை அறுவைச் சிகிச்சைகள் செய்யப் பட்டன, மூட்டு, தோள் பிரச்சனை கொண்ட 90க்கு மேற் பட்டோருக்கு ஃபிசியோதெரபி திட்டமிடப்பட்டுள்ளது என்றார் சங்கத்தலைவர் ஒபுலி வெங்கடேஷ்.

18 மாதங்களுக்கு முன் தொடங்கப்பட்ட இச்சங்கம், உணவு வீணாதலைப் பற்றிய விழிப் புணர்வை உண்டாக்க நடத்திய மாரத்தானை DG S ராகவன் தொடங்கி வைத்தார். இந்த 2, 5, 10 கிமீ ஓட்டத்தில் பல வயதுள்ள சுமார் 1,150 மக்கள் பங்கேற்றனர்.■

# ரோட்டரி நியூஸ் சந்தா விதிமுறைகள்

1. சந்தா ரோட்டரி ஆண்டுக்கானது (ஜூலை முதல் ஜூன் வரை).
2. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு ரோட்டரி இதழுக்குக் கண்டிப்பாகச் சந்தா செலுத்தவேண்டும்.
3. முழு ஆண்டுக்கான சந்தாவைப் பரிந்துரைக்கப் பட்ட படிவத்தில் ஜூலை மாதத்தில் அனுப்ப வேண்டும்
4. ஜூலைக்குப் பிறகு சேர்கிறவர்கள் மீதமுள்ள ரோட்டரி ஆண்டுக்கு அச்சு இதழ் ஓர் இதழுக்கு ரூ.40 மற்றும் மின் இதழ் ஓர் இதழுக்கு ரூ.35 என்ற விலையில் பணம் செலுத்தலாம்.
5. ரோட்டரி நியூஸ்-உடன் சங்கத்துக்கு உள்ள சந்தாக் கணக்கு தொடர்ந்து செயல்படும் கணக்காகும். அது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாத முடிவில் முடிவடைவதில்லை.
6. அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்கள், அவர்களுடைய முழு அஞ்சல் முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மொபைல் எண், மின்னஞ்சல் ID ஆகியவற்றைப் படிவம் மற்றும் DD அல்லது காசோலையுடன் அனுப்பவேண்டும். GPAY அல்லது இணைய வங்கிச் சேவை வழியாகவும் செய்யலாம். நீங்கள் இணையத்தில் பணம் செலுத்தும்போது, UTR எண், உங்கள் சங்கத்தின் பெயர், செலுத்திய தொகையை உடனடியாக வாட்ஸாப் (9840078074) அல்லது மின்னஞ்சல் (*rotarynews@rosaonline.org*) மூலம் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். இதைச் செய்யாவிட்டால், உங்கள் பணம் செலுத்தல் எங்கள் கணக்குகளில் தோன்றாது; உங்கள் சங்கம் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று காண்பிக்கப்படும்.
7. உங்கள் உறுப்பினர்களுடைய அஞ்சல் முகவரி, தொடர்புத் தகவல்களை ஒவ்வோர் ஆண்டும் எங்களுக்கு நேரடியாகத் தெரிவியுங்கள். RI அலுவலகம் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.
8. உறுப்பினர்கள் தங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பும் சந்தாதாரர்கள் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும். நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள், ஆனால், உங்கள் பெயரை உங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பவில்லை என்றால், உங்களுக்கு இதழின் பிரதி கிடைக்காது அல்லது உங்கள் சங்கம் சந்தாவை மின் இதழுக்கு சேர்த்துள்ளதா என்று உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.
9. உறுப்பினர் நிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் சங்கங்கள் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.
10. எங்களிடம் உள்ள பட்டியலின்படி நாங்கள் அனுப்பும் இதழ்களின் எண்ணிக்கைக்கு சங்கங்கள் பணம் செலுத்த வேண்டும்.
11. சங்கங்கள் செலுத்தாத தொகைகள் அந்த சங்கங் களுக்கு நிலுவைத் தொகையாகக் காண்பிக்கப்படும். அதன் பிறகு பெறப்படும் தொகையாவும் முந்தைய நிலுவைத் தொகைகளுக்கு சரி செய்யப்படும்.
12. சங்கங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பட்டியலை நாங்கள் அவ்வப்போது RIன் தரவுகளுடன் சரி பார்க்கிறோம். விடுபட்ட சந்தாதாரர்களைக் கண்டறிகிறோம்.
13. உறுப்பினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு இதழைப் பெறாவிட்டால் எங்களுக்கு அதை உடனடியாகத் தெரிவியுங்கள்.
14. சில பகுதிகளில் தபால் வழங்கல் பிரச்சனைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சங்கங்கள் பிரதிகளை மொத்தமாகப் பெறத் தேர்ந்தெடுக்கலாம். அதற்குக் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.

## சந்தா செலுத்தாத சங்கங்கள் RIஆல் நீக்கப்படும்

ஜூலை 1, 2022 முதல், ரோட்டரி பத்திரிக்கையை சந்தா செலுத்தி வாங்காத ரோட்டரி சங்கங்களை RI வாரியம் நீக்கம் செய்யும் என அதன் ரோட்டரி கொள்கை கோட்பாட்டில் சேர்த்துள்ளது. இணங்காத சங்கங்கள் குறித்த காலாண்டு அறிக்கை, அந்தந்த மாவட்ட ஆளுனர்களுக்கு தெரிவித்த பிறகு, எங்கள் அலுவலகம் மூலம் RIக்கு அனுப்பப்படுகிறது. இந்த சங்கங்களுக்கு **90 நாள் அவகாசம்** வழங்கப்படும், அதன் பிறகு சந்தா செலுத்தாத சங்கம் RIஆல் இடைநீக்கம் செய்யப்படும்.

180 நாட்களுக்கு இடைநிறுத்தப் பட்ட மற்றும் இணங்காத சங்கங் களை,ரோட்டரி நியூஸ், RIக்கு தெரிவித்த பிறகு, "போர்டு அதன் விருப்பப்படி இந்த சங்கங்களை நீக்கம் செய்யலாம்" என்று ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பும்.

சங்கத்தலைவர்களே, தயவு செய்து உங்கள் உறுப்பினர்களை ரோட்டரி நியூஸ்-ன் சந்தா செலுத்தி இந்தியாவில் ரோட்டரி செயல்பாடு களின் முழு விவரத்தையும் பெற செய்யுங்கள். உங்கள் PETS/GETS பாடத்திட்டத்தில் கட்டாய சந்தா பற்றிய தகவலைச் சேர்க்க RI பரிந்துரை செய்துள்ளது.

# மைசூரில் உள்ள அங்கன்வாடிகளை சீரமைத்து, அழகுபடுத்துதல்

ஜெய்ஸ்ரீ

கடந்த நான்கு தசாப்தங்களாக மைசூர் தென்கிழக்கு ரோட்டரி சங்கம் (RID 3181) கவனம் செலுத்தும் திட்டங்களில் ஒன்று பழுதடைந்த அங்கன்வாடிகளை புதுப்பித்தல். சமீபகாலமாக அசோகபுரம் மற்றும் வித்யாரண்யபுரம் கிராமங்களில் அரசாங்கத்தால் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகங்கள் சங்க உறுப்பினர்கள் எடுத்த முயற்சியால் புதுப்பொலிவுடன் திகழ்கின்றன. இந்த அங்கன்வாடிகளில் பெரும்பாலானவை சரிவர பராமரிக்கப்படாமல் மோசமான நிலையில் காட்சியளித்தன. கதவுகள் மற்றும் ஜன்னல்கள் விரிசல்களுடனும் உடைந்தும் காணப்பட்டன. வண்ணப்பூச்சுகள் இல்லாமல் முற்றிலும் களையிழந்து அந்த கட்டடமே இருண்டிருந்தது. எங்கள் சங்கம் தொடங்கப்பட்டதிலிருந்தே உறுப்பினர்கள் இந்த பாழடைந்த



கட்டடங்களைச் சீரமைத்து அவற்றை புதுப்பொலிவுடன் மாற்ற முடிவு செய்தனர். 1983-ஆம் ஆண்டு பட்டயப்படுத்தப்பட்ட இந்த சங்கத்தின் தலைவர் கே.என்.முரளிதரன் கூறுகையில், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவுத் தொழிலாளர்களான பெற்றோர்கள் பணிக்குச் செல்லும் போது இந்த குழந்தைகள் பெரும்பாலான நேரத்தை இந்த காப்பகத்தில்தான் செலவிடுகின்றனர். அவர்களுக்கு நாம் செய்யும் சிறிய உதவி இதை சீரமைப்பதுதான் என்றார். சங்கம் மேற்கொள்ளும் அனைத்து சேவைத் திட்டங்களிலும் உறுப்பினர்கள் அனைவரும் முழு ஈடுபாட்டுடன் கவனம் செலுத்தி வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு அங்கன்வாடிகளில் உள்ள சுவர்களிலும் இளம் மனங்களைக் கவரும் வகையில் எழுத்துக்கள் ஆங்கிலம் மற்றும் தாய்மொழியான கன்னடத்திலும் எழுதப்பட்டு வரைகலையுடன் விளக்கப்பட்டுள்ளன. மேலும் எண்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் விலங்குகளின் படங்கள் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கின்றன. மேலும் இந்த காப்பகத்தை நிர்வகிக்கும் பராமரிப் பாளர்களால் இசையுடன் பாடல்கள் (ரைம்ஸ்) சொல்லித்தரப் படுவதுடன் நல்ல பழக்க வழக்கங்களும் கற்பிக்கப்படுகின்றன. குழந்தைகள் விளையாடுவதற்கு பொம்மைகள், அமர்வதற்கு நாற்காலிகள் மற்றும் மெத்தை போன்ற படுக்கை வசதிகளும் சங்க உறுப்பினர்களால் செய்து தரப்பட்டுள்ளன. இந்த அங்கன்வாடிகள் ஒவ்வொன்றிலும் 25 குழந்தைகள் உள்ளனர். இவர்கள் பொதுவாக காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இங்கு தங்குவார்கள். அவர்களுக்கு சத்தான உணவு மற்றும் பழங்கள் வழங்கப்படுகின்றன. சிறப்பு நிகழ்வுகளைக் கொண்டாடும்போது அவர்களுக்குத் தேவையான மளிகைப் பொருள்களும் பழங்களும் வழங்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். ஒரு அங்கன்வாடியை புதுப்பிக்க சங்கம் சுமார் ரூ.1 லட்சம் வரை செலவிடுகிறது.

மைசூரு மாவட்டம், ஹன்சூர் தாலுக்காவில் உள்ள பழங்குடியின கிராமமான கடமனுகனஹள்ளியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவர்கள் அமர்ந்து மதிய உணவு சாப்பிடும் வகையில் சாப்பாட்டு அறையை சங்கம் கட்டித் தந்துள்ளது. குழந்தைகள் அருகிலுள்ள நாகர்ஹோல் வனப்பகுதியைச் சேர்ந்தவர்கள். இப்பகுதியில் இருக்கும் ஒரே பள்ளி இதுதான். முன்பு மாணவர்கள் வெயில், மழை காலத்தில் எந்த பாது காப்பும் இல்லாமல் திறந்தவெளியில் மதிய உணவு சாப்பிட்டு வந்தனர் என்றார் சங்கத்தின் தலைவர். மாவட்ட ஆளுநர் ஹெச். ஆர்.கேசவ், இந்த பள்ளியில் மாணவர்கள் சாப்பாட்டு அறையை சமீபத்தில் திறந்து வைத்தார்.




ஆண்டுதோறும் 90 குழந்தைகள் படிக்கும் பயில்வான் பசவய்யா பள்ளியை ரோட்டரி சங்கம் தத்தெடுத்துள்ளது. நாங்கள் பள்ளியின் உள் கட்டமைப்பை



DG H R கேசவ் (வலமிருந்து இரண்டாவது) RC மைசூர் சவுத் ஈஸ்ட் தலைவர் K N முரளிதரா (வலது) மற்றும் சங்க உறுப்பினர்களுடன் கடமனுகனஹள்ளி கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளியில் புதிதாகக் கட்டப்பட்ட உணவுக்கூடத்தில்.

மேம்படுத்தி, ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகளுக்கு சீருடைகள், பாடபுத்தகங்கள், பைகள், எழுது பொருள்கள் வழங்கி வருகிறோம் என்றார் அவர்.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 17 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு தையல் பயிற்சியும் அளிக்கப்பட்டுவருகின்றன.



DG கேசவ், சங்கத் தலைவர் முரளிதரா மற்றும் ரோட்டரியர்கள் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் கொடுத்த பிறகு.

பெண்கள் தையல் பயிற்சில் நன்கு தேர்ச்சி பெற்று நம்பிக்கையுடன் அதை தொழிலாகச் செய்ய முன்வரும்போது அவர்களுக்கு எம்பிராய்டரி மற்றும் இதர செயல்பாடுகளுடன்கூடிய அதிநவீன மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை வழங்குவோம் என்று அவர் மேலும் கூறினார்.

மைசூரில் உள்ள சிக்மா மருத்துவமனையில், பொருளாதார ரீதியாக நலிவடைந்த இரண்டு நோயாளிகள் டயாலிஸிஸ் சிகிச்சை பெற சங்கம் ஆதரவளித்து வருகிறது. இது சுமார் எட்டு ஆண்டுகளாக நடந்துவரும் திட்டமாகும் என்கிறார் முரளிதரன். நீர்வளம் உள்ள இடங்களை புதுப்பிப்பது சங்கத்தின் மற்றொரு முக்கிய திட்டமாகும். மைசூரு மற்றும் மாண்டியாவைச் சுற்றியுள்ள பல நீர்நிலைகள் சங்கத்தின் பெருமுயற்சியால் புத்துயிர் பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.■

# கிராமத்து மக்களுக்கு ரோட்டரி கண் பராமரிப்பு

ரோட்டரி செய்திக்குழு


1974 ஃபிப்ரவரி 19 அன்று பதிவுசெய்யப்பட்ட RC நீமச், RID 3040 (மத்தியப் பிரதேசம்) தன்னுடைய பொன்விழாவைக் கொண்டாடியது. அப்போது, உங்கள் மூக்குக் கண்ணாடியை உங்கள் வீட்டு வாசலில் பெறுங்கள் திட்டத்தின்கீழ், உள்ளூர் கண் பராமரிப்பு மருத்துவமனையான நேத்ராலயா-வுக்கு ஒரு நடமாடும் கண் மருந்தகத்தை அர்ப்பணித்தார் RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன். ரூ.41 லட்சம் செலவில் RC மெம்ஃபிஸ், RID 6800, உடன் இணைந்து நடத்தப்படும் இந்தப் பன்னாட்டு நல்கை முன்னெடுப்பு, மத்தியப் பிரதேசத்தின் தொலைதூரக் கிராமப் பகுதிகளில் கண் பரிசோதனை முகாம்களை நடத்தி, கண்ணாடிகளை இலவசமாக வழங்கும்.

இந்தச் சங்கம் ஐம்பது ஆண்டுகளில் சமூக மையம், கருவி வங்கி, ஏழைகளுக்கான உணவு மையம், பொது ஓய்வு இல்லம் உள்ளிட்ட பல சேவைகளைச் செய்துள்ளது. “நாங்கள் மாற்றுத் திறனாளிகள் நடமாட உதவும் கருவிகளை வழங்குகிறோம், அறுவைச் சிகிச்சைகளை ஆதரிக்கிறோம், விழிப்புணர்வு முகாம்களின் வழியாகக் கண், உறுப்புக் கொடையை முன்னிறுத்திவருகிறோம்’’ என்கிறார் சங்க உறுப்பினர் PDG தர்ஷன் காந்தி.■




DG *ரிது குரோவர் (இடது) மற்றும்* RI *இயக்குனர் ராஜு சுப்ரமணியன் உடன்* DGN *சுஷில் மல்ஹோத்ரா (வலது) மற்றும்* PDG *தர்ஷன் காந்தி (வலமிருந்து நான்காவது) மொபைல் கண் சிகிச்சையகம் திறப்பு விழாவில்.*

# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி




Detailed Step-by-step online process – *https://www.highroadsolution.com/file_uploade 2/files/giveonlineonbehalfofclubmembers.pdf*

Other available contribution channels – *https://www.highroadsolution.com/file_uploader 2/files/rficontributionchannels.pdf*

**பெயரிடப்பட்ட நன்கொடை நிறுவல் நிதிகளுக்கு இணையத்தில் வழங்குவது பற்றிய புதிய அறிவிப்பு:**
ரோட்டரியின் இணைய வழங்கல் தெரிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன, மாற்றப்பட்டுள்ளன. இப்போது, கொடையாளர்கள் அமைக்கப்பட்ட, பெயரிடப்பட்ட நன்கொடை நிறுவல் நிதிகளுக்கு இணையம் வழியாகப் பரிசளிக்கலாம். இதற்கான கையேடு: — *https://www.highroadsolution.com/file_uploade 2/files/giveonlineonbehalfofclubmembers.pdf*

கொடையாளர் *My Rotary*-ல் நுழைந்து, Donate என்ற பக்கத்துக்குச் சென்றபின், செயலில் உள்ள, பின்பற்றப்படுகிற பரிசு ID ஒன்றை உள்ளிட்டு, Search என்பதைக் கிளிக் செய்யலாம். அந்தப் பரிசு அந்தக் கொடையாளருக்குத் திறந்திருந்தால் அது தோன்றும், அவர் கொடையளிக்கலாம்.

அந்தப் பரிசு காணப்படாவிட்டால், அல்லது, அது அவர்கள் கொடையளிக்க இயலாத, வரம்புக்குட்பட்ட பரிசு என்றால், இன்னொரு பரிசைத் தேர்ந்தெடுக்கும்படி ஒரு செய்தி காண்பிக்கப்படும். மேலும் தகவல்களுக்கு, இந்தக் கையேட்டைப் பாருங்கள்: http://www.highroadsolution.com/file_uploader2/files/named_funds_onlinegiving_flowchart.pdf.■

Rotary PEOPLE OF ACTION

# வித்தியாசமான குடியரசு தினவிழா

ரஷீதா பகத்

இந்த ஆண்டு RID 3132-க்கு உட்பட்ட RC அவுரங்காபாத், SBOA பள்ளியின் இன்டராக்ட் சங்கத்துடன் இணைந்து குடியரசு தின விழாவை வித்தியாசமான முறையில் கொண்டாட முடிவு செய்தது. மகாராஷ்டிரத்தில், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள மிக உயரமான கல்சுபாய் சிகரத்தை (சுமார் 5,400 அடி) எட்டுவதற்கு இளைஞர்களுக்கு ஊக்கமளித்து அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுத்தோம். இளைஞர்களின் திரைநேரத்தை (செல்லிடைப்பேசி மற்றும் கணினியில் நேரத்தை செலவிடு வதை) குறைத்து, இயற்கையுடன் ஆழமான தொடர்பை ஏற்படுத்து வதற்காகவும் அவர்கள் உடல் தகுதியுடன் துடிப்புடன் செயல்படும் நோக்கத்திலும் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்று சோலாப்பூர் நார்த் ரோட்டரி சங்க உறுப்பினரும், மாவட்ட தலைவருமான பூனம் தியோதாஸ் ரோட்டரி செய்திக் குழுவிடம் தெரிவித்தார்.

அவுரங்காபாதில் உள்ள மிகப் பழமையான ரோட்டரி சங்கத்தின் (71 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது) முதல் பெண் தலைவர் சரிதா லோனிகர் தெரிவித்த யோசனைதான் இது. இந்த குடியரசு தினத்தில் நமது இளைஞர்கள், வித்தியாசமான அனுபவமாக மலைச் சிகரத்தின் மீது கொடியேற்ற வேண்டும் என்று விரும்பியதாக புன்னகையுடன் தெரிவித்தார் சரிதா.

3,500 மாணவர்கள் படிக்கும் SBOA பள்ளியில் ஊழியரான சரிதா, மலையேற்றத்திலும் ஆர்வம் கொண்டவர். அவரது யோசனையின் பேரில்தான் பள்ளியில் ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் இன்டராக்ட் சங்கம் தொடங்கப்பட்டது. அதில் 60 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

மலையேற்ற நிகழ்வில் 50 இளைஞர்கள் பங்கேற்றனர். அவர்களில் 25 பேர் பள்ளியின் இன்டராக்ட் சங்கத்தின் உறுப்பினர்கள். மற்ற 25 பேர் அவுரங்காபாதில் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள். இந்த மலையேற்றக் குழுவை ரோட்டரி சங்கத்தின் தலைவர் சரிதாவும், SBOA பள்ளியின் இணை செயலாளர் பிரதாப் ஹந்தராலே இருவரும் வழிநடத்தினர்.

மலையேற்ற குழுவினர் மிகவும் ஆர்வத்துடன் பயணநாளன்று அவுரங்காபாதிலிருந்து அதிகாலை 4.30 மணிக்கு ஒரு தனியார் பேருந்து மூலம் 180 கி.மீ. தொலைவில் உள்ள நாசிக் சென்றனர். பின் அங்கிருந்து கல்சுபாய் சிகரத்துக்கு மலையேறுவதற்கான அடித்தள முகாம் இருக்கும் இடமான

*SBOA பள்ளி இன்டராக்ட் சங்க உறுப்பினர்கள் கல்சுபாய் சிகரத்தின் மேல்.*





மலையேற்றத்தை முடித்ததற்காக பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இகத்புரிக்கு அருகில் உள்ள கிராமத்தைச் சென்றடைந்தனர். பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மலையேற்ற வழிகாட்டுதல் பற்றிய சிறிய அமர்வுக்குப்பின் அனுபவம் வாய்ந்த இரு மலையேற்ற வீரர்களின் வழிகாட்டுதலில் மலையேறும் பயணம் தொடங்கியது. ஹனுமான் டெக்ரி, சாய் டெக்ரி மற்றும் அவுரங்காபாதைச் சுற்றியுள்ள மலைகள் மீது ஏறி பழக்கப்பட்ட போதிலும் இதுவரை பெரிய சிகரங்கள் மீது ஏறியதில்லை என்பதை சரிதா ஒப்புக்கொண்டார். ஆனால், எவரெஸ்ட் மலைச் சிகரத்தின் அடித்தள முகாமை சென்றடைவதே தமது லட்சியம் என்றும் சரிதா குறிப்பிட்டார்.

சிகரத்தை எட்ட மலையேறும் வழியில், குழுவினர் ஒரு பசுமையான இயற்கை சூழ்ந்த பகுதியில் மதிய உணவிற்காக இடைநிறுத்தினர். மூன்றரை மணி நேர பயணத்திற்கு பிறகு அவர்கள் பிற்பகல் 2 மணி அளவில் மலை உச்சியை, அதாவது சிகரத்தை அடைந்தனர். மலை உச்சியிலிருந்து இயற்கை அழகை ரசித்தபின் தேசியக் கொடியை ஏற்றிவைத்து தேசிய கீதம் பாடி குடியரசு தினத்தை கொண்டாடினர். பின்னர் ரோட்டரி மற்றும் இன்டராக்ட் சங்கங்களின் கொடிகள் மற்றும் பதாகைகளை வைத்தனர். நாங்கள் ஏறக்குறைய இரண்டு மணி நேரத்தை அங்கு செலவிட்டோம், என்றார் சரிதா.

இந்த மலையேற்றக் குழுவில் முடிந்தவரை பெண்களை அழைத்துச் செல்வதற்கு முன்னுரிமை அளிக்கப் பட்டது. இதற்காக தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவிகளைத் தேர்ந்தெடுத்தோம்.

அவர், 10 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரியில் சேர்ந்தார். சங்கத்தை வழிநடத்தும் முதல் பெண் தலைவர் என்பதில் மகிழ்ச்சி அடைகிறார். உறுப்பினர் சேர்க்கையில் அவர் கவனம் செலுத்தி வருகிறார். ஏற்கெனவே





RC அவுரங்காபாத் தலைவர் சரிதா லோனிகர்




25 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார். இப்போது மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 71 ஆக உள்ளது. உறுப்பினர்களின் எண்ணிக்கையை 100 ஆக உயர்த்தி சங்கத்தை பலப்படுத்துவதே அவரது குறிக்கோளாகும்.

மலையேற்றக் குழுவில் பங்கேற்று சிகரம் ஏறிய அனை வருக்கும் அவர்களின் சாதனை, உறுதிப்பாடு மற்றும் உடல் தகுதியை அங்கீகரிக்கும் வகையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. உடல் செயல்பாடுகளின் மூலம் மகிழ்ச்சியாக இருக்கமுடியும் என்பதையும் தொலைபேசி மற்றும் கணினியில் அதிக நேரம் செலவிடுவதை இளைஞர்கள் தவிர்க்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதே இதன் மற்றொரு நோக்கமாகும். இந்த மலையேற்ற நிகழ்வுக்காக ஒவ்வொரு நபருக்கும் தலா ரூ.4,000 செலவிடப்பட்டுள்ளது என்றும் சரிதா கூறினார்.■

---

# தொலைதூரக் கிராமங்களுக்கும் டயாலிசிஸ் மையம்

ரோட்டரி செய்திக் குழு

தமிழ் நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலத்தில் உள்ள ரிதீஷ் மருத்துவமனையில் மூன்று படுக்கைகளைக் கொண்ட டயாலிசிஸ் மையம் ஒன்றை அமைத்துள்ளது RC சத்தி, RID 3203. RC கர்கி-அபுஜா, RID 9125, நைஜீரியா மற்றும் TRF வழங்கிய பன்னாட்டு நல்கை ஆதரவில் ரூ.45 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த வளாகத்தைப் பன்னாரி நிறுவனங்கள் குழுமத்தின் தலைவர் S V பாலசுப்ரமணியம் தொடங்கிவைத்தார். “இந்த நோக்கத்தைக் கேட்டு மகிழ்ந்த அவர், சமூகத்தில் சேவைத் திட்டங்களைச் செய்வதற்கென ஆண்டுதோறும் எங்கள் சங்கத்துக்கு ரூ.5 லட்சம் பங்களிக்க உறுதியளித்துள்ளார்” என்றார் திட்டத் தலைவர் மாணிக்கம் குணசேகரன். இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சைக்கு 60 கிமீ பயணம் செய்யவேண்டியிருந்த நிலையில், இந்த மையம் அவர்களுக்கு ஒரு வரமாகும். PDGகள் B இளங்குமரன், K சண்முகசுந்தரம், A கார்த்திகேயன், DGND K பூபதி



*பண்ணாரி குழும நிறுவனங்களின் தலைவர் S V பாலசுப்ரமணியம், டயாலிசிஸ் மையத்தை திறந்து வைக்கிறார். PDG K சண்முகசுந்தரம் இடமிருந்து மூன்றாவது, பின் வரிசையில் காணப்படுகிறார்.*

தொடக்க விழாவில் பங்கேற்றனர். அரசுத் திட்டங்களின் காப்பீடு பெற்ற நோயாளிகளுக்கு டயாலிசிஸ் இலவசமாக வழங்கப்படும், மற்ற நோயாளிகளிடம் சிறு கட்டணம் பெறப்படும்.■

ADVT.

# our commitment to diversity, equity, and inclusion

Rotary



## The DEI Advisory Council is guiding Rotary on its journey to be a more diverse, equitable, and inclusive organization.

And as fellow Rotary members from clubs all around the world, we're here to help you on your journey too.


**CONTACT THE COUNCIL TO:**

1. Get support for making your club more welcoming and inclusive for all members
2. Invite a council member to speak at a club or district event
3. Learn about DEI strategies your club can adopt

**Email dei@rotary.org today to get started!**

# செவ்வாய்க்கிரகம், பன்முகத்தன்மை மற்றும் ஸ்டெம் கல்வி

**கிரண் ஜெஹரா**




*ஸ்வாதி மோகன், நாசா மார்ஸ் 2020 பயணத்தில் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாடு செயல்பாடுகள் தலைவருடன் RC மெட்ராஸ் ஈஸ்ட் பாபு கிருஷ்ணமூர்த்தி, அலெக்ஸ் ஏவ்-லலேமன்ட், அமெரிக்க தூதரகத்தின் தலைவர் பிரிவு, மற்றும் RCME செயலாளர் ரேவதி சஞ்சீவ்.*

சர்வதேச மகளிர் தினத்தன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், நாசா மார்ஸ் 2020 இயக்கத்தின் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் முன்னிலை வகித்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி பொறியியலாளர் சுவாதி மோகன், ரோட்டேரியன்களை செவ்வாய் கிரகத்துக்கே அழைத்துச் சென்றதுடன், விண்வெளி அறிவியல், ஸ்டெம் கல்வியின் (STEM – அறிவியல், தொழில்நுட்பம், என்ஜினீயரிங் மற்றும் கணிதம்) அவசியத்தை பெண்களிடம் வலியுறுத்தினார். மெட்ராஸ் ஈஸ்ட் ரோட்டரி சங்கம் (RID 3232), சென்னையில் உள்ள அமெரிக்க துணை தூதரகம் இணைந்து இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. அமெரிக்க தூதரகத்தின் சென்னை பிரிவின் தலைவர் அலெக்ஸ் அவி லல்லமென்ட் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

பள்ளி நாட்களில் தாம் இன்டராக்டராக இருந்ததாக சுவாதி குறிப்பிட்ட போது அரங்கத்தில் இருந்த ரோட்டேரியன்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

நான் சேர்ந்திருந்த இன்டராக்ட் சங்கம், உள்ளூர் தொடக்கப் பள்ளிகளில் பெண் குழந்தைகளுக்கு கணிதப்பாடம் சொல்லிக் கொடுப்பதில் ஈடுபட்டிருந்தது. இந்த அனுபவத்திலிருந்து நான் ஒன்றை புரிந்துகொண்டேன். மாணவர்களுக்கு அறிவு இல்லாததால் அவர்கள் கணிதப்பாடத்தை கஷ்டமானதாக கருதவில்லை. அதற்கு ஒரே காரணம் அவர்கள் கணிதப் பாடத்தின் மீது நம்பிக்கை வைக்காமல் இருந்தது தான். பெண்கள் கணிதம் மற்றும் அறிவியலில் நம்பிக்கை இழப்பது வழக்கமானதுதான். இளம் வயதில் இது நடக்கத்தான் செய்யும். அறிவியல், தொழில்நுட்பம், என்ஜினீயரிங் மற்றும் கணிதக் கல்வியை அவர்கள் தொடர வேண்டுமானால், நாம் முன்கூட்டியே அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

STEM கல்வியில் திறமையான நபர்களுக்கு தேவை அதிகரித்து வருகிறது. உலகம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அதிகம் நம்பியிருப்பதால் அதற்கு தேவை அதிகரித்து வருகிறது. இதன் தேவையை நன்குணர்ந்த அமைப்புகள் இப்போது ஸ்டெம் கல்வியை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

விண்வெளி ஆய்வில் எனது வாழ்க்கையைத் தொடங்கியபோது அந்த துறையில் மிக குறைந்த பெண்களே ஈடுபட்டிருந்தனர். பெண்கள் இந்த துறையில் முன்னிலைப் பெற வேண்டும் என்ற காரணத்தினாலேயே நான் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் வந்து பல இடங்களில் பேசுகிறேன் என்று அவர் குறிப்பிட்டார். பிப்ரவரி 21-ல் பெர்சவரன்ஸ் ரோவர் விண்கலம் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கிய தருணத்தில் அந்த இயக்கத்தின் வர்ணனையாளராக நான் இருந்தது தான் எனக்கு ஒரு தளமாக அமைந்தது. குறிப்பாக பல்வேறு பிரதிநிதித்துவம் இல்லாத துறைகளில். இளம் பெண்களை ஊக்குவிப்பதே எனது நோக்கமாகும். அப்போதுதான் அவர்கள் இதுபோன்ற துறைகளிலும் வெற்றிவாகை சூட முடியும் என்று சுவாதி தெரிவித்தார்.

ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் துறையில் நாம் பயணிக்க

வேண்டுமானால் அதற்கு வழிகாட்டுதல்கள் தேவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

செவ்வாய்க்கிரக பயணத்தின் ஒருபகுதியாக நியமிக்கப்பட்டபோது தாம் கர்ப்பமாக இருந்ததாக சுவாதி கூறினார். பணியில் தொடர முடியுமா அல்லது வேறு பிரிவுக்கு மாற்றம் வருமா என நினைத்தபோது பாது காப்பற்ற ஒரு சூழ்நிலை என்னை ஊடுருவியது. நல்லவேளையாக எனது அதிகாரி ஒரு பெண்ணாக இருந்ததால் அவர், தனது தாய்மை பயணத்தை பகிர்ந்து கொண்டார். கடினமான காலங்களில் சகாக்கள் அளித்த ஆதரவும் உற்சாகமும் எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தின என்று சுவாதி கூறினார்.

விண்வெளி ஆய்வின் எதிர்காலம் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், விண்வெளி ஆய்வு உலகில் அமைதியை வளர்ப்பதற்கான உறுதி மொழியைக் கொண்டுள்ளது. விண்வெளிப் பயணங்களில் நாடுகள் கூட்டு சேர்ந்து ஒத்துழைக்கும் போது, அவை ராஜதந்திர உறவுகளை வளர்ப்பதுடன் ஒற்றுமையையும் ஈர்க்கும் என்றார்.

முன்னதாக காலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 200 பள்ளி மாணவர்களுடன் தனது செவ்வாய்க்கிரக பயண அனுபவத்தை சுவாதி பகிர்ந்து கொண்டார். பெர்சவரென்ஸ் ரோவரின் டச் டவுனுக்கான ஜெஸெகோ பள்ளத்தை தேர்ந்தெடுப்பது பற்றி அவர்களிடம் பேசினார்.



*பள்ளி மாணவர்களுடன் சுவாதி.*

மேலும் அந்த 7 நிமிட பயங்கர அனுபவத்தை விவரித்தார். (நாஸா என்ஜினீயர்கள் செவ்வாய் கிரகத்தில் நுழைவது, இறங்குவது மற்றும் தரையிறங்குவதை அப்படித் தான் குறிப்பிடுகிறார்கள். ■

Rotary PEOPLE OF ACTION

# மகாராஷ்டிரக் கிராமத்தில் பருத்திப் பை தயாரிக்கும் வளாகம்

ரோட்டரி செய்திக்குழு




வால்ஹெகர்வாடி ரோட்டரி சங்கம், RID 3131, மற்றும் ஜிஜெள சமூக அறக்கட்டளை என்ற NGO இணைந்து, மகாராஷ்டிரத்தில் புணே அருகில் உள்ள வல்ஹெகர்வாடியில் ஜிஜெள பெண்கள் பருத்திப் பை கிரஹ் உத்யோக் என்ற பருத்திப் பை தைக்கும் வளாகத்தை அமைக்க உதவியுள்ளார்கள். சென்ற ஆண்டு இந்தச் சங்கம் பிளாஸ்டிக் மாசு பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதற்கென வோல்வெவொர்க்ஸ் இந்தியாவுடன் சேர்ந்து ஒரு லட்சம் பருத்திப் பைகளை மக்களுக்கு வழங்கினார்கள், பாலித்தீன் பைகளுக்குப் பதில் சுற்றுச்சூழலுக்கு இதமான பைகளைப் பயன்படுத்தும் படி அவர்களை ஊக்குவித்தார்கள்.

தொடக்கத்தில் 20 பெண்கள் இந்தப் பைகளைத் தைக்கவும் சந்தைப்படுத்தவும் அடையாளம் காணப்பட்டார்கள். இவர்கள் தைத்தலை ஒரு தொழிலாகச் செய்கிறவர்கள் தான். ஆனால், பருத்திப் பைகளைத் தயாரிக்கத் தேவையான பொருட்களைப் பெறுதல், சந்தைப்படுத்துதல் திறன்கள் அவர்களிடம் இல்லை. இவர்களுக்கு, மூலப் பொருட்களை எங்கு பெறுவது, கிடைக்கும் பல வகைப் பொருட்கள், இலக்குச் சந்தைகளை அடையாளம் காணுதல், பைகளைச் சந்தைக்கு அனுப்புதல் போன்றவற்றைப்பற்றிய பயிலகங்கள் நடத்தப்பட்டன. தொடக்கத்தில் இந்தப் பெண்கள் இந்தச் சங்கம் வழங்கிய பொருட்களைக் கொண்டு, குளிர்பதனப் பெட்டியில் பழங்கள், காய்கறிகளைச் சேமிக்கும் பைகள் உள்ளிட்ட பல பைகளைத் தைத்தார்கள். ■

# ஆட்டிஸம் கிளினிக்கிற்கு உதவும் RC ஜம்மு ஸ்டார்ஸ்

ரஷீதா பகத்

குழந்தை மருத்துவத்துறை, NGO Children of India இணைந்து ஆட்டிஸம் கொண்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு பலவிதமான சேவைகளை வழங்குவதற்காக ஜம்முவில் உள்ள அரசு SMGS மருத்துவமனையில் சமீபத்தில் ஆட்டிஸம் கிளினிக்கைத் தொடங்கிய போது, RC ஜம்மு ஸ்டார்ஸ், RI மாவட்டம் 3070, அந்த குழந்தைகளின் பயிற்சி மற்றும் சிகிச்சைக்கு தேவையான வண்ணமயமான, நவீன விளையாட்டு உபகரணங்களை வழங்கி மகிழ்ச்சியுடன் களமிறங்கினர்.

இந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் பல்வேறு பகுதிகளில் உடல் மற்றும் மனரீதியான சவால்கள் உள்ள குழந்தைகளின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக செயல்படுகிறது. அமைப்பின் மாநில திட்ட ஒருங்கிணைப்பாளர் விதுஷி ஷர்மா கூறுகையில், இந்தியாவின் பல பகுதிகளைப் போலவே, ஜம்மு-காஷ்மீரிலும், சாதாரண குழந்தைகளுக்கான பள்ளிகள் ஆட்டிஸம் மற்றும் பிற கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு சேர்க்கை வழங்குவதில் தயக்கம் காட்டு கின்றனர். "எங்களுடையது ஒரு தனியார் அமைப்பாகும், இது குறைபாடுகளுடன் பிறக்கும் அல்லது வளர்ச்சி தாமதங்களைக் கொண்ட குழந்தைகளுடன் பணியாற்றுவதில் ஈடுபட்டுள்ளது. இந்த குழந்தைகளை 'சாதாரண' பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்பதே எங்கள் முக்கிய நோக்கம்.

ஜம்மு-காஷ்மீரில் உள்ள பள்ளிகள் சிறப்புக் குழந்தைகளை எடுத்துக் கொள்வதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகின்றனர் என்று கேட்க, அவர்கள் அத்தகைய மாணவர்களை ஏற்கத் தயாராக இல்லை. ஆனால் மாநிலத்தின் முக்கிய கல்விச் சூழல் மிகவும் உள்ளடக்கியதாக இருக்கவும், ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளிக்குச் செல்வதற்கும், தகுதி மற்றும் அறிவைப் பெறுவதற்கும் வாய்ப்பளிக்கும் ஒரு சூழ்நிலையை நோக்கி நாங்கள் பணியாற்றி வருகிறோம் என கூறினார்.

அத்தகைய குழந்தைகளுக்காக சிறப்புப் பள்ளிகள் உள்ளன, "ஆட்டிஸம் மற்றும் கற்றல் பிரச்சனை உள்ள பிற குழந்தை களுக்கான சிறப்புப் பள்ளிகளை நாங்கள் பரிந்துரைப்பதில்லை, ஏனெனில் அத்தகைய குழந்தைகள் சாதாரண பள்ளிகளுக்குச் செல்வது தான் அவர்களுக்கு நல்லது."

அதனால்தான், சில்ட்ரன் அஃப் இந்தியா, மருத்துவமனையில் இதுபோன்ற கிளினிக்கைத் திறக்க முடிவு செய்ததாக அவர் மேலும் கூறுகிறார். அத்தகைய திட்டத் திற்கு ஒரு மருத்துவமனையை ஏன் தேர்வு செய்தார் என்பதற்கு விதுஷா விரைவாக பதிலளிக்கிறார், "ஆட்டிசம் ஒரு நோயல்ல, ஆனால் அதை மிகச் சிறப்பாக நிர்வகிக்க முடியும், மேலும் ஆரம்பகால தலையீடு மூலம் குழந்தையை மிக எளிதாகவும் முழுமையாகவும் அடிப்படை கல்வியில் ஒருங்கிணைக்க முடியும்."

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் முழுவதும் இதுபோன்ற ஆட்டிஸம் கிளினிக் எதுவும் இல்லை என்று




RC ஜம்மு ஸ்டார்ஸ் தலைவர் பூஜா மல்ஹோத்ரா (இடது) மற்றும் விதுஷி சர்மா, NGOவின் மாநில திட்ட ஒருங்கிணைப்பாளர், ஜம்முவில் உள்ள SMGS மருத்துவமனையில் உள்ள ஆட்டிசம் கிளினிக்கில்.

தெரிந்தவுடன் ரோட்டேரியர்கள் உற்சாகமடைந்து ரூ.35,000க்கு மேல் விலையுள்ள விளையாட்டு உபகரணங்களை மனமுவந்து நன்கொடையாக வழங்கியதாகவும் சங்கத்தலைவர் பூஜா மல்ஹோத்ரா கூறினார். குழந்தைகளுக்கான ஒன்றை விட வேறு என்ன சிறந்த திட்டம் எங்களுக்கு அவ்வாறு செய்ய வாய்ப்பளிக்கும். எங்கள் சங்க உறுப்பினர்கள் இந்த கிளினிக்கை ஆதரிப்பதில் பெருமிதம் கொள்கிறார்கள்'' என்றார்.

இந்த விளையாட்டு உபகரணங்களுக்காக தான் தற்போது ரோட்டேரியர்களை அணுகியதாக விதுஷி கூறுகிறார். தற்போது எங்களது சேவைகளில் ஆரம்பகால தலையீடு திட்டங்கள், நடத்தை சிகிச்சைகள், பேச்சு மற்றும் மொழி சிகிச்சை, தொழில்சார் சிகிச்சை மற்றும் ஆலோசனை ஆகியவை அடங்கும். கிளினிக்குகளின் விரிவான அணுகுமுறையானது ஆட்டிஸம் கொண்ட நபர்களுக்கு செழிக்க தேவையான ஆதரவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

விதுஷி கூறும் முக்கிய பிரச்சனை, முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் விரைவான தலையீடு ஆகும். நாட்டின் பிற இடங்களைப் போலவே, ஜம்மு காஷ்மீரிலும், குழந்தை வளர்ச்சி மைல்கற்களில் ஏற்படும் தாமதம் சில குறைபாடுகள் அல்லது வேறுபாட்டின் அறிகுறியாகும் என்பதை பெற்றோர்கள் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். "ஒரு குழந்தையின் பேச்சில் தாமதம் ஏதேனும் ஏற்பட்டால், அது ஆட்டிஸத்திற்கான சிவப்புக் கொடியாகும். குழந்தை சரியாகக் கண் தொடர்பு கொள்ளாதது, மற்ற குழந்தைகளுடன் விளையாடாமல் இருப்பது போன்ற நடத்தைப் பிரச்சினைகளிலும் இதுவே உண்மை. ஆனால் பல சமயங்களில், பெற்றோர்கள் உதவியை நாடுவதில்லை. தங்கள் குழந்தை முற்றிலும் நன்றாக இருக்கிறது என நம்புகின்றனர். மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்று பயந்து அத்தகைய குழந்தைகளை முன்னோக்கி கொண்டு வர அவர்கள் தயங்குகிறார்கள் துரதிர்ஷ்டவசமாக

குழந்தை மனநலம் பாதிக்கப்பட்டதாக கூறுவது போன்ற ஒரே மாதிரியான கருத்துக்களும் அங்கே நிலவுகின்றன. எனவே இதுபோன்ற பிரச்னைகளை சமாளிக்க பெற்றோர் குழுக்களை உருவாக்கியுள்ளோம்.''

ஆனால் நல்ல செய்தி என்ன வென்றால், புதிதாக திறக்கப்பட்ட இந்த கிளினிக்கில், ஏற்கனவே 60 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இப்போது அவர்கள் சிறப்பு நடவடிக் கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்; ''அத்தகைய குழந்தைகளைக் கையாள, எங்களுக்கு ஒரு தொழில்சார் சிகிச்சையாளர், பேச்சு சிகிச்சையாளர் மற்றும் உதவியலாளர் தேவை. அவர்கள் கிடைத்தாலும் வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை மட்டுமே வருகிறார்கள். குழந்தைகளின் ஆற்றலைச் சிறப்பான வழியில் கொண்டு செல்லவும், குழந்தைகளுக்கான மேம்பட்ட செயல்பாடுகளுக்கும் எங்களுக்கு அதிக விளையாட்டு உபகரணங்களும் தேவைப்படுகின்றன; இவை அனைத்திற்கும் ரோட்டரியின் கூடுதல் ஆதரவை நாங்கள் நாடுகிறோம் என்று விதுஷி மேலும் கூறுகிறார்.

இந்த கிளினிக்கை அமைப்பதற்கு முழு ஆதரவு அளித்ததற்காகவும் மற்றும் ''ஆட்டிஸம் கொண்ட அனைத்து நபர்களுக்குத் தேவையான சிறப்பு சிகிச்சையைப் பெறுவதை



*மேலே: குழந்தைகள் தங்கள் பெற்றோர் மற்றும் கிளினிக்கில் உள்ள ஊழியர்களுடன்.*

*கீழே: பூஜா மற்றும் விதுஷி RC ஜம்மு ஸ்டார்ஸ் உறுப்பினர்கள் உடன். Dr தாரா சிங், மருத்துவமனை கண்காணிப்பாளர் இடமிருந்து இரண்டாவதாக உள்ளார்.*



உறுதி செய்ததற்காகவும்'' மருத்துவ மனையின் மருத்துவ கண் காணிப்பாளர் Dr தாராசிங்கிற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இதேபோன்ற ஆட்டிஸம் கிளினிக்குகளை தொடங்குவதற்காக, சில்ட்ரன் அஃப் இந்தியா ஏற்கனவே நாகாலாந்து மற்றும் உத்தரகாண்ட் ஆகிய இரு மாநிலங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். அவர்களின் சகோதர அமைப்பான காண்டாக்ட் க்யூர் இந்தியா கிளப் ஃபுட் கொண்ட குழந்தைகளுடன் பணிபுரிகிறது. அவர்களின் மிகப்பெரிய நன்கொடையாளர் ரோட்டரி மற்றும், இன்னர் வீலும் அதை ஆதரிக்கிறது என்றும் அவர் கூறினார்.■

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### இரத்த வங்கியைப் புதுப்பிக்க உதவி



*இரத்த தான முகாம்.*

ஜலந்தர் மருத்துவக் கல்லூரி இரத்த வங்கியில் தீவிரப் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து, RC பிரிஜ் நகர் ஜலவார், RID 3056, ஒரு இரத்த தான முகாம் நடத்தி 90 அலகு இரத்தத்தைத் திரட்டியது.

### கருப்பை வாய்ப்புற்றுநோயை அகற்றும் முன்னெடுப்பு



*தடுப்பூசி பெற்ற பிறகு மாணவிகள்.*

கர்கரில் உள்ள முர்பி கிராமத்தைச் சேர்ந்த ஜில்லா பரிஷத் பள்ளியில் 9 முதல் 14 வயதுள்ள 50 ஏழைப் பெண்களுக்குக் கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்து வழங்கியுள்ளது RC கர்கர் மிட்-டவுன், RID 3131.

### டயாலிசிஸ் கருவி கொடையளிக்கப்பட்டது



DG T R *விஜயகுமார் திட்டத்தை துவக்கி வைக்கிறார்.*

CSR நல்கை மூலம் எர்ணாகுளம் பொது மருத்துவ மனைக்கு ரூ.23.61 லட்சம் மதிப்புள்ள டயாலிசிஸ் இயந்திரம், இருக்கைகள், கண்காணிப்பான்கள், இன்னும் பலவற்றைக் கொடையளித்தது RC கொச்சின், RID 3201. இந்த நன்கொடை, CV ஜேக்கப் அறக்கட்டளை வழியாக ஹெர்பல் ஐசோலேட்ஸ் வழங்கிய பங்களிப்பின்மூலம் வழங்கப்பட்டது.

### ஏழைகளுக்குக் கண் அறுவைச் சிகிச்சைகள்



*அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளிகளுடன் சங்க உறுப்பினர்கள்.*

RC தாய்பெய், RID 3481, தைவான் உடனான பன்னாட்டு நல்கையின்கீழ், விசாகப்பட்டினத்துக்கு அருகில் உள்ள அனகபல்லெ-யில் இருக்கும் ரோட்டரி கண் மருத்துவ மனையில் 36 நோயாளிகளைக் கண் புரை அறுவைச் சிகிச்சைக்கெனப் பரிசோதித்தது RC அனகபல்லெ, RID 3020. 7 நோயளிகளுக்குக் கண் புரை சிகிச்சையும் பராமரிப்பு மருந்துகளும் வழங்கப்பட்டன.■

# கிராமப்புற மாணவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி

ஜெய்ஶ்ரீ

RC-க்கள் பெங்களூர் யெலஹங்கா மற்றும் பெங்களூர் வெஸ்ட், RID 3192 நடத்தும் ரெமிடியல் ஆங்கில திட்டத்திற்கு நன்றி, கர்நாடகாவின் கிராமப்புறங்களில் உள்ள 30,000 பள்ளி மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் ஆங்கிலத்தில் உரையாடலாம் மற்றும் எளிமையான வாக்கியங்களைப் புரிந்து கொள்ளலாம். 2019–21ம் ஆண்டில், RC ஆஸ்டின் RID 5870-ன் உலகளாவிய மானிய ஆதரவுடன் சங்கங்கள் திட்டத்தின் முதல் கட்டத்தை மேற்கொண்டன. இது 2021-ல் அடுத்த கட்டமாக RC குபெர்டினோ RID 5170 உடன் இணைந்து தொடரப்பட்டது.

முதல் ஆண்டில் (2019–20) கோவிட் தொற்றுநோய் பரவியிருந் தாலும், 208 பள்ளிகளை உள்ளடக்கிய 12,651 குழந்தைகளுக்கும், இரண்டாம் ஆண்டில் 200 பள்ளிகளில் 12,038 மாணவர்களுக்கும் கற்பிக்க முடிந்தது. கோவில் வளாகத்தில், மரத்தடியில், பஞ்சாயத்து கட்டிட வளாகத்தில் வகுப்புகள் எடுத்து… மிகவும் கடினமான காலங்களில் சுமார் 25,000 குழந்தைகளை வெற்றிகரமாக ஈடுபடுத்தினோம், என்கிறார் RC பெங்களூர் வெஸ்ட் உறுப்பினர் PDG ராஜேந்திர ராய். 50 அரசுப்பள்ளிகளைச் சேர்ந்த 1,500 மாணவர்களைச் சென்றடைய RC குபெர்டினோவுடன் மற்றொரு GG மூலம் இந்தத் திட்டம் தொடரப்பட்டது. இது சமீபத்தில் நிறைவடைந்தது மற்றும் மாணவர்கள் புதிதாகப் பெற்ற ஆங்கிலப் புலமையை எவன்ஸ்டனில் உள்ள RI தலைமையகத்தின் TRF ஒருங்கிணைப்பாளரான கேப்ரியேலா க்ளைனிடம், அவர் பிப்ரவரியில் பெங்களூருவுக்குச் சென்றபோது ஒரு “ஆங்கில கண்காட்சி”யில் காட்சிப்படுத்தினர். ஒவ்வொரு பாடத் திட்டத்தையும் முடித்த பிறகு, சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட “ஆங்கில கண்காட்சி”யில் குழந்தைகள் தாங்கள் கற்றுக்கொண்ட அனைத்தையும் காட்சிப்படுத்து கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுகிறார்கள் மற்றும் குறும் காட்சிகளில் நடித்துக் காட்டுகிறார்கள்.

திட்டத்தை செயல்படுத்துவது குறித்து, ராய் கூறுகையில், இந்த சங்கங்கள் பிரதம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் இணைந்து பங்கேற்கும் பள்ளிகளில் இருந்து ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களை அடையாளம்



*பெங்களூரு அருகே உள்ள அரசுப் பள்ளியில் ஆங்கில வகுப்பு நடந்து வருகிறது.*

கண்டு பயிற்சியளிக்கும் புதிய வழிமுறையான ‘டீச்சிங் அட் தி ரைட் லெவல்’ என்ற திட்டத்தின் வழியாக நடத்துகிறது. இந்த ஆசிரியர்கள் 30 மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் வகுப்புகளை எடுப்பார்கள். “அவை 5 மற்றும் 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கிலத்தையும், 6 மற்றும் 7-ம் வகுப்பு மாணவர்களுக்கு மேம்பட்ட ஆங்கிலத்தையும் உள்ளடக்கியது.”

தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் திரிகள், தூபக்குச்சிகள் மற்றும் கூடை உற்பத்தியாளர்கள் போன்ற சிறு வணிக உரிமையாளர்களின் குழந்தைகள் பங்கேற்பாளர்களில் அடங்குவர். “நாங்கள் அதிக கிராமப்புற குழந்தைகளை சென்றடைய விரும்புகிறோம். ஆங்கிலத்தில் தன்னம்பிக்கை இருப்பதால், அவர்கள் விஞ்ஞானி களாக, பொறியாளர்களாக, மருத்துவர் களாக ஆக ஆசைப்படுவார்கள். கிராமப்புறப் பள்ளிகளில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக இருப்பதால், அவர்கள் அதிக வாய்ப்புகளையும் சிறந்த வாழ்க்கைத் தரத்தையும் பெற வழிவகுப்பதால், பாலின வேறுபாடும் தீர்க்கப்படும்,” என்கிறார் ராய்.

இந்த திட்டத்தின் தோற்றம் 2007–08-ல் தொடங்கியது, இரண்டு ரோட்டரி சங்கங்களும், டெக்சாஸை தளமாகக் கொண்ட ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமான பிரகதியும் இணைந்து கர்நாடகாவில் உள்ள அரசுப்பள்ளிகளில் 10-க்கும் மேற்பட்ட கல்வியறிவுத் திட்டங்களை உலகளாவிய மானிய ஆதரவுடன் ஊக்குவித்தன. முதல் GG திட்டம், “டீச் இந்தியா” 2014-ல் தொடங்கப்பட்டு, கன்னடம் மற்றும் கணிதத்தை கற்பிப்பதில் கவனம் செலுத்தியது மற்றும் சுமார் 400 கிராமப்புற பள்ளிகளில் நூலகங்களை அமைத்தது. அதன் இரண்டு வருட காலத்தில் 30,000 குழந்தைகள் பயனடைந்தனர். இந்தத் திட்டத்தின் வெற்றியுடன், இதேபோன்ற மேலும் இரண்டு GG திட்டங்களைச் செயல்படுத்தினோம்; இந்த முறை நாங்கள் மேலும் 33,000 குழந்தைகளுக்கு கற்பித்தோம்” என்று அவர் கூறுகிறார். நான்காவது GG கணிதம் கற்பிப்பதில் கவனம் செலுத்தியது மற்றும் 15,000 குழந்தைகளுக்கு பயனளிக்கும் விதமாக ஒரு வருட காலத்திற்கு ஒரு சமூக நூலகத்தை உருவாக்கியது.

இந்த கல்வியறிவு திட்டங்கள் அனைத்தும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களின் கல்வியில் ஆர்வத்தை வளர்க்க உதவியது, மேலும் பள்ளி பாடத்திட்டத்தை முழுமையாக்குகிறது. எங்கள் ஒவ்வொரு திட்டப்பணியின் போதும் பெற்றோர்கள் ஆர்வத்துடன் இருந்தனர் மற்றும் அவர்களின் பிள்ளைகளிடம் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தனர். ரெமிடியல் ஆங்கில திட்டத்தை நடத்திய போது, தங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதைக் கேட்ட பெற்றோர்களின் மகிழ்ச்சியை எங்களால் காண முடிந்தது. என்கிறார் ராய்.■



*கோவிட் தொற்றுநோய் போது ஒரு மரத்தின் கீழ் ஒரு வகுப்பு நடத்தப்படுகிறது.*



*ஆங்கில கண்காட்சியில் RI தலைமையகத்தில் இருந்து TRF ஒருங்கிணைப்பாளர் கேப்ரியேலா க்ளீன் மற்றும் PDG ராஜேந்திர ராய்.*

# மேற்குவங்கத்தில் புதிய கட்டடத்தில் கண் மருத்துவமனை

V முத்துகுமரன்




மேற்குவங்க மாநிலம், 24 பர்கானா மாவட்டத்தில், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கண் சிகிச்சை அளிப்பதில் பாரம்பரியமாக சேவை செய்து வரும் ஜாய்நகர் கண் மருத்துவமனைக்கு RID 3291 அதிநவீன வசதிகளுடன் ஒரு புதிய கட்டடத்தை கட்டிக் கொடுத்துள்ளது. இந்த மருத்துவமனை ஆண்டுக்கு 5,000 பேருக்கு கண் அறுவைச்சிகிச்சையும், 50,000 புறநோயாளிகளுக்கு பரிசோதனை செய்யும் திறன் கொண்டது. அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படும். 10,000 சதுர அடிகள் கொண்ட இந்த புதிய கட்டடத்தில் குளுக்கோமா, கண் விழித்திரை நோய் உள்ளிட்டவற்றுக்கு நவீன கருவிகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்கிறார் கொல்கத்தா சௌரங்கி ரோட்டரி சங்க உறுப்பினரும் திட்டத்தின் முக்கிய நிர்வாகியுமான விக்ரம் டான்டியா.

கிராமத்தில் உள்ள 23 பார்வை மையங்கள் மூலம் பரிந்துரைக் கப்படும் கண் நோயாளிகளுக்கு பழமையான வாடகை கட்டடத்தில் தான் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. தங்களது வெளி மையங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகள் இங்குதான் சிகிச்சை பெறுகின்றனர். அதாவது ஆண்டுக்கு 3,500 அறுவைச்சிகிச்சைகளும், 30,000 வெளிநாயோளிகளுக்கு கண் பரிசோதனை சிகிச்சையும் அளிக்கப்பட்டு வந்தது.

2004-ம் ஆண்டு சென்ட்ரல் கொல்கத்தா ரோட்டரி சங்கம் ஆதரவில் தொடங்கப்பட்ட RCC மனிதவள மேம்பாட்டு மையம் மூலம் சுந்தரவனக்காடு பகுதியில் உள்ள மதுராபூரில்தான் முதன் முதலாக கண் சிகிச்சை மையம்

**இடமிருந்து:** DRFC *சுதீப் முகர்ஜி,* RID *அனிருதா ராய்சௌத்ரி, திட்ட வழிகாட்டி பினோத் கைதான்,* DG *ஹிராலால் யாதவ் மற்றும்* PDG *ரஜனி முகர்ஜி.*



*கண் மருத்துவமனையின் புதிய கட்டிடத்தை DG ஹிராலால் யாதவ் திறந்து வைத்தார். மேலும் (இடமிருந்து) RID ராய்சௌத்ரி, சஜித் ஹொசைன், DRFC சுதீப் முகர்ஜி, PDG ரஜனி முகர்ஜி மற்றும் RC கல்கத்தா சௌரெங்கி தலைவர் மீனா கெம்கா.*

தொடங்கப்பட்டது. பின்னர் 2007-ல் ரோட்டரி ஆய்வுக்குப்பின் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. பின்னர் கொல்கத்தாவிலிருந்து இரண்டு மணி நேர பயணத்தில் உள்ள சிறிய நகரமான ஜாய்நகருக்கு மாற்றப்பட்டது. இந்த வாடகை கட்டடம் ரயில்நிலையத்துக்கு அருகில் சாலைவசதிகளுடன் இணைக்கப்பட்டிருந்தது. எங்களது சிறப்பான பணியை அறிந்த நிலஉரிமையாளர் முதல் தளத்தை காலி செய்து கண் சிகிச்சை மையத்துக்கே கொடுத்ததால் எங்கள் சேவை விரிவடைந்தது என்று நினைவுகூர்ந்தார் திட்ட உருவாக்கத்துக்கு காரணமான வினோத் கெய்த்தான். 2007-ல் வாரத்தில் மூன்றுநாள் 15 பேருக்கு கண் பரிசோதனை நடத்துவதில் தொடங்கி 2023 இல் 3,500 பேருக்கு கண் அறுவைச்சிகிச்சையும், 3 லட்சம் வெளிநோயாளிகளுக்கு கண் பரிசோதனை செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளது. ஜாய்நகர் மருத்துவமனையில் நாங்கள் நீண்டகாலம் பயணித்துள்ளோம். அந்த மையத்தின் மொத்த அளவே 5,000 சதுர அடிதான். எங்களுக்கு இடநெருக்கடி ஏற்பட்டது. மேலும் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் நோயாளிகளையும் சமாளிக்க வேண்டியிருந்தது. கண்புரை அறுவைச்சிகிச்சையை நாங்கள் 2008 ஆம் ஆண்டில்தான் தொடங்கினோம் என்றார் அவர்.

சேவையை விரிவுபடுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் ரூ.1.5 கோடி மதிப்பில் (நிலத்துக்கான மதிப்பும் சேர்த்து), 10,000 சதுர அடியில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. RC கொல்கத்தா சௌரங்கி, RC கொல்கத்தா யுவிஸ் மற்றும் RCC HDC ஹெச்டிசி ஆகியவற்றின் கூட்டுமுயற்சியுடன், இதர நன்கொடையாளர் பங்களிப்புடனும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஜனவரி 23, கண் மருத்துவமனை, பழைய இடத்திலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ள புதிய கட்டடத்திற்கு இடம்பெயர்ந்தது. அந்த மருத்துவமனைக்கு ஜாய்நகர் ரோட்டரி கண் மருத்துவமனை என புதிய பெயர் சூட்டப்பட்டது. இங்கு தினமும் 50 முதல் 60 புற நோயாளிகளுக்கு கண் பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. கொல்கத்தா சௌரங்கி ரோட்டரி சங்கம் மற்றும் RID 3310-க்கு உட்பட்ட சிங்கப்பூர் ரோட்டரி சங்கத்தின் கூட்டு முயற்சியில் சர்வதேச திட்டத்தின் கீழ் 32,000 டாலர் மதிப்பில் நவீன மருத்துவ கருவிகள், சாதனங்கள் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளன என்றார் டான்டியா.

மேலும் கொல்கத்தா யுவிஸ் ரோட்டரி சங்கம் மற்றும் கில்டுபோர்டு வே ரோட்டரி சங்கம் (RID 1145, UK) கூட்டு முயற்சியில் அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள் நிறுவுவதற்கான 37,000 டாலர் சர்வதேச மானிய உதவி திட்டத்துக்கு மார்ச்சில் ஒப்புதல் கிடைத்துள்ளது. இரண்டு சர்வதேச மானிய உதவி திட்டங்களின் மதிப்பைக் கூட்டினால் கட்டுமானச் செலவு, மருத்துவ உபகரணங்கள், கருவிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ.4 கோடியாக இருக்கும். இதில் CSR நிதியுதவி ரூ.30 லட்சம் என்றார் கெய்த்தான். ■

# சோலாப்பூரின் பீடித் தொழிலாளர்கள்

வியங்கடேஷ் மேட்டன்

சோலாப்பூரில் உள்ள பெண் பீடித் தொழிலாளிகளின் அன்றாட வாழ்க்கை வலிமை மற்றும் நெகிழ்ச்சிக்கான சான்றாகும். இந்தப் படங்கள் அவர்களின் அன்றாட வாழ்க்கையின் சாரத்தையும், அவர்களுக்கிடையேயான தோழமையையும், துன்பங்களை எதிர்கொள்ளும் அவர்களின் அசைக்க முடியாத மனதையும் படம்பிடிக்கின்றன.

சராசரியாக ஒவ்வொரு பெண்ணும் ஒரு நாளைக்கு 1,000 பீடிகள் தயாரிக்கிறார்கள். மகாராஷ்டிரா அரசு பீடி கர்குல் என்ற குறைந்த விலை வீட்டுவசதி சங்கத்தை கட்டியுள்ளது, அங்கு பெரும்பாலான பீடி தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் வசிக்கின்றனர். மற்றவர்கள் அக்கம்பக்கத்தில் ஒரு அறை தங்குமிடங்களில் வசிக்கின்றனர். பெண்கள் தங்கள் சம்பாத்தியத்தை பெறும் வங்கிகள் அருகில் உள்ளன.■



















இதன் பங்களிப்பாளர் RID 3132 முன்னாள் ஆளுநர் ஆவார்.

# ரோட்டரி ஆளுநர்



**G. சுமித்திரன்**
*நெஞ்சகநோய் அறுவைச்சிகிச்சை நிபுணர்,*
RC *கருநாகப்பள்ளி,* RID 3211

## ரோட்டரி போட்டிகள் இளைஞர்களை ஈர்க்கின்றன

சுமித்திரன் 700 புதிய ரோட்டேரியன்கள் சேர்க்கவும், 7 புதிய சங்கங்களை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளார். அதாவது வரும் ஜூன் மாதத்தின் இறுதிக்குள் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 6,000 என உயர்த்த முடிவு செய்துள்ளார். திருவனந்தபுரம் பல்நோக்கு மருத்துவமனையில் $68,000 சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் கீழ் டயாலிசிஸ் சிகிச்சை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ரூ.5 கோடியிலான 10 சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சத்ராங்கி (வானவில்) திட்டத்தின் கீழ் இதய நோய், நீரிழிவு நோய், சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட வாழ்க்கை முறை கோளாறுகளை முன்கூட்டியே கண்டறியவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 2,300 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த சிறப்பு முகாம்களில் மனநல நோய்க்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. சத்ராங்கி திட்டத்தின் கீழ் 90 நோயாளிகளுக்கு ரூ.97 லட்சம் வரை நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது. மேலும் 30 நோயாளிகளுக்கு நிதியுதவி அளிக்கவும் திட்டமிட்டுள்ளோம். இதேபோல் மேலும் 500 சத்ராங்கி திட்ட முகாம்கள் நடத்தப்படும்.

சஹாயி (ஆதரவு) திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் 800 பேருக்கு ரூ.2 கோடி மதிப்பில் ஊன்றுகோல், செயற்கை கால்கள், காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அபயம் திட்டத்தின் கீழ் வீடற்ற குடும்பங்களுக்கு தலா ரூ.6 லட்சம் மதிப்பில் வீடு வழங்கப்படும். TRF-க்கு 1 மில்லியன் டாலர் நிதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார். 2006-ம் ஆண்டு அவர் ரோட்டரியில் சேர்ந்தார். அதன் பிறகு இதுவரை 250 பேருக்கு ரோட்டரி திட்டத்தின்கீழ் இதய அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.■



**புஸிரெட்டி சங்கர் ரெட்டி**
*வேர்ஹவுஸிங்,* RC *பத்ராசலம்,* RID 3150

## சங்கத் தலைவர், மாவட்ட ஆளுநர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்

நட்புறவு, கூட்டுறவு மற்றும் சமூக சேவை ஆகியவைதான் சங்கர் ரெட்டியை 1994-ல் ரோட்டரியில் சேர ஈர்த்தது. மெகா சேவை திட்டங்களை உருவாக்குவதில், நிபுணர்களான PDGs மறைந்த A V ஆச்சார் மற்றும் ரவி வாட்லாமணி ஆகியோரால் நான் ஈர்க்கப்பட்டேன் என்று அவர் கூறுகிறார். சங்கத்தின் தலைமையை வளர்ப்பதில் அவர் கவனம் செலுத்துகிறார்.

20 சதவீத நிகர உறுப்பினர் வளர்ச்சியின் லட்சிய இலக்குடன் அவர் 800 புதிய ரோட்டேரியன்களை சேர்க்க திட்டமிட்டுள்ளார். அவர்களில் பாதிப்பேர் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது தெலங்கானா மற்றும் ஆந்திராவின் இரு வருவாய் கோட்டங்களில் உள்ள 112 சங்கங்களில் மொத்தம் 4,370 ரோட்டேரியன்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ஆந்திர மாநிலத்தின் பலநாடு மாவட்டத்தில் வினுகொண்டா கிராமத்தில் $500,000 சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் கீழ் தடுப்பணை கட்டப்பட்டு வருகிற மே மாதம் திறக்கப்பட உள்ளது. இந்த நீர்நிலைத் திட்டம் மூலம் 150 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும். மேலும் கிராமப்புற வருவாயை அதிகரிக்கும். ஹைதராபாதில் உள்ள நிலோஃபர் குழந்தைகள் மருத்துவமனை மற்றும் M N J புற்றுநோய் மருத்துவமனைகளுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான இரு சர்வதேச மானிய திட்டங்கள் மூலம் மருத்துவக் கருவிகள் வழங்கப் பட்டுள்ளன. TRF நிதி வழங்குவதற்கான அவரது இலக்கு 600,000 டாலர்கள்.■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**S சுந்தரராஜன்**
*எலும்பியல் அறுவைச்சிகிச்சை நிபுணர்,*
RC *உடுமலைப்பேட்டை தேஜஸ்,* RID 3203

## ரோட்ராக்ட் சங்கங்களுக்கான புதிய பார்வை

ரோட்ராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கங்களை நோக்கி இளைஞர்கள் சக்தியை திரட்டுவதில் ரோட்டரி கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் சுந்தரராஜன். ஆனால், பல ரோட்ராக்ட் சங்கங்கள் கட்டாய நிலுவைத் தொகை வசூலை தொடங்கிய பின்னர் நிறுத்தப்பட்டு விட்டன. இப்போது நாங்கள் 20 புதிய ரோட்ராக்ட் சங்கங்களை சேர்த்துள்ளோம். மாவட்டத்தில் மொத்தம் 70 ரோட்ராக்ட் சங்கங்கள் உள்ளன. இன்டராக்ட் சங்கங்களை இரட்டிப்பாக்கி 120 என உயர்த்தியுள்ளோம் என்கிறார் அவர்.

புதிதாக சேர்க்கப்பட்ட 100 உறுப்பினர்கள் உள்பட மொத்தம் 4,950 உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் 150 உறுப்பினர்கள் ரோட்டரியில் சேர உள்ளனர். 3 புதிய சங்கங்கள் நிறுவப்பட்டு மொத்த எண்ணிக்கை 98 ஆக உயர்த்தப்படும். கோத்தகிரி அரசு மருத்துவமனைக்கு, பொள்ளாச்சி அரசு மருத்துவ மனைக்கும் ரூ.35 லட்சம் மதிப்புள்ள மருத்துவக் கருவிகள் வழங்குவது உள்ளிட்ட மூன்று சர்வதேச மானியத் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார். சமீபத்தில் பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் வாகனத்தை (ரூ.30 லட்சம் மதிப்பு) கொடியசைத்து தொடங்கிவைத்துள்ளார்.


TRF-க்கான அவரது இலக்கு 6,00,000 டாலர்கள் ஆகும். 1991 ஆம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்த அவர், உகாண்டா, நைஜீரியா ஆகிய நாடுகளுக்கும், உத்தரப்பிரதேசம் (ஏழு முறை) காஷ்மீர் (பிப்ரவரி 2024) ஆகிய இடங்களுக்கும் ரோட்டரியின் மருத்துவக் குழுவில் பங்கேற்று சேவை செய்துள்ளார்.■

**ஜெயஸ்ரீ மொஹந்தி**
*மென்பொருள்,* E-club of district 3262

## சங்கத்தை வலுப்படுத்த ஒரு சரிபார்ப்பு பட்டியல்

தொழில்நுட்ப வல்லுனர் தம்பதிகளான ஜெயஸ்ரீ மற்றும் அவரது கணவர் தன்மய் மொஹந்தி, இருவரும் 2008-ம் ஆண்டில் ரோட்டரி சங்க கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர். சங்கத்தின் மாநாட்டு நிகழ்ச்சிகளால் ஈர்க்கப்பட்ட நாங்கள், வீட்டிற்கு வந்தபிறகு ஆலோசித்து ரோட்டரியில் சேர முடிவு செய்தோம் என்று ஜெயஸ்ரீ நினைவுகூர்ந்தார். உறுப்பினர்கள் வளர்ச்சி, தக்கவைப்பு மற்றும் திட்டச் செயல்பாடுகள் குறித்து தமது சங்கத்துக்கான சரிபார்ப்பு பட்டியலை அவர் தயாரித்தார். ஒவ்வொரு ரோட்டேரியனும் குறைந்தது 20 தன்னார்வ மணிநேரங்களைச் செலவிட வேண்டும் என்பது அவரது கருத்தாகும்.

115 சங்கங்களில் 4,000 உறுப்பினர்களுடன் அவர், 400 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து 10 சதவீத வளர்ச்சியை கடந்துள்ளார். இந்த ஆண்டு ஜூன் மாதம் இறுதிக்குள் மேலும் 200 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அவர் உறுதிபூண்டுள்ளார். அவரது குறிப்பிடத்தக்க திட்டங்களில் பாலசோரில் ஒரு மம்மோகிராபி மையம் (GG: $670,000), புவனேஸ்வரம் அருகில் ஒரு ரோட்டரி நோய்கண்டறியும் மையம் (GG: $450,000) அமைக்கப்படும். மேலும் காலஹண்டி அரசு மருத்துவ மனையில் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவு அமைக்க $38,000 சர்வதேச மானியத்துக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. TRF-க்கு $275,000 நிதியளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.■





# சுற்றுச்சூழலுக்கு உதவ ரோட்டரி சங்கங்கள் என்ன செய்யலாம்

மீனாட்சி வெங்கடராமன்

ஏப்ரல் 2024-ல், ரோட்டரி சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை சிறப்பித்துக் காட்டும் நம் முதல் மாதத்தை கொண்டாட உள்ளோம். 1990-ம் ஆண்டில், PRIP பாலோ V C கோஸ்டா சுற்றுச்சூழலை தனது முதன்மையான காரணங்களில் ஒன்றாக எடுத்து, ப்ரிசர்வ் பிளானட் எர்த் திட்டத்தை உருவாக்கினார். ஜூன் 2020-ல், RI இயக்குநர்கள் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை வாரியம், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ரோட்டரியின் ஏழாவது கவனம் செலுத்தும் பகுதியாக ஆக்குவதற்கு ஏகமனதாக ஒப்புதல் அளித்தது. 2021-ல், TRF சுற்றுச்சூழலுக்கு உலகளாவிய மானியங்களை வழங்கத் தொடங்கியது. காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கான ரோட்டரியர் நடவடிக்கையின் மையத்தில் சங்கங்கள் உள்ளன. பயனுள்ள திட்டங்களைக் கண்டறிய, ரோட்டரி ஆக்ஷன் குழுக்கள் மற்றும் TRF ஆகியவற்றிலிருந்து வேகமாக வளர்ந்து வரும் நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவியை சங்கங்கள் பெறலாம்: சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ரோட்டரி நடவடிக்கை குழு (ESRAG), அழிந்து வரும் உயிரினங்களுக்கான ரோட்டரி நடவடிக்கை குழு (RAGES), WASHRAG மற்றும் சுற்றுச்சூழல், நீர் மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாடு TRF கேடர் நிபுணர்கள்.

பெரும்பாலான சங்கங்கள் கேட்கும் ஒரு கேள்வி: நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நம் சங்கம் செய்யக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டம் என்ன? இந்தக் கேள்வியைக் கேட்பதே உங்களைச் சரியான பாதையில் கொண்டு சென்றுவிட்டது. ESRAG-ன் இணையதளம் (*www.esrag.org*) நமது நுகர்வைக் குறைப்பதில், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கைத் தவிர்ப்பதில், தண்ணீரைச் சேமிப்பதில் மற்றும் மரங்களை நடுவதில் ரோட்டரி சங்கங்களின் வெற்றியை விளக்கும் பல திட்டக் கட்டுரைகளை வழங்குகிறது.

ஆபரேஷன் பாலிநேஷன் பல்துறை, உயர் தாக்க பல்லுயிர் திட்டத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு. PRIP ஜெனிஃபர் ஜோன்ஸ் தனது இந்தியப் பயணத்தின் போது, தனித் தேனீக்களுக்குத் தேனீ வீடுகளை ரோட்டேரியர்கள் நிறுவுவதைப் பற்றி அறிந்துகொண்டு ஊக்கமடைந்தார். மொட்டை மாடிகள், தோட்டங்கள், பொது பூங்காக்கள், பள்ளி முற்றங்கள் மற்றும் பலவற்றில் மகரந்தச் சேர்க்கைக்கு ஏற்ற நடவுகளை உருவாக்க ரோட்டேரியர்கள் வழிவகுக்க முடியும். உங்கள் உள்ளூர் க்ரிஷி விக்யான் கேந்திராக்களை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் மற்றும் பெண்கள் குழுக்கள் தேனீ வளர்ப்பாளர்களாக மாறுவதற்கான வாழ்வாதார விருப்பங்களுக்கு நிதியளிக்கலாம்.

சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தவும், விவசாயிகளின் நிதிப் பாதுகாப்பை அதிகரிக்கவும் நிலையான வேளாண்மை மற்றொரு சிறந்த வாய்ப்பாகும். உதாரணமாக, டீசல் எரிபொருளுக்கு பதிலாக சூரிய சக்தியில் இயங்கும் நீர் பம்புகளை வழங்கலாம். இதே போல், வேளாண் விரிவாக்க

அலுவலகங்கள் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை அல்லது உரம் தயாரிக்கும் நுட்பங்களை கற்பித்தல், உரத்தில் விவசாயிகளின் பணத்தை மிச்சப்படுத்துதல் மற்றும் வறண்ட மண்ணை மீட்டெடுப்பது போன்ற திட்ட யோசனைகளை உங்கள் சங்கம் மூலம் வழங்கலாம்.

காலநிலை நடவடிக்கை உமிழ்வைத் தடுப்பது மட்டு மல்லாமல், புதைபடிவ எரிபொருட் களிலிருந்து கொடிய துகள் கொண்ட காற்று மாசுபாட்டைக் குறைப்பதன் மூலம் ஆரோக்கியத்தைப் பாது காக்கிறது. குறைந்த வருமானம் கொண்ட டாக்சி ஓட்டுநர்களுக்கு இ-ஆட்டோ ரிக்ஷாக்களை அணுக உதவுதல் - எரிபொருளின் செலவைச் சேமித்தல் - மற்றும் ஆபத்தான வெப்பத்தீவுகளைக் குறைக்க நகர்ப்புறங்களில் மரங்களை நடுவதற் கான பிரச்சாரங்களை ஏற்பாடு செய்தல் ஆகியவை எடுத்துக்காட்டு களில் அடங்கும். ரோட்டேரியர்கள் தங்கள் வீடுகள், அலுவலகங்கள் அல்லது திட்டங்களில் அமைக்கப் பட்டுள்ள சோலார் பேனல்களின் எண்ணிக்கையை பதிவு செய்வதற் கான சர்வதேச பிரச்சாரம் இப்போது நடந்து வருகிறது. மில்லியன் சோலார் பேனல் சவாலில் (Million Solar Panel challenge) உங்கள் விவரங்களை இங்கே உள்ளிடலாம்.

கூடுதல் யோசனைகளுக்கு, ஒவ்வொரு புதன்கிழமை இரவு 7:30 மணிக்கு ஜூம்-ல் ESRAG கருத்தரங்குகள் தொடரில் கலந்துகொள்ளவும், இதில் திட்ட யோசனைகள் பற்றிய 30 நிமிட விளக்கக்காட்சியும் அதை தொடர்ந்து கலந்துரையாடலும் உள்ளது.

**கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் மற்றும் தவிர்க்க வேண்டிய ஆபத்துகள்:** இந்தியாவின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் சவால்களில் சிலவற்றிற்கு விரைவான தீர்வுகளை வழங்க இந்திய ரோட்டேரியர்களுக்கு பல வழிகள் உள்ளன, ஆனால் திட்டங்களைத் தோல்வியடையச் செய்யும் பொதுவான ஆபத்துக்களை தவிர்த்து தீர்வுகளை வடிவமைக்க வேண்டும். சில வாய்ப்புகள் மற்றும் தவிர்க்க வேண்டிய தவறுகள் இங்கே.

**மரத் திட்டங்கள்:** சுற்றுச்சூழல் திட்டங்களில், ஒரு ரோட்டரி ஆண்டுக்கு அப்பால் சங்க அர்ப்பணிப்பு தேவை. ரோட்டரி தோட்டங்களின் சைன்போர்டுகளை நாம் அவ்வப்போது பார்ப்போம், ஆனால் அங்கே மரங்கள் இருக்காது, ஏனெனில் சங்கங்கள் அதற்கான பராமரிப்பு மற்றும் நிலைத்தன்மைக்கு திட்டமிடவில்லை. நீங்கள் ஒரு நடவுத் திட்டத்தைச் செய்ய முடிவு செய்வதற்கு முன், நீங்கள் அனைத்து அனுமதிகளையும் பெற்றுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும், மேலும் மூன்று ஆண்டுகளுக்குள் பராமரிப்புக்காக திட்டமிடவும். எல்லா நிலங்களும் மரம் நடுவதற்கான பாழ்நிலம் அல்ல. உங்கள் உள்ளூர் வனத் துறையைத் தொடர்பு கொள்ளவும் அல்லது

RC *தாராபுரம்,* RID 3203, *உறுப்பினர்கள், பவானி ஆற்றை சுத்தம் செய்கிறார்கள்.*



உங்களை அவர்களுடன் இணைக்க *esragsouthasia@esrag.org* என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**காற்றின் தரம்:** ஒவ்வொரு குளிர்காலத்திலும், புது தில்லி பிராந்தியத்தில் பயிர்க் காடுகளை எரிப்பது காற்றின் தரத்தை மோசமாக்குகிறது. ஆனால் கொடிய துகள் மாசுபாட்டின் பெரும்பகுதி சமையல் அடுப்புகளில் விறகுகளை எரிப்பதால் வருகிறது. போக்குவரத்துக்கான டீசல் எரிபொருளானது கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வு மற்றும் கடுமையான நோய்களின் சுமையை அதிகரிக்கும் துகள்களின் மற்றொரு ஆதாரமாகும். LPG-க்கான மானியங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். உங்கள் சங்கம் சுத்தமான சமையல் அடுப்புகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் திட்டத்தைச் செய்யலாம்.

**நீரின் தரம்:** வரலாற்றில் 2023 வெப்பமான ஆண்டாகும். பெங்களூரு போன்ற நகரங்களில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. ஏப்ரல் 20 மற்றும் 21-ம் தேதிகளில், ஒரு வாட்டர் மிங்கா (*https://tinyurl.com/waterminga*), தூய்மைப்படுத்துதல், தூர்வாருதல், விழிப் புணர்வு பிரச்சாரங்கள் அல்லது எந்தவொரு ஏரி, ஈரநிலம், ஆறு, ஓடை அல்லது முகத்து வார திட்டத்தின் மூலம் உலகெங்கிலும் உள்ள சமூகங்களை ஒன்றிணைத்து கின்னஸ் சாதனையை உருவாக்க திட்டமிட்டுள்ளது. நீங்கள் தண்ணீர் திட்டத்தைச் செய்கிறீர்கள் என்றால், அதை ரோட்டரியின் சமூக நடவடிக்கைக்கான CAFW தளத்தில் (*Community Action For Fresh Water*) பதிவு செய்யவும்.

தேசிய நதி பாதுகாப்பு இயக்குநரகம், ஜல் சக்தி, இந்திய அரசு மற்றும் WWF ஆகியவற்றுடன் பவானி ஆற்றின் மறுசீரமைப்பாக RID 3203 மற்றும் கூவம் நதிக்காக RID 3232 ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இவை நீர்நிலைகளின் அருகில் உள்ள சங்கங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் சுத்தம் செய்ய, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க, ஈரநிலங்களை பராமரிக்க அல்லது முகத்துவாரங்களில் உள்ள சதுப்புநிலங்களை மீட்டெடுக்க உதவுகின்றன. RID 3240 இன் ‘லைஃப் டு ரிவர்ஸ்’ என்பது நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதிலும் மீட்டெடுப்பதிலும் கவனம் செலுத்தும் உலகளாவிய முயற்சியாகும். ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை ஆதரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள நமது நீரோடைகள் மற்றும் நதிகளைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயனுள்ள நடவடிக்கை எடுக்கவும் ரோட்டரி சங்கங்கள் மற்றும் கூட்டாளர்களை ஈடுபடுத்துவது இந்த முயற்சியின் நோக்கமாகும்.

இந்த முன்முயற்சியின் கீழ், மாவட்டம் முழுவதும் உள்ள சங்கங்கள் தங்கள் பகுதியில் உள்ள நதிகளை காப்பாற்ற நதிகளை சுத்தம் செய்யும் இயக்கங்கள், மக்கள் விழிப்புணர்வு பேரணிகள், நதிகளுக்காக நடைபயணம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்துள்ளன. RID3291-ல் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு கொல்கத்தாவில் உள்ள ஆதிகங்கா நதியில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. சில சங்கங்கள் ஏரி மறுசீரமைப்பை ஆராய்கின்றன, சில சமூக நதி காப்பாளர்களை அமர்த்த அல்லது நீர்நிலைகளை மீட்டெடுக்க விரும்புகின்றன. ஏற்கனவே சங்கங்கள் தடுப்பு அணைகளை அமைத்து வருகின்றன. இவை



*சிதம்பரம் வெள்ளார் முகத்துவாரத்தில் சதுப்புநில மரக்கன்றுகள் நடப்படுகிறது.*





PDG *பாலாஜி பாபு (வலமிருந்து மூன்றாவது) மற்றும்* RC *மயிலாடுதுறை உறுப்பினர்கள் வெள்ளார் முகத்துவாரத்தில் ஒரு முன்னோடி சதுப்புநில பாதுகாப்பு மற்றும் தோட்டத் திட்டத்தில்.*

அனைத்தும் ரோட்டரி-UNEP திட்டத்தின் கீழ் வருகின்றன. CAFW திட்டத்தில் ஏதேனும் உதவிக்கு *cafw@rotary.org*-க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**சதுப்புநிலங்கள்:** சதுப்புநிலங்கள் கடலோர வெள்ளத்திற்கு ஒரு தடையாக செயல்படுகின்றன மற்றும் வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடலில் அதிகரித்து வரும் தீவிர சூறாவளிகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களை பாதுகாக்க உதவு கின்றன. இந்தியாவில் சதுப்புநில மறுசீரமைப்பு வளர்ந்து வருகிறது, சிதம்பரத்தில் RID 2981 இல் ஒரு உலகளாவிய மானியத் திட்டத்தில் தொடங்கி, அதன் வெற்றியை விரிவுபடுத்துவதற்கான மற்றொரு மானியம் திட்டநிலையில் உள்ளது.

சுந்தரவனக் காடுகளில், RID 3291-ன் வேறுபட்ட உலகளாவிய மானியம், இப்போது உள்நாட்டில் அழிந்து வரும் சதுப்புநில பனைகளுக்கான நாற்றங்கால் உருவாக்கவும், கட்டுகளை உறுதிப்படுத்தவும், சதுப்புநில அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கவும் பார்க்கிறது. இந்த திட்டங்கள் மாவட்டங்கள், சங்கங்கள் மற்றும் பிற பிராந்திய பங்குதாரர்களுக்கு இடையே நிறுவன ஒத்துழைப்பை ஊக்குவிக்கின்றன. நீங்கள் TRF கேடர் மற்றும் ESRAG நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி ஒரு நிலையான திட்டத்தை உருவாக்கலாம். உங்கள் சங்கம்/மாவட்டம் கடற்கரையில் இல்லை என்றாலும் நீங்கள் சதுப்புநில திட்டங்களில் வேலை செய்யலாம். *Projecte@esrag.org* உடன் இணையவும்.

**பிளாஸ்டிக் மற்றும் பிற திடக்கழிவு மாசுபாட்டைக் குறைத்தல்:** RID 3020-ல் மாசுபாட்டைக் குறைத்தல், மறுசுழற்சி, மறுபயன்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத் திற்கான பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு ஆகியவை இந்த ரோட்டரி ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ள மற்ற உலகளாவிய மானியங்கள். RID 3150-ல் பிஸ்கட் மற்றும் சாக்லேட் ரேப்பர்கள் போன்ற பல அடுக்கு பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களைப் பிரித்து மறுபயன்பாடு செய்யும் ஒரு மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒரு உலகளாவிய மானியம் வடிவம் பெற்று வருகிறது. RID 3182, கோழி இறகுகளை பேக்கேஜிங்காக மாற்றும் திட்டத்திற்கு மாவட்ட மானியம்



வழங்கியது. மற்ற திட்டங்களும் திட்டநிலையில் உள்ளன. சுற்றுச் சூழலில் உலகளாவிய மானியத் திட்டத்தை கண்டு அச்சுறுத்தலாக உணர வேண்டாம். வடிவமைப்பு மற்றும் கூட்டாண்மை உதவிக்கான உங்கள் விசாரணைகளை *projects@ esrag.org*-க்கு அனுப்பலாம்.

**பெண்களின் பொருளாதார வெற்றியை ஊக்குவித்தல்:** RID 3212-ல், கடல் வளங்களைப் பயன்படுத்தி பெண்களின் சுற்றுச் சூழல் தொழில்முனைவை ஊக்கு விக்கும் திட்டங்களை நாங்கள் கொண்டுள்ளோம்.

**உங்கள் தாக்கத்தை ஆவணப் படுத்தவும்:** ஒரு திட்டத்தின் தாக்கத்தை அளவிடுவது நம்பிக்கையைத் தருகிறது மற்றும் வேகத்தை உருவாக்குகிறது. இந்தத் தாக்கத்தைக் காட்ட சங்கங்கள் ஆண்டுதோறும் தரவைச் சேகரித்து அறிக்கையிட வேண்டும். மின்-கழிவு பிரச்சாரங் களில் நாம் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளோம்: RID 3131 கடந்த மூன்று ஆண்டுகளாக இதை முறையாகச் செய்து வருகிறது, மேலும் இது பல மாவட்டங்களில் வேகத்தைப் பெற்று வருகிறது.

*RC கல்கத்தா மகாநகரின் உலகளாவிய மானிய திட்டமான சுந்தரவனம் பனை முளைப்பு மையம் மற்றும் நாற்றங்கால்.*



மாசுக்கட்டுப் பாட்டு வாரியத்தால் அடையாளம் காணப்பட்ட ஒரு சேகரிப்பு நிறுவனத்திற்கு நீங்கள் மின்-கழிவுகளை வழங்கும்போது, உங்கள் சங்கம் உங்கள் தாக்கத்தைப் பற்றிய ரசீதைப் பெறுகிறது. இந்த ரசீதை பதிவேற்றலாம். உங்கள் சமூகத்துடன் தாக்கத்தைப் பகிர்ந்து கொள்ள உங்கள் சங்கத் திட்டக் குழுவிற்கு தரவு கண்காணிப்பு பணியாளர் ஒருவரை நியமிக்கவும் மற்றும் ESRAG இன் திட்ட தாக்க அறிக்கையிடல் கருவியில் (*www. esrag.org/initiatives*) ஒவ்வொரு ஆண்டும் தரவைப் பதிவேற்றவும். ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், *support@irotree.org*-க்கு மின்னஞ்சல் அனுப்பவும். உங்கள் சுற்றுச்சூழல் திட்டங்களைப் பற்றி எங்களிடம் கூறுங்கள், இதன் மூலம் உங்கள் முன்முயற்சிகளை எங்களால் முன்னிலைப்படுத்த முடியும்.

தரவு ஏன் முக்கியமானது? உங்கள் திட்டங்களின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை ஆவணப்படுத்தபடுவதை நாங்கள் உறுதிசெய்யலாம். தொடர்ந்து செய்யப்படும் திட்டங்கள் உள்ளூர் நிர்வாகங்களுடனான உறவுகளை வளர்க்கின்றன மற்றும் சமூகத்தில் பெருமை மற்றும் உரிமையை உருவாக்குகின்றன. வெற்றிகரமான சுற்றுச்சூழல் திட்டங்கள் புதிய ரோட்டரி அல்லது ரோட்ராக்ட் உறுப்பினர்களை ஈர்க்கின்றன மற்றும் புதிய, காரண அடிப்படையிலான சங்கங்களை உருவாக்குகின்றன.

**2023–24 திருப்புமுனைகளின் ஆண்டு:** இந்த ரோட்டரி ஆண்டு பல முதல்களைக் கொண்டிருந்தது. துபாயில் நடந்த UN காலநிலை மாநாடான COP28 உட்பட எந்தவொரு பெரிய சர்வதேச கூட்டத்திலும் முதல் ரோட்டரி சாவடி வைக்கப் பட்டது இந்த ஆண்டு சர்வதேச அசெம்பிளியில், RIPE ஸ்டெஃபனி உர்ச்சிக், RI மற்றும் ஐக்கிய நாடு களின் சுற்றுச்சூழல் திட்டத்திற்கு (UNEP) இடையே நன்னீருக்கான சமூக நடவடிக்கைக்கு தீர்வு காணும் ஒரு மூலோபாய கூட்டாண்மையை வெளியிட்டார். எர்த்ஷாட் பரிசுக்கான அதிகாரப்பூர்வ பரிந்துரையாளராக ESRAG நியமிக்கப்பட்டது, மேலும் 2024 பரிசுக்காக போட்டியிட ஐந்து திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் முன்னுதாரணமான பணியைச் செய்யும் தனிநபரோஅல்லது நிறுவனமோ உங்களுக்குத் தெரிந்தால், மேலே உள்ள இணைப்பில் ESRAG மூலம் அவர் களைப் பரிந்துரைக்கலாம்.

இந்த ஏப்ரல் முதல், நம்மையும் நம் சங்கங்களையும் காலநிலைக்கு ஏற்றதாக மாற்றுவதற்கான ஒரு திட்டத்தைச் செய்ய முயற்சிப்போம். நாங்கள் உதவ இங்கே இருக்கிறோம். ரோட்டரியின் மற்ற ஆறு பகுதிகளில் கவனம் செலுத்துவதற்கு பாது காப்பான, ஆரோக்கியமான சுற்று சூழல் அவசியம். *www.esrag.org* போன்ற ரோட்டரி நடவடிக்கை குழுக்களில் சேர்ந்து, உங்கள் நிபுணத்துவத்தையும் ஆர்வத்தையும் தன்னார்வத் தொண்டராகப் பணிக்குழுக்கள் மற்றும் திட்டப் பிரிவுகளில் பகிர்ந்து, பள்ளிக் குழந்தைகள் முதல் வணிகத் தலைவர்கள் வரை, ரோட்டரி குடும்பத்தின் சக உறுப்பினர்களுடன் வெற்றிகரமான சுற்றுச்சூழல் திட்டங்களைச் செயல்படுத்த உதவுங்கள். RAG-ன் உறுப்பினராக, உள்ளூர் மட்டத்தில் மட்டுமல்லாமல், உலகளாவிய பணிக்குழுக்களின் ஒரு பகுதியாக இருக்கவும் மற்றும் தலைமைப் பாத்திரங்களுக்கான வாய்ப்புகளையும் நீங்கள் பெறுவீர்கள்.

**Weblinks**

ESRAG: www.esrag.org

ESRAG projects and global grant help: *www.esrag.org/projects*

Guinness Book of World Records Water Minga: https://*tinyurl.com/waterminga*

Rotary-UNEP Community Action for Fresh Water: *cafw@rotary.org*

ESRAG Initiatives and Taskforces: www. *esrag.org/initiatives*

இக்கட்டுரையின் எழுத்தாளர் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ரோட்டரி நடவடிக்கை குழுவின் இயக்குனர். (ESRAG) மேலும் விபரங்களுக்கு: *Projects@esrag.org*

# பெரியவர்களை எழுத்தறிவு பெறச் செய்யும் இன்டராக்டர்கள்

V முத்துகுமரன்



மஞ்சு, பபிதா, குடியா, ஹேமா, ராக்கி மற்றும் காஜல் ஆகியோர் இப்போது இந்தி நாளிதழ்களைப் படிக்கவும், தங்கள் பெயர்களில் கையெழுத்திடவும், மற்றவர்களின் உதவியின்றி வியாபாரம் செய்வதாலும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நைனிடாலுக்கு அருகில் உள்ள மலைப்பிரதேசமான நௌகுச்சியாட்டலில் பணிப் பெண்களாகவும், கடை உதவியாளர் களாகவும், கூலி வேலைகளைச் செய்து கொண்டிருந்த இந்த ஆறு நடுத்தர வயதுப் பெண்கள், RC நைனிடால், RID 3110-ன் இன்டராக்டர்களால் நடத்தப்பட்ட இரண்டு மாத பெரியோர் எழுத்தறிவுத் திட்டத்தை (Adult Literacy Programme-ALP) முடித்திருந்தனர். அவர்கள் ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தால் (RILM) உருவாக்கப்பட்ட தேர்வை எழுதி, அவர்களின் RILM சான்றிதழ்களைப் பெற்றனர்.

கல்வியறிவற்ற பெண்களுக்குக் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள இண்டராக்ட் கிளப் ஆஃப் நௌகுச்சியாட்டலின் 30 உறுப்பினர்களும் 10 முதல் 18 வயதுக்குட்பட்ட மாணவர்கள் மற்றும் அரசுப் பள்ளிகளில் படிப்பவர்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப் பட்ட குடும்பங்களைச் சேர்ந்த வர்கள் என்கிறார் RC நைனிடால் தலைவர் நரிந்தர் லம்பா. இரண்டு மாதங்கள், வாரத்தில் ஐந்து நாட்கள் நடத்தப்பட்ட பெரியோர் எழுத்தறிவுத் திட்டமானது ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் மட்டுமே அப்பெண்களை ஈடுபடுத்தியது, “இதில் அவர்களுக்கு ஹிந்தி எழுத்துக்கள், எளிமையான வாசிப்பு, எழுதுதல் மற்றும் எண்கணிதம் ஆகியவை இண்டராக்டர்களால் கற்பிக்கப்பட்டன” என்று அவர் கூறுகிறார். இண்டராக்ட் இன்சார்ஜ் பூனம் ஷர்மாவின் வீட்டில் வகுப்புகள் நடத்தப்பட்டன, அவரது இண்டராக்டர்கள் ஆசிரியர்களின் வேலையைச் செய்வதில் பெருமிதம் கொள்கிறார். இப்போது, ஆறு பெண்களும் தங்கள் சொந்த வீட்டுக் கணக்குகளைக் கையாளுகிறார்கள், சந்தையில் இருந்து பொருட்களை வாங்க முடிகிறது, மேலும் சமூகத்திலிருந்து ஒரு புதிய மரியாதையைப் பெற்றுள்ளனர்.



RC *நைனிடால் தலைவர் நரிந்தர் லம்பா நௌகுசியாட்டலில் இன்டராக்டர்களுடன்.*

இண்டராக்ட் சங்கத்தலைவர் ஜோதி ஆர்யா (வகுப்பு 12) "பெண்களுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுத்ததில் நாங்கள் பெருமைப்படுகிறோம்; சமுதாயத்திற்கு சேவை செய்வதற்கான இந்த வாய்ப்பு எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது மற்றும் மேலும் பலவற்றைச் செய்ய தூண்டியது என கூறுகிறார். சமூகம் சார்ந்த இண்டராக்டர்களுக்கு நைனிடால் ரோட்டேரியர்கள் அவர்களின் பெரியோர் எழுத்தறிவுத் திட்டத்திற்கு படிக்கும் பொருள், ஆய்வுக் கருவிகள், எழுதுபொருள்கள் மற்றும் உரைகள் ஆகியவற்றுடன் ஆதரவளித்தனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டதில் இருந்து, இன்டராக்ட் சங்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் தூய்மை இயக்கத்தை செய்கிறது. "இந்த தூய்மை இயக்கத்தின் போது குப்பையில்லா சுற்றுப்புறத்தை உறுதி செய்வதற்காக சிறுவர்களும் சிறுமிகளும் சுற்றுச்சூழலைப் பற்றி பொதுமக்களுக்கு உணர்த்துகிறார்கள்" என்கிறார் லம்பா.

### மன ஆரோக்கியம்

ஒலி மூலம் குணப்படுத்தும் சங்க உறுப்பினர் அட்னான் வாகன்வதி, செவ்வாய் கிழமைகளில் ஜூம் அமர்வை நடத்துகிறார், இதில் சுமார் 50 ரோட்டேரியர்கள் பங்கேற்கின்றனர். அவர்கள் மனதை ரிலாக்ஸ் செய்யும் "சவுண்ட் பாத்"க்காகத் தங்கள் இயர்போனைச் அணிகிறார்கள்; மேலும் "அவர்களின் பிரச்சனைகள், கவலைகள் மற்றும் மனக்கவலைகளைப் பற்றி வெளிப்படையாக பேசுகிறார்கள்." ஒரு விருந்தினர் பேச்சாளர் ஊக்கமளிக்கும் பேச்சு கொடுக்கிறார், அதைத் தொடர்ந்து உரையாடல் நடைபெறுகிறது.

இதுவரை, 101 சிறுமிகளுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராக HPV தடுப்பூசியை சங்கம் வழங்கியுள்ளது மேலும் "ஜூன் இறுதிக்குள் 150–170 சிறுமிகளுக்கு தடுப்பூசி போடுவதே எங்கள் இலக்கு." 39 உறுப்பினர்களைக் கொண்ட 72 ஆண்டுகளான சங்கம், 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான 30 பெண் குழந்தைகளின் கல்விக்கு Beti Bachao Beti Padao திட்டத்தின் கீழ் நிதியுதவி செய்கிறது.■



ஒரு பூங்காவை சுத்தம் செய்யும் இண்டராக்டர்கள்.



# மாற்றுத்திறனாளிகளுக்கான கொண்டாட்டங்கள்

**சபோர்ன குமார் டே**

அது 2000-ம் ஆண்டின் குழந்தைகள் தினம். RID 3240-க்கு உட்பட்ட பர்த்வான் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் சிலர், அன்றைய தினம் ஒரு பள்ளியில் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர். குழந்தைகள் நடனம், பாட்டு என பல்வேறு நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் முகத்தில் வெளிப்பட்ட மகிழ்ச்சி அங்கிருந்த ரோட்டேரியன்களின் நெஞ்சைத் தொட்டது. அவர்களில் ஒருவருக்கு ஒரு புதிய யோசனை மனதில் தோன்றியது. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்காக ஏன் நாம் இதுபோன்ற கொண்டாட்டத்தை நடத்தக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது.

ரோட்டேரியன்களின் வாராந்திரக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர் 3-ம் தேதி அதைக் கொண்டாட முடிவு செய்தோம். மேற்குவங்க மாநிலம், பர்த்வானில் உள்ள அரவிந்தர் பவனில் நாங்கள் அனைவரும் ஒன்றுகூடினோம். விழாவுக்காக போலீஸ், உதவிக் கோட்ட அதிகாரி மற்றும் நகராட்சிகளிடம் முன்கூட்டியே அனுமதி பெறப்பட்டது. அந்த நேரத்தில் சிறப்புக் குழந்தைகளுக்காக இரண்டு பள்ளிகள் மட்டுமே செயல்பட்டு வந்தன. அவர்கள் விழாவுக்கு அழைக்கப்பட்டார்கள். 80 குழந்தைகள், தங்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் வந்திருந்தனர். பள்ளியில் உள்ள சிறிய மைதானத்தில் குழந்தைகள் தங்கள் விருப்பம்போல் செயல்பட அனுமதிக்குமாறு பெற்றோர்களிடம் கேட்டுக் கொண்டோம். சில குழந்தைகள் குதிக்கத் தொடங்கினர். சிலர் நடனமாடினர். வேறு சிலர் வட்டமடித்தனர். பின்னர் அவர்களுக்கு நாங்கள் கலர் பென்சிலும், காகிதமும் வழங்கினோம். அவர்கள் தங்களுக்கு தோன்றிய வகையில் அதில் கிறுக்கினார்கள் அல்லது எழுதினார்கள். அந்த இரண்டு மணிநேர நிகழ்வில் அவர்கள் பிஸியாகவே இருந்தனர். பின்னர் அவர்களுக்கு நாங்கள் பரிசு வழங்கியதுடன் மதிய உணவு அளித்தோம். இதைப்பார்த்த பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அடுத்த ஆண்டும் இதேபோன்ற ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

எனவே, நாங்கள் ஆண்டுதோறும் இந்த திட்டத்தைத் தொடர்ந்தோம். ஒவ்வொரு ஆண்டும் இதில் பங்கேற்போர் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. மேற்குவங்க மாநில அரசின் சர்வ சிக்ஷா அப்யான் திட்டம் மூலம் நிதியுதவிக்கும் நாங்கள் ஏற்பாடு செய்தோம். இந்நிகழ்வில் பங்குகொள்ளும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்ததால் 2004-ல் நிகழ்ச்சியை நடத்த மாற்று இடம் தேடினோம். பர்துவான் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கிருஷ்ண சாயர் சுற்றுச்சூழல் பூங்கா நிகழ்ச்சிக்கான இடமாக தேர்வு செய்யப்பட்டது. இந்த பூங்கா



*பாரத்தானில் சக்கர நாற்காலியில் பங்கேற்பாளர்கள்.*




*மாற்றுத்திறனாளி குழந்தைகள் பங்கேற்கும் நடன நிகழ்ச்சி.*

ஒரு பெரிய ஏரியைச் சுற்றிலும் பசுமையாக காட்சியளித்ததால் குழந்தைகள் விழாவுக்காக பல்கலைக்கழக நிர்வாகிகளிடம் அனுமதி கோரி பெற்றோம்.

2005-ம் ஆண்டு முதல் இன்றுவரை, டிசம்பர் 3-ம் தேதி, கிருஷ்ண சாயர் சுற்றுச்சூழல் பூங்காவில்தான் இந்த கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அன்றைய தினம் காலை 8 மணிக்கு, குழந்தைகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தவறாமல் ஆஜராகிவிடுகிறார்கள். அனைவருக்கு காலை உணவு மற்றும் மதிய உணவு வழங்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளி குழந்தை களுக்காக ஓவியப் போட்டியும் நடத்தப்படுகிறது. அதன்பின் நடனம், பாட்டு, கவிதை ஒப்பித்தல் மற்றும் ஆடை அணிவகுப்பு என பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், மாவட்ட ஆட்சியர், மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர், பல்கலைக்கழக டீன், DG PDG என பல முக்கிய பிரமுகர்கள் விழாவுக்கு தலைமைவகிக்க அழைக்கப்படுகிறார்கள்.

இந்த ஆண்டு சுமார் 400 குழந்தைகள் தங்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்து கொண்டனர். சுமார் 700 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. அனைத்து செலவுகளையும் ரோட்டரி சங்கமே ஏற்றது.

2022-ம் ஆண்டில் எங்கள் சங்கத்தைச் சேர்ந்த புதிய உறுப்பினர் ஒருவர், மாற்றுத் திறனாளிகளுக்காக ஒரு குறுகிய தொலைவு மராத்தான் நடத்தலாம் என்று யோசனை தெரிவித்தார். அவரது யோசனைக்கு பலத்த ஆதரவு இருந்ததால் 1 கி.மீ. தொலைவு பராத்தான் என்னும் மராத்தான் போட்டி நடைபெற்றது. 2023 டிசம்பரில் முதல் முறையாக பராத்தான் போட்டி நடந்தது. 102 மாற்றுத்திறனாளி குழந்தைகள் செயற்கை கால்கள் உள்ளிட்ட கருவிகள், ஊன்றுகோல், மூன்று சக்கர வண்டி மற்றும் சக்கர நாற்காலியுடன் நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.



*ஒரு ஓவிய அமர்வு நடந்து கொண்டிருக்கிறது.*



*பாரத்தானில் ஊன்றுகோலுடன் ஊனமுற்றோர்.*

இந்த நிகழ்வு மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்களை பொது மக்களுக்கு சிறந்த முறையில் வெளிப் படுத்துவது மற்றும் சமூகத்தில் அவர்களுக்கான மரியாதையை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டது. வானிலை மற்றும் சிறிய அளவு போக்குவரத்தை கருத்தில் கொண்டு இந்த பராத் தானுக்கு ஞாயிற்றுக்கிழமை காலை நேரத்தை தேர்ந்தெடுத்தோம்.

இந்த பராத்தானில் பர்துவா னுக்கு வெளியில் இருக்கும் மாற்றுத் திறனாளிகளும் பங்கேற்றனர். அவர்கள் முதல்நாள் இரவு வந்து தங்குவதற்கும் நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். அவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கப்பட்டது. மருத்துவப் பரிசோதனை, அவர்களுக்கு உதவும் கருவிகளைப் பரிசோதித்த பின்னரே பராத்தான் ஓட்டத்தில் பங்கேற்க அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களை எளிதில் அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு சீருடைகள் மற்றும் தொப்பி வழங்கப்பட்டது. பராத்தான் நடைபெறும் பாதை தீவிரமாக கண்காணிக்கப்பட்டது. போலீஸாரும், ரோட்டேரியன்களும் இப்பணியில் ஈடுபட்டனர். அவசர உதவிக்காக ஆம்புலன்ஸுடன் மருத்துவ குழுவினரும் தயார் நிலையில் இருந்தன. இதில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பாரத்தான் ஓட்டத்தின் இரண்டாவது நிகழ்வு ஜனவரியில் நடைபெற்றது. ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

எழுத்தாளர் RC பர்த்வான்
சவுத் உறுப்பினர்.

---

# நல்லெண்ணம் கொண்ட ரோட்டேரியன்!

**ரோட்டரி செய்திக்குழு**

ஒரு கூட்டுமுயற்சியாக ஜான்பூர் ரோட்டரி சங்கம் (RID 3120) மற்றும் மும்பைகார் ரோட்டரி சங்கம் (RID 3141) இணைந்து, உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஜான்பூர் அருகில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்த ஏழைப் பெண்ணின் முன்கை அறுவைச் சிகிச்சைக்கு நிதியுதவி செய்தன.

மும்பைகார் ரோட்டரி சங்க உறுப்பினரான கிருஷ்ணகுமார், ரோட்டரி திட்டம் தொடர்பாக உபேர் காரில் பயணம் செய்துகொண்டிருந்தார். கார் ஓட்டுநர், உறவினர் மற்றும் மருத்துவருடன் ஏதோ பேசிவிட்டு மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானதை அறிந்தார்.



*ரேணு கௌதம், அறுவை சிகிச்சைக்குப் பிறகு, ரோட்டேரியன்களுடன்.*

தானும் ஒரு மருத்துவராக இருப்பதால் கிருஷ்ண குமார், ஓட்டுனரிடம் என்ன விஷயம்? ஏன் இந்த பதற்றம் என்று கேட்டார். அதற்கு அந்த ஓட்டுநர், என் மனைவி கீழே விழுந்ததால் வலது கையில் முறிவு ஏற்பட்டுள்ளது. அதற்குச் சிகிச்சை பெற்ற போதிலும் முழுவதுமாக குணமாகவில்லை. இப்போது அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் என்கிறார்கள். அதற்குத் தேவையான பணம் என்னிடம் இல்லை. என்று வருத்தத்துடன் கூறினார். இதையடுத்து கிருஷ்ணகுமார், ஜான்பூர் ரோட்டரி சங்கத் தலைவர் சுஜீத் அக்ரஹாரியை தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினார். அதற்கு அவர், ஓட்டுநர் குடும்பத்துக்கு தம்மால் ஆன உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தார்.

கார் ஓட்டுநரின் மனைவியும் நோயாளியுமான ரேணு கௌதமுக்கு இரத்தத்தில் அதிக அளவு சர்க்கரை இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அவர், ஒருவாரம் மருத்துவர்கள் கண்காணிப்பில் வைக்கப் பட்டார். இறுதியில் அவருக்கு கையில் அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டு மூன்று நாட்கள் கழித்து வீட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். இந்த அறுவைச்சிகிச்சைக்கு ரூ.66,000 செலவானது. இதை இரண்டு ரோட்டரி சங்கங்களும் பகிர்ந்துகொண்டன.■

# ஆலப்புழையில் ஏழைகளுக்கு ரோட்டரி வீடுகள்

V முத்துக்குமரன்



DG G *சுமித்ரன் (வலது),* RC *ஆலப்பி தலைவர் முஹம்மது அஸ்லம் உடன், ரோட்டரி இல்லங்களுக்கு அடித்தளம் அமைக்கின்றனர்.*

RID 3211-க்கு உட்பட்ட ஆலப்பி ரோட்டரி சங்கத்தின் ரோட்டரி வில்லேஜ் திட்டம், தனியாரிடம் 20 சென்ட் நிலம் வாங்கி அதில் 10 வீடுகளைக் கட்டி, சங்கம் நிறுவப்பட்ட தினமான ஜுலை 25-ம் தேதி வீடற்ற ஏழைகளிடம் சாவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

நாங்கள் இந்த ஆண்டு எங்களின் பவள விழாவைக் கொண்டாடுகிறோம் (2023–24). ஆலப்புழையின் புறநகர் பகுதியான முகம்மா கிராமத்தில் இந்த வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. சங்கத்தின் நிறுவன நாளில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த நாங்கள் திட்டமிட்டு வருகிறோம் என்றார் பவள விழாக் குழுவின் தலைவர் ராஜு சண்டி.

பயனாளிகள் குடும்பத்தை தெரிவு செய்ய ஐந்து பேர் அடங்கிய குழு இதற்கான வழிகாட்டு நெறிமுகளை வரையறுத்து வருகிறது. 23 உறுப்பினர்கள் கொண்ட பவள விழாக்குழுவில் 5 புரவலர்களும் இடம் பெற்றுள்ளனர். திருவனந்தபுரம் ரோட்டரி சங்கத்துக்குப் பிறகு இரண்டாவது பழமையான ஆலப்புழை ரோட்டரி சங்கம், பவள விழா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தி மக்களின் நன்மதிப்பை பெற திட்ட மிட்டுள்ளது என்றார் சாண்டி.

வீடுகட்டும் திட்டம் பற்றி அவர் குறிப்பிடுகையில், வீடு கட்டுவதற்கான நிலம், சுற்றுச்சுவர் உள்ளிட்டவற்றுக்கான செலவு ரூ.25 லட்சமாகும். இந்த திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.1.05 கோடியாகும். ஒவ்வொரு பட்ஜெட் வீடும் ரூ.8 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

சங்கத்தின் வெள்ளிவிழா ஆண்டில் (1974), ரோட்டரி சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டது. மற்றும் இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் ஆலப்புழையில் இரண்டாவது சங்கமாக, ஆலப்புழை ஈஸ்ட் ரோட்டரி சங்கம் ஏற்படுத்தப்பட்டது. 75-வது ஆண்டு விழாவில் ஆலப்புழையில் உள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி ஏற்படுத்தப்பட்டது.

1996-ம் ஆண்டில் நகரில் உள்ள சஹ்ருதயா மருத்துவ மனைக்கு மூன்று பிரிவுகள் கொண்ட பிண வறையையும் கட்டித்தந்துள்ளோம். திட்டத்துக் கான மொத்த செலவு ரூ.1.5 லட்சம். உறுப்பினர்கள் கொடுத்த நன்கொடை மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

### பொன் விழா (1999)

நிலங்கள் சொந்தமாக வைத்திருந்த 11 பேருக்கு நாங்கள் பொன் விழா ஆண்டை ஒட்டி சங்கத்தின் சார்பாக வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளோம், என்று நினைவுகூர்ந்தார் சண்டி. ரூ.15 லட்சம் மதிப்பிலான இரு பக்க மானிய உதவி திட்டமாகும் அது.

PDG ரவி கருணாகரனின் மனைவியும் AKS உறுப்பினருமான பெட்டி கரன், பவள விழாக் குழுவின் தலைமைப் புரவலராக உள்ளார். எங்கள் ரோட்டரி சங்கம் 1949-ம் ஆண்டு ஜுலை 25-ம் தேதி தொடங்கப் பட்டது. 67 உறுப்பினர்களும் வாரம் ஒரு முறை சமூகக் கூட்டத்தில் சந்தித்துப் பேசுகிறோம்.வீடுகள் கட்டும் திட்டத்துக்கு DG G சுமித்திரன் எளிமையாக நடைபெற்ற நிகழ்வில் அடிக்கல் நாட்டினார். இதில் சங்கத்தின் தலைவர் முகமது அஸ்லாம், உதவி ஆளுநர் K செரியன், செயலாளர் ஜிஜோ சாக்கோ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.■

# நீரின்றி அமையாது உலகு

ப்ரீதி மேஹரா

*உயிரை வளர்க்கும் விலைமதிப்பற்ற திரவத்தை நியாயமாகப் பயன்படுத்த வேண்டும்.*

நாம் தண்ணீரை சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம். நாம் உயிர்வாழ்வதற்கும், பூமியில் வாழும் அனைத்து விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கும் இன்றியமையாத இயற்கை வளம் என்பதை அறிந்திருந்தும் அப்படி செய்கிறோம். அது நிரந்தமாக அபரிமிதமான விநியோகத்தில் இருக்கும் வளம் என நாம் நம்புகிறோம். வறட்சி அல்லது வெள்ளம் ஏற்படும் போது – அது மிகக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும்போது மட்டுமே தண்ணீர் மேல் கவனம் செலுத்தப்படுகிறது என்பது முரண்பாடானதல்லவா.

ஏரிகள் மற்றும் தோட்டங்களின் நகரமான பெங்களூரு கடுமையான தண்ணீர் நெருக்கடியை எதிர் கொள்கிறது என்ற கடந்த மாதச் செய்தி நம்மை எழுந்து அமர வைத்து, நம்மைத் தாங்கி நிற்கும் அந்த எளிய வளத்தை கவனிக்க வைத்தது. கார்களை கழுவுதல், கட்டுமானம் மற்றும் பொழுது போக்கு நோக்கங்களுக்காக தண்ணீரை வீணடிப்பவர்களுக்கு அபராதம் விதிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்ற அறிக்கைகள் நெருக்கடியின் தீவிரத்தை நமக்கு எடுத்துரைக் கின்றன. ஆடம்பரமான சமூகத்தில் வசிப்பவர்கள் தண்ணீரைச் சேமிக்க டிஸ்போஸபல் தட்டுகள் மற்றும் கட்லரிகளைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்ட கதைகள் இன்னும் கவலைக்குரியவை.

ஒரு துடிப்பான பெருநகரம் இந்த நிலைமைக்கு எப்படி வந்தது? எதிர்காலத்தில் நமது நகரம் இதே போன்ற நெருக்கடியை சந்திக்குமா? இது பற்றிய நிபுணர்களின் கருத்து தெளிவாக உள்ளது. நீர்வளத்திற்கும் தேவைக்கும் இடையே வளர்ந்து வரும் பொருத்தமின்மையால் வரும் ஆண்டுகளில் இந்தியா நீர் பற்றாக்குறை நாடாக மாறக்கூடும். மேலும், நாடு முழுவதும் உள்ள பல கிராமங்கள் மற்றும் நகர்ப்புற மையங்களில் நிலத்தடி நீர் மட்டம் ஆபத்தான விகிதத்தில் வேகமாக குறைந்து வருகிறது. கூடுதலாக காலநிலை மாற்றமும் ஏற்பட்டுள்ளது, இதன் விளைவாக தீவிர வானிலை நிகழ்வுகளை நாம் கண்டோம், இது கடுமையான பருவமழையிலும் அதைத் தொடர்ந்து நீண்ட கடுமையான வறட்சியிலும் தன்னை வெளிப்படுத்தியது.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, நீரைச் சேமிப்பதே புத்திசாலித்தனமான செயல். இணையத்தளத்தில் கிடைக்கும் பல அறிக்கை களிலிருந்து சில குறிப்புகள் இங்கே வழங்கியுள்ளேன். சில நான் கலந்து கொண்ட நீர் மாநாடுகளிலிருந்தும் வந்தவை.

பூமியின் இன்றியமையாத இயற்கை வளத்தை மதிக்கும் எளிய வழிகளில் ஒன்று, உங்கள் வீட்டில் உள்ள குழாய்கள் எதுவும் கசியாமல் பார்த்துக் கொள்வது. இது நம்பமுடியாதது, ஆனால் சொட்டு சொட்டாக கசியும் குழாய் சரி செய்யப்படாமல் விடப்பட்டால் கூட ஒரு நாளைக்கு சுமார் 200 லிட்டர் தண்ணீரை இழக்க நேரிடும். இப்போது கசியும் பிரதான குழாயின் சேதத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

துரதிர்ஷ்டவசமாக, பிளம்பரை அழைத்து கசிவு குழாயை சரிசெய்ய வாஷரை மாற்றவும் கவலைப்படாத குடும்பங்கள் பலவற்றை எனக்குத் தெரியும். அதற்கு பதிலாக, குழாயை சரிசெய்ய அல்லது மாற்ற வேண்டிய நேரம் வரை கசிவை ஒரு துணியால் கட்டுவது போன்ற அறைகுறை நடவடிக்கைகளை அவர்கள் நாடு கிறார்கள்.



அதிக விரயத்திற்கு வழிவகுக்கும் மற்றொரு செயல்பாடு பல் துலக்குதல் அல்லது ஷேவிங் ஆகும். பல் துலக்கும்போது அல்லது ஷேவ் செய்யும்போது மக்கள் குழாயை திறந்து வைத்திருப்பது மிகவும் பொதுவானது. வாய் கொப்பளிக்கும் வரை அல்லது ஷேவிங் செய்தபின் முகத்தைக் கழுவும் வரை குழாயை மூடினால் சுமார் 10 லிட்டர் சேமிக்கலாம். நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் தினமும் காலையில் 40 லிட்டர் தண்ணீரை வீணாக்குவதைப் பற்றி சற்று நினைத்துப் பாருங்கள். ஒரு வருடத்தில் 14,600 லிட்டர் வீணாகிவிடும்! மேலும் நினைவில் கொள்ளுங்கள், இரவில் பல் துலக்குவதை நான் கணக்கில் கூட சேர்க்கவில்லை.



ஷவரில் குளிப்பதை நீங்கள் விரும்பினால், குறைந்த நீரை வழங்கும் ஷவர் ஹெட் ஒன்றை நிறுவுங்கள். மேலும், ஷவரின் கீழ் தேவையான ஐந்து முதல் ஏழு நிமிடங்களுக்கு மேல் நிற்பது உங்கள் நீர் நுகர்வை கணிசமாக அதிகரிக்கும். உங்கள் உடலை சோப்பு செய்யும் போது ஷவரை அணைக்க நினைவில் கொள்ளுங்கள், இல்லையெனில் அதுவும் வடிகால் வழியாக அதிக தண்ணீரை வெளியேற்றும்.

சலவை இயந்திரங்களைப் பயன் படுத்துபவர்கள், இயந்திரத்தை அடிக்கடி இயக்குவதை விட, ஒவ்வொரு சலவையிலும் முழு அளவிலான துணிகளை துவைப்பது புத்திசாலித்தனமாக இருக்கும், அது தண்ணீரைச் சேமிக்க உதவும். தற்போதைய புதிய சலவை இயந்திரங்கள் தண்ணீரைச் சேமிக்க அரை சுமைகளுக்கான அமைப்புகளைக் கொண்டிருக்கிறது, குறைந்த தண்ணீர் மற்றும் மின்சாரம் பயன்படுத்தும் இயந்திரங்களும் உள்ளன. எனவே, நீங்கள் ஒரு புதியசலவை இயந்திரத்தை வாங்குகிறீர்கள் என்றால் நன்றாக ஆராய்ச்சி செய்யுங்கள்.

நாம் அனைவரும் நம் வீட்டைச் சுற்றியுள்ள இடத்தை சுத்தமாக வைத்திருக்க விரும்புகிறோம். ஒவ்வொரு நாளும் பவர் ஹோஸ் மூலம் டிரைவ்வேகளைக் கழுவுவது வழக்கமாக இருக்கிறது. அடுக்கு மாடி குடியிருப்பில் வசிப்பவர்கள் கூட, தினமும் காலையில் வீட்டுப் பணியாளரால் பால்கனியைக் கழுவ விரும்புகிறார்கள். ஒருவேளை, இந்த பயிற்சியை ஒரு வாரத்திற்கு இருமுறை செய்வது கணிசமான அளவு தண்ணீரை சேமிக்கும். இல்லையெனில், தரையை சுத்தம் செய்ய ஈரமான துடைப்பான் பயன்படுத்தவும்.

நம் நுகர்வைக் குறைக்க பல்வேறு சிறிய வழிகள் உள்ளன, மேலும் தண்ணீரைச் சேமிக்கும் முயற்சியில் பங்கேற்பதன் மூலம் அல்லது தொடங்குவதன் மூலம் உங்கள் சமூகத்தில் நீங்கள் ஈடுபடலாம். மழைநீர் சேகரிப்பு என்பது தண்ணீரைச் சேமிப்பதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மழையின் போது சேகரிக்கப்படும் தண்ணீரை பயன் படுத்துவதோடு மட்டுமல்லாமல், நிலத்தடி நீரை மீட்டெடுக்கவும் பயன்படுத்தலாம். மழை சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் ரீசார்ஜ் அமைப்பு இல்லாத வீட்டுமனை வளாகங்களில் வசிப்பவர்கள் உறுப்பினர்களை வற்புறுத்தி அதை நிறுவ வேண்டும். இந்த முதலீடு மதிப்புள்ளது, ஏனெனில் இது தண்ணீரைச் சேமிப்பது மட்டுமல்லாமல், நீர் தேங்குவதைக் குறைக்கவும் உதவுகிறது, குறிப்பாக அடுக்குமாடி குடியிருப்புகள் அதைச் சுற்றி ஊடுருவாத சிமெண்ட் மேற்பரப்புகளால் சூழப்பட்ட நகரங்களில்.

வெளியில் உள்ள உலகம் தண்ணீரை வீணடிக்கும் போது ஒவ்வொரு தனிமனிதனின் பங்களிப்பும் மாற்றத்தை ஏற்படுத்த உதவும். 185 பில்லியன் க்யுபிக் மீட்டர் மழைப்பொழிவைச் சேமிக்க, நாடு முழுவதும் 1.42 கோடி மழைநீர் சேகரிப்பு மற்றும் செயற்கை ரீசார்ஜ் கட்டமைப்புகளை அமைக்க திட்டமிடும் திட்டத்தை நீர்வள அமைச்சகம் தொடங்கியுள்ளது.

பருவநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கும், இறக்கும் ஆறுகள் மற்றும் நீர்நிலைகளைக் காப்பாற்றுவதற்கும் இது மிகவும் அவசியம். இயற்கையைப் பாதுகாக்கவும், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் சராசரி குடிமக்களின் முயற்சியும் இருக்க வேண்டும். "சிறு துளி பெரு வெள்ளம்" என்ற பழமொழியை நினைவில் கொள்ளுங்கள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# புற்றுநோய் வருமுன் காப்போம்!

பரத் — ஷலன் சவூர்

சமீபத்திய ரோட்டரி இதழ்களில் முழுமையான உடல் ஆரோக்கியம் மற்றும் உடல் எடையை குறைப்பதற்கான உடற்பயிற்சிகள் பற்றி சற்று விரிவாகவே எழுதியுள்ளோம். இதை விரும்பாதவர்களும் உருளைக் கிழங்கை விரும்பி சாப்பிடுபவர்களும் இதை நிராகரிக்கலாம். ஆனால், நடைமுறையில் இது செயல்படுகிறதா? ஆரோக்கியமான வாழ்க்கைக்கான அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்து நிஜவாழ்க்கையை சீர்குலைக்கும் பழக்கத்தை விட்டொழித்து உடலை சீராக வைத்துக் கொள்ள வேண்டும். புற்றுநோய் உருவாகக் காரணமாகும் எதிரியை எதிர்த்து நாம் போராட வேண்டிய நேரம் வந்துவிட்டது. புற்றுநோய் என்பது ஆட்கொல்லி நோய். அதை வளரவிடக்கூடாது. முறையான சிகிச்சைகள் மூலம் அதை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டால் நாம் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியும் என்பது நல்ல செய்தி. பழங்காலத்திலிருந்தே நம்மை அச்சுறுத்தி வரும் புற்றுநோயை விரட்டியடிக்க வேண்டுமானால் முழு உடல் தகுதிக்கான உடற்பயிற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். அவைதான் நம்மை வாளாகவும் கேடயமாகவும் இருந்து நம்மை காக்கும்.

உடற்பயிற்சி செய்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். அதை ஒழுங்காக கடைப்பிடியுங்கள். அது எப்படி வேலை செய்கிறது என்று பாருங்கள். நாம் செய்யும் உடற்பயிற்சிகள் உடலில் உள்ள உயிரணுக்களுடன் தொடர்பு கொண்டு உணவை எரிபொருளாகக் கொண்டு உடலியக்கத்தை சீராக்கி நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகின்றன.

நாம் செய்யும் உடற்பயிற்சிகள் ஒவ்வொரு செல்லின் சுவாசத்திறனையும் மேம்படுத்துகின்றன. மேலும் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை குறைப்பதற்கான சூழலை ஏற்படுத்துகின்றன. உடலில் உள்ள வெள்ளை அணுக்களை வலுப்படுத்தி உடலுக்கு கவசம் போல் பாதுகாக்கின்றன.

ஏரோபிக் என்பது ஆக்ஸிஜனின் மாற்று வடிவம் என்று சொல்லலாம். உணவை சேமித்து வைப்பதுபோல நமது உடலில் ஆக்ஸிஜனை சேமித்து வைக்க முடியாது. ஆனால், உடல் இயக்கத்துக்கு ஆக்ஸிஜன் தேவை. இங்குதான் ஏரோபிகஸ் முக்கியத்துவம் பெறுகிறது. நாம் உடற்பயிற்சிகள் செய்யும்போது உடலில் ஆக்ஸிஜன் உற்பத்தி அதிகரிக்கிறது. நமது இதயம், சுவாசம் ஆகியவற்றின் செயல்பாட்டை அதிகரிப்பதற்கான ஆரோக்கியமான வழி அதுதான். உடற்பயிற்சிகள் செய்வதன் மூலம் குறைந்த முயற்சியில் நாம் அதிக காற்றை உள்ளிழுத்துக் கொள்ள முடியும். இதன் மூலம் ஆக்ஸிஜன் உற்பத்தி அதிகரித்து நுரையீரல் வழியாக செல்களுக்கு அனுப்புகிறது. அங்கு உணவுடன் சேர்ந்து சக்தியை உருவாக்குகிறது. மேலும் உடற்பயிற்சிகள் செய்வது இரத்தத்தை திறம்பட செலுத்துவதுடன், இரத்தத்தின் அளவையும் அதிகரிக்கிறது. இதன் மூலம் இதயம் விரிவடைந்து வலுவாகிறது. இரத்த நாளங்கள் விரிவடைந்து மீள்தன்மை அடைகின்றன. தசைகளுக்கு இரத்த ஓட்டம் சீராகச் செல்கிறது. தசைகளும், தசைநார்களும் வலுவடைகின்றன. மூட்டுகளை எளிதில் அசைக்க முடிகிறது. அவையும் வலுப்படுகின்றன. ஏரோபிக்ஸ் என்பது உடலின் எல்லைகளை எதிரிகளுக்கு எதிராக பாதுகாக்க ஆக்ஸிஜன் மற்றும்



## அதிகரிக்கும் புற்றுநோயாளிகள்

உலக சுகாதார நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான சர்வதேச அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2022 ஆம் ஆண்டில் மட்டும் உலகில் 10 மில்லியன் பேர் புற்றுநோய்க்கு பலியாகியுள்ளதாகவும், 20 மில்லியன் பேர் புதிதாக புற்றுநோய் பாதிப்புக்கு ஆளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2040 ஆம் ஆண்டில் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை (ஆண்-பெண் இருபாலினம்) 2022 ஆம் ஆண்டில் இருந்த எண்ணிக்கையைவிட 50 சதவீதம் அதிகரிக்கும் என்றும் 2050 ஆம் ஆண்டில் இது 77 சதவீதமாக அதிகரிக்கும் என்று அந்த அமைப்பு கணித்துள்ளது.

| | எண்ணிக்கை | இறப்பு |
|---|---|---|
| உலகம் | 19.97 மில்லியன் | 9.47 மில்லியன் |
| இந்தியா | 1.41 மில்லியன் | 0.92 மில்லியன் |

* In 2022

ஊட்டச்சத்துகளால் நடத்தப்படும் கூட்டுபயிற்சியாகும்.

1981-ஆம் ஆண்டில் அமெரிக்க காங்கிரஸின் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் ஏற்படுத்தப் பட்டது. இதற்கு காரணமானவர்கள் டால் மற்றும் பீடோ. அனைத்து வகையான புற்றுநோய்களையும் 80 அல்லது 90 சதவீதம் கொள்கை யளவில் தடுத்துவிட முடியும் என்பதுதான் இவர்களின் முடிவாகும். ஆனால், இந்த சவாலை சமாளிக்க வேண்டுமானால், மருத்துவர்கள், சுகாதார வல்லுனர்கள் மற்றும் அவர்களின் சேவையை பெறும் பொதுமக்கள் ஒழுங்கான அணுகு முறையை பின்பற்றினால்தான் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கின்றனர் அவர்கள்.

இந்தியா உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள சோகமான உண்மை என்னவென்றால், மேற்கத்திய, நவீன மருந்துகள் மற்றும் அவற்றை பரிந்துரைக்கும் மருத்துவர்களுக்கு நோய்த்தடுப்பு மருந்துகள், ஊட்டச்சத்து மற்றும் உடற்பயிற்சிகள் குறித்து போதிய அறிவு இல்லை என்பதுதான்.

இதன் அர்த்தம் என்னவென்றால், உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு நீங்கள்தான் முழு பொறுப்பு. இந்த சுமையை நீங்கள் தட்டிக்கழிக்க முடியாது. ஆனால், நீங்கள் நிச்சயமாக முன்முயற்சியாக உடற்பயிற்சிக்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளலாம். முழுமையான உடற்பயிற்சிகள் மூலம் ஆரோக்கியத்தை பெறலாம்.

ATP-யை உற்பத்திச்செய்ய சாதாரணமாக செல்கள் ஏரோபிக் சுவாசத்தையே நம்பியுள்ளன. ATP என்பது உடலை மேம்படுத்து வதற்கு ஒவ்வொரு செல்லின் உந்து சக்தியாகும். அதேநேரத்தில் கெட்ட செல்கள் வேகமாக பெருகி சுவாச வடிவமான கிளைகோலிஸை தானாக முன்வந்து எடுத்துக் கொண்டு செழிப்பாக வளரும். இத்தகைய உயிரணுக்களால் புற்றுநோய் உருவாக்கப்படுகிறது. இந்த நிகழ்வு குறைந்த செயல்திறன் கொண்ட ஆற்றல் உற்பத்தியை ஏற்படுத்தி, புற்றுநோய் ஏற்படு வதற்கான அமில அடித்தளத்தை உருவாக்குகிறது.

எனவே, உடற்பயிற்சிகள் செய்வதன் மூலம் குறிப்பிட்ட புற்றுநோய் அபாயங்களை குறைக்க முடியும். உடற்பயிற்சி கள் உடலியக்கத்தை மேம்படுத்தி இன்சுலின் மற்றும் இன்சுலின் போன்ற வளர்ச்சியை மட்டுப்படுத்து கிறது. அதிக அளவில் இன்சுலின் உடலில் சுரப்பது, புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை குறிப்பாக பெருங்குடல் புற்றுநோய் அதிகரிக்கும்.

நீண்டகாலமாக விடாமல் உடற்பயிற்சி செய்து வரும் பெண்களுக்கு, மற்றவர்களைவிட மார்பக புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. குறிப்பாக உடற்பயிற்சி செய்வது, உடலில் எஸ்ட்ரோஜன் அளவை கட்டுப்படுத்தி கேடயம் போல் பாதுகாக்கிறது.

ஆரோக்கியமான ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கை முறையுடன் இணைந்த ஏரோபிக்ஸ் உடற்பயிற்சி கள் உடல் பருமன் ஏற்படுவதை தடுக்கிறது. உடல்நலக்குறைவு, உடல் எடை அதிகரிப்பு, புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பை குறைக்கிறது.

கடந்த காலங்களைத் தாண்டி உலகை ஒரு புதிய இடத்திற்கு அழைத்துச் செல்ல முடியும் என்பதை கோவிட்-19 தொற்றை சிறப்பாக கையாண்டதன் மூலம் இந்தியா உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளது. அதேநேரத்தில் பொது சுகாதாரத்தின் மீது நாம் இன்னும் கவனம் செலுத்த வேண்டும். உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வது எப்படி என்பதை மருத்துவர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வீடற்றவர் களுக்கு வீடு வேண்டும். வேலையில்லாதவர்களுக்கு வேலை வேண்டும். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். முதலில் நாம் மனமாச்சர்யங்களிலிருந்து விடுபட வேண்டும். உறுதி மொழியுடன் செயல்பட வேண்டும். சூரியன் உதிக்கும் பூமியான ஜப்பானை முன்மாதிரியாக எடுத்துக் கொள்வோம். இந்தியாவில் கிடைக்கும் சூரிய சக்தி ஆற்றல் மூலம் உடலையும் ஆன்மாவையும் தூய்மை படுத்துவோம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# வீடென்று அழைக்க எதுவும் இல்லாதபோது



சந்தியா ராவ்

*கவர்ந்திழுக்கும் திபெத்திய ஆர்வலரான டென்சின் சுண்டுவுடன் கதைகள் மற்றும் கவிதைகளின் மாலை.*

பிப்ரவரி 29 மாலை நாங்கள் மீண்டும் எங்கள் காருக்கு செல்லும்போது என் புத்தகக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் - பாண்டு அத்தை, பாமா மற்றும் உஷா - எனக்கு நன்றி சொல்வதை நிறுத்தவே இல்லை. அப்போது சென்னையில் திபெத்திய கவிஞரும் ஆர்வலருமான டென்சின் சுண்டுவின் கவிதைகள் மற்றும் பிற வாசிப்புகளின் உற்சாகமான அமர்வில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தோம். நான் நிகழ்வைப் பற்றிய தகவல்களை மட்டுமே பகிர்ந்து கொண்டேன், ஆனால் அவர்கள் அதற்காக மிகவும் நன்றி தெரிவித்தனர். அப்படியானால், அந்த அனுபவம் எவ்வளவு ஆழமாக இருந்திருக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்யலாம்.

சுண்ட்யுவின் அனைத்து எழுத்துக்களும் வீடு, வீட்டை இழந்தது, வீட்டைப் பற்றிய ஏக்கம், வீட்டைப் பற்றிய நம்பிக்கையுடன் இருக்கின்றன. மேலும் அவரது ஒவ்வொரு கவிதையிலும் ஒரு யோசனை மட்டுமல்லாமல் ஒரு கதையும் உள்ளது, அவை தூண்டும் கருத்துக்கள் நம் மனதைக் கவரும்:

"Losar is when we the juveniles and bastards / call home across the Himalayas / and cry into the wire.'

இங்கே என்ன கதை இருக்கிறது? அவரது சொந்த வார்த்தைகளில், திபெத்திய மொழியில் நாங் (வீடு) மற்றும் ஆங்கிலத்தில் நோவேர் டு கால் ஹோம் என்ற சிறிய புத்தகத்திலிருந்து, கதை செல்கிறது: 'ஒருமுறை, திபெத்திய புத்தாண்டான லோசார் அன்று, மெக்லியோட் கஞ்சில் உள்ள ஒரு தொலைபேசி சாவடிக்கு வெளியே இளைஞர்கள் மற்றும் பெண்களின் நீண்ட வரிசையை நான் பார்த்தேன். அகதிகள் ஒருவர் பின் ஒருவராக அறைக்குள் நுழைந்து, திபெத்தில் உள்ள தங்கள் அன்புக் குரியவர்களுடன் பேசி, அழுது, உணர்ச்சிவசப்பட்டு வெளியே வந்து, பணம் கொடுத்துவிட்டு வெளியேறினர். நான் அந்த சாவடியை க்ரை பாக்ஸ் என்று அழைத்தேன். லோசரின் போது தர்மசாலாவில் அதிகபட்சமான திபெத்தியர்கள் அழுதுக்கொண்டு தான் இருக்கிறார்கள் என்று நான் உணர்ந்தேன்.

இது இத்துடன் முடிவடைய வில்லை: 'அன்று மாலை, பைன் காடுகள் மற்றும் கருவேலமரங்கள் வழியாக குறுக்குவழியில் மலைச்சரிவில் இறங்கி நடந்தபோது, அழுவதற்கும், வீட்டிற்கு அழைத்து பேசுவதற்கும் அவர்களுக்கு யாரோ இருக்கிறார்கள், அதுவே அவர்களுக்கு அதிர்ஷ்டம் என்று நான் சிந்தித்தேன். அகதியாகவே பிறந்த நான், சிறுவயதிலிருந்தே அனாதையை போல உறைவிடப் பள்ளியில் அடைக்கப்பட்டிருந்ததால், நான் என் குடும்பத்திலிருந்து விலகியே வளர்ந்தேன். அதை இங்கே எழுதுவது கூட எனக்கு வேதனையாக இருக்கிறது' இந்தச் சில வார்த்தைகளில், சுண்ட்யு தன் முழு வாழ்க்கையையும் வரைந்துள்ளார்.

திபெத்தின் பாரிய பிரதேசம் சிறிது சிறிதாக, சீன குடியரசால் இணைக்கப்பட்டபோது, திபெத்திய மக்களின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமா, 1959-ல் நாட்டை விட்டு வெளியேறி, ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள தர்மஷாலாவில் அடைக்கலம் பெற்றார். இதற்கு உதவியது இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு. எனவே, இன்று, அனைத்து நடைமுறை நோக்கங்களுக்காகவும், திபெத்துக்கு வெளியே, தர்மசாலாவில் ஒரு திபெத் உள்ளது. இந்தியாவின் பிற இடங்களிலும் திபெத்திய காலனிகள் உள்ளன. சுண்ட்யுவின் பெற்றோர்கள் பதின்வயதினராக இருந்தபோது தலாய் லாமாவைப் பின்தொடர்ந்து இந்தியாவுக்குச் சென்றனர்; இறுதியில் கர்நாடகாவில் குடியேறினர். சுண்ட்யு மணாலியில் பிறந்தார். ஹிமாச்சலில் உள்ள உறைவிடப் பள்ளியில் படித்த பிறகு, அவர் சென்னை லயோலா கல்லூரிக்குச் சென்றார், அங்கே ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார், அதைத் தொடர்ந்து பம்பாய் பல்கலைக்கழகத்தில் தத்துவம் படித்தார். சுண்ட்யுவைப் பொறுத்தவரை, திபெத்திய மக்களின் வீடற்ற தன்மை மற்றும் குறிப்பாக இளைஞர்களின் வேரற்ற தன்மை பற்றிய கதைகள் அவரது படைப்பு உணர்வின் அடித்தளமாகும்.

சக்திவாய்ந்த, முரண்பாடான மற்றும் மனதை உருக்கும் அவரது கவிதைகளின் தேர்வை அவர் உரக்கப் படிக்கிறார். நீங்கள் சிரிக்கும் போது கூட, அதன் வலியை உணர்கிறீர்கள். 'எக்ஸைல் ஹவுஸ்' என்ற கவிதையில் அடிக்கோடிட்டுக் காட்டும் ஏக்கம், அங்கு கூடியிருந்த நம் அனைவருக்கும் உடனடியாக புரிகிறது.

*சென்னையில் திபெத் கவிஞர் டென்சின் சுண்ட்யு உடன் ஒரு வாசிப்பு அமர்வு.*



**உதாரணமாக:**

*Our tiled roof dripped*
*and the four walls threatened to fall apart*
*but we were to go home soon*
*We grew papayas*
*in front of our house*
*chillies in our garden*
*and changmas for our fences,*
*then pumpkins rolled down the cowshed thatch*
*calves trotted out of the manger.*
*Grass on the roof*
*beans sprouted and*
*climbed the vines,*
*money plants crept in through the window,*
*our house seems to have grown roots.*
*The fences have grown into a jungle,*
*now how can I tell my children*
*where we came from?*

ஒரு அகதி தங்குமிடத்தை பெறலாம், ஆனால் அங்கு வேரூன்ற முடியாது, குடியேற முடியாது என்று சுண்ட்யு கூறுகிறார். எங்களுக்கு புரிந்தது: அகதிகள் வீடு திரும்புவதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த கருத்து “அடிவானம் (Horizon)' என்ற கவிதையில் அற்புதமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

*From home you have reached*
*the Horizon here.*
*From here to another*
*here you go.*
*From there to the next*
*next to the next*
*horizon to horizon*
*every step is a horizon.*
*Count the steps*
*and keep the number.*
*Pick the white pebbles*
*and the funny strange leaves.*
*Mark the curves*
*and cliffs around*
*for you may need*
*to come home again.*

2005 ஏப்ரலில் சீனப் பிரதமர் வென் ஜியாபோ பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்திற்கு வந்திருந்தபோது சுண்ட்யுவைப் பற்றி படித்தது நினைவிருக்கிறது. வென் ஜியாபோ விஞ்ஞானிகளுடன் உரையாடி கொண்டிருந்தபோது, முன்தினம் இரவு கட்டிடத்தின் கூரையில் ஏறி மறைந்திருந்த சுண்டு, ஒரு பெரிய சிவப்பு பதாகையை விரித்தார், அதில் வெள்ளை எழுத்துக்களில் “திபெத் சுதந்திரம்” என்று எழுதப்பட்டிருந்தது, அவர் எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினார். கறுப்பு உடை அணிந்து, கண்ணாடி அணிந்து, பிரகாசமான சிவப்பு முண்டாசு அணிந்திருந்தது அந்த சிறிய உருவம் - அந்த செய்தித்தாள் புகைப்படம் என் நினைவில் பொறிக்கப்பட்டுள்ளது.



சந்தியா ராவ்

திபெத்தியர்களின் தாயக உரிமைகளுக்காகப் போராடப் போவதாக அவர் முடிவு செய்த போது அவருக்கு வயது 11. இன்று, அவருக்கு 49 வயது, ஆனால் அந்த வாக்குறுதியில் உறுதியாக இருக்கிறார். ஆனால் அவர் எப்படி வாழ்கிறார்? என்று கேட்டால், “எனது கவிதை எனக்கு உணவளிக்கிறது” என்று குறிப்பிடுகிறார். மும்பையில் தனது மாணவப் பருவத்தில், எசேக்கியேல், அருண் கோல்ஹட்கர், ரஞ்சித் ஹோஸ்கோட்டே, யூனிஸ் டிசோசா போன்ற ஜாம்பவான்களின் கவிதைகளை கேட்டதை பற்றி விவரிக்கிறார். 2001-ல் புனைகதை அல்லாதவற்றுக்கான அவுட்லுக்-பிக்காடார் போட்டியின் பரிசுத் தொகை, திபெத்தியர்களின் படைப்புகளை ஊக்குவிக்கும் மற்றும் வெளியிடும் திபெத் ரைட்ஸின் முத்திரையான பிளாக்நெக் புக்ஸ் மூலம் அவரது எழுத்துக்களின் தொகுப்பை வெளியிடுவதற்கு நிதியளித்தது. அவர் தனது கட்டுரையை, “மை கைண்ட் அஃப் எக்சைல்” என்று அழைத்தார்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு புத்தகம் திபெத்தியர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முதல் தொகுப்பு ஆகும். தி பெங்குவின் புக் ஆஃப் மாடர்ன் திபெட்டியன் ஏஸ்சேஸ் என்று அழைக்கப்படும் அந்த புத்தகம் டென்சின் டிக்கி என்பவரால் தொகுக்கப்பட்டது, மேலும் திபெத்தியம், ஆங்கிலம் மற்றும் சீன மொழிகளில் பணி புரியும் எழுத்தாளர்களைக் கொண்டுள்ளது. அதன் பின்பக்கத்தில்: ‘இழந்த நண்பர்கள், திருடப்பட்ட சொத்துகள், சிறைக் குறிப்புகள் மற்றும் திபெத்திற்குள் இரகசிய பயணங்கள் பற்றிய கட்டுரைகள் உள்ளன. உணவு, தலாய் லாமாவின் கார் நடனக்கலைஞர், காதல் கடிதங்கள், லாட்டரிகள் மற்றும் திபெத்தின் இளவரசர் பற்றிய கட்டுரைகளும் உள்ளன.

அன்று மாலை, வீட்டிற்கான ஏக்கத்தை சிறப்பாக எடுத்துரைக்கும் வகையில் டார்ஜிலிங்கில் இருந்து ஒரு திபெத்திய பாட்டி எங்களுக்கிடையில் இருந்தார். மருத்துவ சிகிச்சைக்காக பேத்தியின் வற்புறுத்தலால் சென்னைக்கு வந்திருந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது, ஆனால் டென்சின் சுண்ட்யுவைப் பார்ப்பதற்காக அங்கே வந்திருந்தார். அவ்வளவு முக்கியமானவர் அவர். அவ்வளவு முக்கியமானது வீடு.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

## RC மனோரா பட்டுக்கோட்டை — RID 2981



ஆலந்தூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில், சானிட்டரி பேட் எரியூட்டியுடனான புதுப்பிக்கப் பட்ட கழிப்பறைத் தொகுதியை முன்னாள் நீதிபதி V பாரதிதாசன் தொடங்கிவைத்தார்.

## RC தில்லி ஒக்லா சிட்டி — RID 3011

70 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 700 மாணவர் களுக்கு ஓவியப் போட்டி நடத்தப்பட்டன.



## RC சேலம் சென்ட்ரல் — RID 2982



AG B சூரிய நாராயணன் முன்னிலையில், கோகுல்நாத் இந்து மகாஜன HS பள்ளிக்குக் கணினிகள், கொடையளிக் கப்பட்டன.

## RC டெல்லி மயூர் விகார் — RID 3012

யமுனா புஸ்தா என்ற சேரிக் குடியிருப்பில் ஏழைக் குடும்பங் களுக்குப் போர்வைகள், கம்பளி ஸ்வெட்டர்கள் வழங்கப் பட்டன.



## RC புதுக்கோட்டை சிட்டி — RID 3000



RCகள் பெரம்பலூர், பெரம்பலூர் காட்டன் சிட்டி, புத்தாஸ் இளைஞர் நல அறக்கட்டளை யுடன் இணைந்து நடத்தப்பட்ட டைக்கு வாண்டோ போட்டியில் 400 மாணவர்கள் பங்கேற்றனர்.

## RC பசோரா பட்காவ்ன் — RID 3030

சங்கத் தலைவர் பங்கஜ் ஷிண்டெ, செயலாளர் முகேஷ் நைனவ் உடான் திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.



# செய்திகள்

## RC போபால் ஹில்ஸ் — RID 3040



RC சாகர் ஃபீனிக்ஸ், நாராயண் சேவா சன்ஸ்தான் உடன் இணைந்து சங்கம் 200 ஊனமுற்றோருக்கு செயற்கை கை, கால் பொருத்த அளவுகள் எடுக்கப்பட்டன.

## RC சிம்லா மிட்-டவுன் — RID 3080

மொகாலி-யில் உள்ள மேக்ஸ் மருத்துவ மனையுடன் இணைந்து ஷிம்லாவில் உள்ள சமூக மையத்தில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் சுமார் 120 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள்.



## RC வடலி ரவுண்ட் டவுன் — RID 3056



RC செவ்ரோலெட், கனடா உடனான GG திட்டத்தின் வழியாக 5 பார்வை மையங்கள் அமைக்கப் பட்டன.

## RC பட்ரான் — RID 3090

ஸ்ரீ துர்கா சேவா தள் உடனான ஒரு திட்டத்தின்கீழ், ராம் பாக் குழுவின் சுடுகாட்டுக்கு ஓர் இறுதிச் சடங்கு வண்டி கொடையளிக் கப்பட்டது.



## RC சூரத் ஈஸ்ட் — RID 3060



பழங்குடியினக் கிராமங்களில் உள்ள இரண்டு பள்ளிகளில் மாணவர் களுக்குச் சீருடைகள், பள்ளிப்பைகள், எழுதுபொருள் பொதிகள், காலணிகள், காலுறைகள் வழங்கப்பட்டன.

## RC மொராதாபாத் — RID 3100

சித்ரகுப்தா இடைநிலைக் கல்லூரியில் நடைபெற்ற மன நலக் கருத்தரங்கில், டாக்டர் ரீனா டொமர் அழுத்தத்தைத் தவிர்ப்பது, தேர்வுகளை நன்கு எழுதுவது பற்றி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.



## RC பிசௌலி — RID 3110



பிசௌலி-யில் உள்ள ஸ்ரீ அக்ரவால் சபா பவனில் 125 பெண்களுக்குப் பைகள், மதிய உணவுப் பாத்திரங்கள், தண்ணீர் பாட்டில்கள், ஆடைகள் வழங்கப்பட்டன.

## RC அகமத்நகர் — RID 3132



பிரஜாபிதா பிரம்மா குமாரிஸ் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயாவுடன் இணைந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அகமதுநகர் சப் ஜெயிலில் உள்ள கைதிகளுக்கு சங்கம் போர்வைகள் மற்றும் பாய்களை வழங்கியது

## RC குஷிநகர் — RID 3120



காசியா-வில் உள்ள தொடக்கப் பள்ளியில் இந்தச் சங்கம் அமைத்த போலியோ ப்ளஸ் அரங்கத்தில் குழந்தை களுக்கு இளம் பிள்ளை வாதத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

## RC ஹம்பி பேர்ல்ஸ் — RID 3160



ஹொஸ்பெட் அருகில் உள்ள நாகெனஹள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில், கிர்லோஸ்கர் கிராமப்புற அறக்கட்டளை உதவியுடன், ஆண்கள், பெண்களுக்கான தனித்தனிக் கழிப்பறைத் தொகுதிகள் கட்டப்பட்டன.

## RC புணெ கொத்ருட் — RID 3131



55 பழங்குடியினப் பெண்களுக்குக் கண் பரிசோதனை செய்யப் பட்டது, பார்வைக் குறைபாடு உள்ளவருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

## RC தார்வாட் மிட்-டவுன் — RID 3170



உலக இதய நாளன்று, யுனிட்டி மருத்துவ மனையுடன் இணைந்து நடத்தப்பட்ட இதய நல முகாமில் சுமார் 70 நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

# செய்திகள்

## RC மங்களூர் சென்ட்ரல் — RID 3181



PDG B தேவதாஸ் ராய் நடத்திய 18வது ரோட்டரி விழிப்புணர்வு விநாடி வினாவில் 16 சங்கங்கள் மொபைல் செயலி வழியாகப் பங்கேற்றன.

## RC ஹரிபட் கிரேட்டர் — RID 3211

அரசு தொடக்கப் பள்ளியில், குழந்தைகள் பலவிதமான புத்தகங்களைப் படிக்கவும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒரு நூலகம் தொடங்கப்பட்டது.



## RC ஈரோடு ஏமரால்ட் — RID 3203



பொது மருத்துவ மனையில் குறைமாத குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஈர துடைப்பான் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

## RC வாணியம்பாடி — RID 3231

மாதந்தோறும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிற 255வது மாதாந்திரக் கண் பரிசோதனை முகாமில், 160 நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டார்கள், 110 பேர் அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.



## RC கன்ஹன்காட் மிட் டவுன் — RID 3204



சிநேகாலயம் என்ற முதியோர் இல்லத்துக்கு 10 மருத்துவ மனைப் படுக்கைகளைக் நன்கொடை அளித்தார் DG சேது சிவ சங்கர்.

## RC கல்கத்தா கன்குர்கச்சி — RID 3291

பங்குரா-வில் உள்ள இன்டஸ் உயர்நிலைப் பள்ளியின் திறமையான 23 மாணவர் களுக்கு, டிஜிட்டல் கல்விக்கென அறிவார்ந்த தொலைபேசிகள் வழங்கப்பட்டன.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



# முட்டாள்களின் படையெடுப்பை எப்படி கையாள்வது

TCA ஸ்ரீனிவாச ராகவன்

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு, டெல்லியிலிருந்து சென்னைக்கு ரயிலில் பயணித்த போது, இந்தியாவிற்கே உரித்தான நிகழ்வை என்னால் கவனிக்க முடிந்தது: என்னைச் சுற்றி அமர்ந்திருந்த ஆறு பேருக்கும் எல்லாவற்றையும் பற்றி எல்லாம் தெரியும். மொத்த பயண நேரம் 36 மணிநேரம் அதில் 18 மணி நேரம் தூக்கத்தில் கழிக்கப்பட்டது. ஆனால் மீதமுள்ள 18 மணிநேரம் பூமியில் உள்ள அனைத்துப் தலைப்புகளிலும் இடைவிடாத விவாதத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

இரவு 10.30 மணிக்கு டில்லியில் இருந்து கிளம்பிய ரயிலில் அனைவரும் சீக்கிரமாக உறங்கச் சென்றனர். மறுநாள் காலை 7 மணியளவில் விற்பனையாளர் கொண்டு வந்த காலை காபியுடன் பேச்சு ஆர்வத்துடன் தொடங்கியது. ஆச்சரியப்படும் விதமாக, அந்த காபியில் ஏதோ தவறு இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்ததாக கூற, உண்மையில் அதில் என்ன தவறு இருக்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை கொடுக்கப்பட்டது காபியே அல்ல. அது தேநீர். அல்லது டீயும் காபியும் கலந்திருக்கலாம். விற்பனையாளர் அதை தவறாக விற்றார், ஏனெனில் அவரும் அதை காபி என்று நினைத்திருக்கலாம். ஆனால் அன்று காலை ரயில் ஓடிக் கொண்டிருந்த வட இந்தியாவில், காபி அரிதாகவே எழுப்பும் பானமாக விற்கப்படுகிறது. வட இந்தியாவை எழுப்புவது தேநீர் தான்.

இது என் நினைவுக்கு வந்ததற்கான காரணம், நான் பல வாட்ஸ்அப் குழுக்களில் இருந்தேன், ஆனால் பெரும்பாலான குழுக்களில் இருந்து வெளியேறிவிட்டேன், ஏனென்றால் ஒவ்வொரு குழுவிலும் அனைவருக்கும் எல்லாமும் தெரியும். ஆனால் அவர்கள் எந்த ஒரு துறையிலும் நிபுணத்துவம் மற்றும் அறிவு பெற்ற பத்திரிகை யாளர்கள் அல்ல.

இந்த காரணத்திற்காகவே நான் 11 ஆண்டுகளுக்கு முன்பு பேஸ்புக்கையும், 3 ஆண்டு களுக்கு முன்பு ட்விட்டரையும் விட்டு வெளியேறினேன். இரண்டும் முட்டாள்தனத்தை கொண்டிருந்தது மற்றும் அதை கேட்க வலியுறுத்தியது. இந்த தேவை பற்றிய கருத்து பழைய பழமொழியில் நன்றாகப் சொல்லப்பட்டுள்ளது. “உங்கள் மீது அக்கறை கொண்டவர்கள் நீங்கள் அமைதியாக இருக்கும்போது கூட உங்கள் பேச்சைக் கேட்க முடியும்.” அல்லது தலை சிறந்த இத்தாலிய நாவலாசிரியர் அம்ப்ர்டோ ஈகோ கூறியது போல், ஒரு காலத்தில், சமூகத் திற்கு தீங்கு விளைவிக்காமல், மது கடைகளில் அமர்ந்து ஒரு குவளை மது அருந்திய பிறகு மட்டுமே பேசிய முட்டாள்களின் படையெடுப்பு தற்போது சமூக ஊடகங்கள் அதை பொதுவில் பேசும் உரிமையை வழங்குகின்றன. இப்போது அவர்களுக்கும் நோபல் பரிசு பெற்றவர்கள் பேசுவதற்கும் அதே உரிமை. இது முட்டாள்களின் படையெடுப்பு.

நான் அவ்வளவு தூரம் செல்ல மாட்டேன் ஆனால் உண்மை தெரியாமலேயே அதிகமான மக்கள் கருத்துக்களைக் கூறுகின்றனர் என்பதே உண்மை. நான் மேலே குறிப்பிட்ட காபியில் உள்ள தேநீர் (அல்லது தேநீரில் உள்ள காபி) சம்பவம் ஒரு தீவிர உதாரணம். இப்போது, போலிச் செய்திகளும் செயற்கை நுண்ணறிவும் அதை மோசமாக் கியுள்ளன. அசாதாரணமான விஷயம் என்ன வென்றால், மிகவும் விவேகமான உயர் படித்தவர்கள் கூட சமூக ஊடகங்களில் ‘உண்மைகளை’ கேள்வி கேட்பதில்லை. பழைய பத்திரிகை தந்திரம் சூழலுக்கு வெளியே மேற்கோள் காட்டுவதாகும். அந்த தந்திரம் தற்போது புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது. நீங்கள் சூழலுக்கு வெளியே மேற்கோள் காட்டுவது மட்டுமல்லாமல், சூழலை முழுவதுமாக மாற்றலாம். சமூக ஊடகங்களில் இதுபோன்ற தவறான தகவல்கள் மற்றும் குறும்புகள் நிறைந்துள்ளன.

என் இரண்டு மகன்களும் சூழல்களை மாற்றும் கலையில் வல்லவர்கள். அதிர்ஷ்டவசமாக, அவர்கள் இருவரும் முழுமையான முட்டாள்கள் அல்ல. அவர்களில் ஒருவர், அவரது தாயைப் போலவே, தேர்வு எழுதுவதில் மிகவும் திறமையானவர், மற்றவர், என்னைப் போலவே, தேர்வுகளில் பூஜ்யம், ஆனால் விபரீத தர்க்கத்தில் சிறந்து விளங்கினார். ஒருமுறை என் மனைவி சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மகனிடம் நல்ல மதிப்பெண்களை விட வாழ்க்கையில் இன்னும் நிறைய இருக்கிறது உதாரணமாக, கீழ்ப்படிதல் போன்ற குணங்கள் என்று சொன்னார். எப்பொழுதும் மோசமான மதிப்பெண்கள் பெற்ற மகன், இந்த தாய்மை ஞானத்தை சேமித்து வைத்தான். விடைத் தாளில் ஏன் இவ்வளவு பூஜ்ஜியங் கள் என்று கேட்டபோது, தான் மிகவும் கீழ்ப்படிந்ததாக கூறினார். இரண்டு உண்மைகள் ஆனால் சூழலுக்கு அப்பாற்பட்டவை மற்றும் கோபமூட்டும் விபரீத தர்க்கம்.■

ADVT.

CREATE HOPE in the WORLD

## ROTARY CLUB OF VIRUDHUNAGAR

PARIKSHAN CHARITABLE TRUST
Empowering society through Science...

# Rotary
District 3212



CROSSING OVER **500** PROGRAMS ALL OVER TAMILNADU

# VIGYAN RATH
## Science made easy

Rotary Club of Virudhunagar

## SUCCESSFUL JOURNEY OF SCIENCE ON WHEELS

As on 23.02.2024

Total No. of Schools Visited
**485**

Total No. of Colleges Visited
**15**

Total No.of Students Explored
**1,57,291**

Total No. of Days Travelled
**355**

Total No. of Teachers Participated
**6,616**

Total No. of Kilometres Travelled
**28,310**

The idea of Vignana Ratham is to kindle student's interest towards Science. It is to aid students in understanding the magic of Science through creative and fun-filled experiments. RID 3212 wondered how good it would be to take the best brains to institutions in all corners of Tamil Nadu. As a result, a tie-up was made with Parikshan Trust of an Indian Scientist, Dr. Pasupathy. Mr. Arivarasan, Mr. Naveen Kumar and Mr. Satheesh were assigned to travel in Vignana Ratham and meet students of various schools every day. Numerous students benefit out of this programme and we believe that we have seeded the fervor required to bring out a Scientist from every institution we visited.

**Rotary Club of Virudhunagar - Idhayam - Parikshan Vigyanrath**

| | Students | Teachers |
|---|---|---|
| ROTARY DISTRICT 3212 | 100,038 | 4388 |
| ROTARY DISTRICT 3203 | 47150 | 1901 |
| ROTARY DISTRICT 3000 | 2961 | 73 |
| ROTARY DISTRICT 2984 | 7142 | 254 |

LEKHA ads/Apr 24/ Rotary-2

**Do you want**
to have Vignana Ratham travelling
to a school in your Town / City / District?
We would love to partner with you in this mission.


Project Chairman
Rtn. R.Vadivel
94422 48586


Project Concept
Dr. Pasupathy

**GET IN TOUCH WITH US**

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

# UG / PG / Ph.D. & Professional Programmes

## CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES

3-Level certificate/Diploma/ Advanced Diploma alongwith Degree Programmes

## Career Counselling & Guidance

PSYCHOMETRIC TESTING ALSO AVAILABLE
https://icfia.org/iisu/psychometrictest

# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

Accredited by NAAC

FORMERLY
INTERNATIONAL COLLEGE FOR GIRLS

Nurturing Excellence

## IISU CENTRE FOR PREPARATORY CLASSES

▪ Civil Services ▪ NET ▪ US CMA



## DISTINGUISHING FEATURES

- **CONVEYANCE FACILITY** Covering all parts of Jaipur including remote areas
- **HOSTEL FACILITY** Safe Environment, A/C Rooms, Healthy Vegetarian Food
- **EXTRA & CO-CURRICULAR ACTIVITIES**
- **PLACEMENT SUPPORT**
- **WI-FI ENABLED CAMPUS**
- **EXTENSION ACTIVITIES**
- **NCC, NSS**
- **SPORTS**

## OUR PLACEMENTS

IBM, wipro, Infosys, Deloitte, TATA CAPITAL, tcs, amazon, airtel, hp, Deutsche Bank, Mindtree, zomato, Flipkart, paytm, genpact, EY, HDFC ERGO, CarDekho, IndiGo, Amway, ICICI Lombard, Network18, accenture

FOR COUNSELING AND QUERIES

| Arts & Social Sciences | Science | Commerce & Management |
|---|---|---|
| +91 9358819994 | +91 9358819995 | +91 9358819996 |

**IIS (deemed to be University)**
Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302020 Rajasthan (INDIA)
+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750
admissions@iisuniv.ac.in
www.iisuniv.ac.in